JL
M211, N34TP
N35 2-3
199435
199435

# தமிழ்ப் பெருமாட்டி


மலர் II. | 1935 JULY—ஜுலை மீ | இதழ் 3.


3




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1935
MADRAS



வடுவூர் கே. துரைஸ்வாமி ஐயங்கார் B.A.,



O211, N34tP
N35.2-3
199435

## முதலாவது ஆண்டின் சஞ்சிகைகள்

முதலாவது ஆண்டில் வெளியான பகுதிகள் அடியில் வருமாறு புஸ்தக ரூபமாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றன.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நாவல்-புஷ்பாங்கி அல்லது திடுப்பிரவேச மகா ஜாலப்பிரதேசியர் 1, 2 பாகங்கள் ... | 3 | 8 | 0 |
| சமய விளக்கம் ... ... ... | 0 | 8 | 0 |
| விஞ்ஞான வினவிடை ... ... ... | 0 | 8 | 0 |
| தேக தத்துவ சாஸ்திரம் ... ... | 0 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 5 | 0 | 0 |

எல்லாவற்றிற்கும் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இல்லாமல், ரூ. 5-க்கு எல்லா புஸ்தகங்களும் அனுப்பப்படும். ஒன்றை அல்லது சிலவற்றை மாத்திரம் வாங்கினால், தபாற் செலவு சேரும்.

இரண்டாவது ஆண்டில் புதிதாய் சந்தாதாரராய்ச் சேருவோருக்கு இவையாவும் ரூ. 3-8-0க்கு தபாற் செலவின்றி அனுப்பப்படும். ஏற்கனவே இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்பிவிட்டவர்கள் ரூ. 3-8-0 மணியார்டர் செய்வது போதுமானது. இனிமேல் சேருவோர் இரண்டு வருஷங்களுக்கும் சேர விரும்பினால் ரூ. 5-8-0 மணியார்டர் செய்யவேண்டும்.

## இனாம் புஸ்தகம்

இரண்டாவது வருஷத்திற்கு சந்தாத் தொகையை அனுப்புவோர், சந்தாத் தொகையோடு 8 அணா சேர்த்தனுப்பினால், ரூ. 1–8–0 விலை பெற்றதும், காலிகோ பைண்டு செய்ததும், இந்நூலாசிரியரால் எழுதப் பெற்றதுமான இங்கிலாந்து தேச சரித்திரமொன்று இனாமாய் அனுப்பப்படும். நேரில் பணம் செலுத்துவோர் 4 அணா கொடுப்பது போதுமானது.

இந்த இனாம் புஸ்தகம் 1935ஆம் ஜூலை மாதம் 30உ வரையில் சேருவோருக்கு மாத்திரமே கொடுக்கப்படும்.

ஏற்கனவே ரூ. 2 அனுப்பிவிட்டவர்கள் 8 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால், அல்லது, நேரில் 4 அணா செலுத்தினால், இந்த இனாம் புஸ்தகம் கிடைக்கும்.

19 JUL 1935

## அத்தியாயம்—5

### பழைய கருப்பனின் பாயசக் குழம்பு

முன் அத்தியாயங்களில் குறிக்கப்பட்டுள்ள சம்பவங்கள்
நிகழ்ந்ததற்கு சில தினங்களுக்கு முன்னர் அந்தமான்
தீவில் நிகழ்ந்த ஒரு விநோதச் சம்பத்தைத் தெரிவிப்ப தவசியமாத
லால் அதை இந்த அத்தியாயத்தில் கவனிப்போம். அந்தமான்
தீவென்பது வங்காளக் குடாக்கடலில் இருப்பது. இந்தியாவின்
பல பாகங்களிலுமுள்ள நீதிஸ்தலங்களில் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்
பெறும் குற்றவாளிகள் பதினைந்து வருஷகாலம் ஷை தீவில் இருக்கு
மாறு அனுப்பப்படுவார்கள். அந்தத் தீவின் தலைமையான இடம்
போர்ட் பிளேர் என்னும் துறைமுகம். அந்தத் தீவிற்கு அனுப்பப்
படும் குற்றவாளிகளை அடக்கியாண்டு அவர்களிடம் கிரமப்படி
வேலை வாங்கும்பொருட்டு போர்ட் பிளேரில் ஒரு தலைமை அதிகாரி
இருந்துவருகிறார். அவருடைய உபயோகத்திற்காக ஓர் ஆபீஸ்
ஏற்பட்டிருப்பதோடு, அவருக்கு உதவியாக பல உத்தியோகஸ்தர்
களும் வார்டர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தத் தீவிற்
குக் குற்றவாளிகளை ஏற்றிவரும் கப்பல்கள் கடலிலேயே தூரத்தில்
நிறுத்தப்படுவது வழக்கமன்றி, அந்தத் தீவில் வந்து நிற்பதில்லை.
கப்பல் தூரத்திலிருக்க, குற்றவாளிகள் படகின்மூலம் அந்தத்
தீவிற்கு அழைத்துச் செல்லப்படுவர். அந்தத் தீவில் விடப்படும்
குற்றவாளிகள் விலங்கு முதலிய பாதுகாப்புகள் இன்றி தாராள
மாய் விடப்பட்டிருப்பார்களாதலால், அவர்கள் திருட்டுத்தனமாய்த்
கப்பலில் ஏறித் தப்பி ஓடிப்போகாமல் இருக்கும்பொருட்டே அம்
மாதிரி கப்பல்கள் தூரத்திலேயே நிற்பதான ஏற்பாடு அநுஷ்டா
னத்தில் இருந்துவருகிறது.

இந்தக் கதை நிகழ்ந்த காலத்தில் அந்தத் தீவின் தலைமை
அதிகாரியாயிருந்தவர் ஓர் இந்தியக் கிறிஸ்தவர். அவருடைய பெயர்
மிஸ்டர் பறங்கிப்பழம் (Mr. Pumpkins) என்பது. அந்தப் பெயரின்
கருத்திற்கிணங்க, அவர் குண்டாகப் பறங்கிப்பழம்போலவே இருப்
பார். அவருடைய மனைவி யூரேஷிய ஜாதியைச் சேர்ந்தவள். அவர்க

ளுக்கு சுமார் 20வயதில் ஒரு மகள் இருந்தாள். மிஸ்டர் பறங்கிப்பழமூர், அவருடைய குடும்பத்தாரும் வசிப்பதற்காக, அவருடைய ஆபீஸிற்குப் பக்கத்தில் அழகான ஒரு பங்களா அமைக்கப்பட்டிருக்கிறது. அவரும், அவருடைய மனைவியும், பெண்ணும் துரை துரைஸானிகளின் நடையுடை பாவனைகளை அநுஷ்டித்தனர். மிஸ். பறங்கிப்பழம் என்னப்படும் புத்திரி பருவகால மடைந்து சில வருஷங்களாயிருந்தமையாலும், எப்போதும் எதையேனும் வைத்துத் தின்றுகொண்டே இருப்பதைத் தவிர அவளுக்கு வேறு உபயோகமான அலுவல் இல்லாதிருந்தமையாலும், அவள் நிரம்பவும் கொழுத்துச் செழித்துக் குதிர்போலப் பெருத்திருந்தாள்.

மிஸ்டர் பறங்கிப்பழத்தின்கீழ் வேலை பார்த்த உதவி அதிகாரியான இன்னொரு கிறிஸ்தவர் கலியாணமின்றி ஏகாங்கியாயிருந்தார். அவருக்கு சுமார் முப்பதுவயதிருக்கலாம். அவருடைய பெயர் மிஸ்டர் கருப்பன் (Mr Blackie). அவர் தமது உத்தியோகக் கடமைகளைச் செய்தபிறகு மிஸ்டர் பறங்கிப்பழத்தின் குடும்பத்தாரோடு அன்னியோன்னியமாய்ப் பழகிக்கொண்டிருப்பார். மிஸ்டர் கருப்பனும், மிஸ் பறங்கிப்பழம் என்னும் இளநங்கையும் முதன் முதலில் சாதாரணமாகவே பழகிக்கொண்டிருந்தனர். இருவருடைய குணதிசயங்களும் பரஸ்பரம் மனதிற்கு உகந்தவையாயிருந்தமையால், இருவரும் மிக சீக்கிரத்தில் அன்னியோன்னிய நட்பினராய் மாறிப் போயினர். அவ்விடத்தில் வேறு மனிதர் பலர் இல்லாததுபற்றி இருவரும் ஒருவருக்கொருவர் இன்றியமையாத பொழுதுபோக்கு சகாக்களாயிருந்தமையால் அவர்களது நட்பு மிக சீக்கிரத்தில் விரக வேனையாய் மாறிப்போயிற்று. இருவரும் எவருடைய ஆதங்கமுமின்றி அடிக்கடி ஏராளமாக முத்தங்கள் மாற்றிக் கொண்டனர். கடைசியில் ஒரு நாள் மிஸ்டர் கருப்பன் மிஸ் பறங்கிப்பழத்தின் முன்னர் மண்டியிட்டு சலாம் வாங்கி, அவள் தன்னையே விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று வேண்ட, அவள் மிக சுலபத்தில் அதற்கு சம்மதித்தாள்.

அவ்வாறு யௌவனப் பருவத்தினர் இருவரும் கலியாண ஏற்பாடு செய்துகொண்டது, பெற்றோருக்குத் தெரியவே, அவர்களும் அதற்கு சம்மதியளித்தனர். கூடியவிரைவில் அவர்களிருவருக்கும் விவாகச் சடங்கை நடத்திவிட வேண்டுமென்று எல்லோரும் ஆவல் கொண்டு, அதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்து



கொண்டிருந்தனர். ஆனால், அது நிறைவேறுவதற்கு ஓர் இடையூறிருந்தது. மிஸ்டர் கருப்பனுடைய தந்தை சென்னையில் போலீஸ் இலாகாவில் பெரிய உத்தியோகம் வகித்தவர்; அதிக செல்வாக்கு வாய்ந்தவர். புத்திரர் தாய்தந்தையரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்தவராதலால், தாம் ஒரு நடை சென்னைக்குப் போய்த் தமது பெற்றோருடைய அநுமதியைப் பெறவும், கூடுமானால், விவாகத்திற்கு அவர்களை அழைத்துக்கொண்டும் வரவேண்டுமென்று கருதினராதலால் தாம் சென்னைக்குப் போவதற்காக ரஜா பெற்றுக் கொண்டார். எவரேனும் அந்த ஊரை விட்டுப் போகவேண்டுமானால், தலைமை அதிகாரியிடம் பிரயாணச் சீட்டு பெற்றுக்கொண்டே போக வேண்டும். அந்தச் சீட்டிருந்தாலன்றி, எவரும் கப்பலில் ஏற அநுமதிக்கப்படமாட்டார். அவர் மறுநாளைய கப்பலில் ஏறிப் போகத் தீர்மானித்திருந்தாராதலால், அதற்காக முதல் நாள் பிற்பகல் மூன்று மணிக்கு மிஸ்டர் கருப்பன் துரை தலைமை அதிகாரியின் ஆபீஸிற்குப் போய்ச்சேர்ந்தார்.

அப்போது தலைமை அதிகாரி ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கெதிரில் ஒரு வார்டர் தீவாந்தர சிக்ஷை பெற்ற கைதியொருவனைக் கொணர்ந்து நிற்கவைத்து, "ஸார், இவன் சுத்த அயோக்கியனாகவும் வாயாடியாகவும் இருக்கிறான். நான் சொல்லும் வேலையைச் செய்ய மாட்டேனென்கிறான் ஸார்" என்றான்.

தலைமை அதிகாரி, "ஓகோ, அப்படியா; இதோ அவனை கவனிக்கிறேன்" என்று கூறிவிட்டு தமக்குப் பக்கத்தில் வந்து நின்ற உதவி அதிகாரியை நோக்கி, "என்ன மிஸ்டர் கருப்பன்? என்ன வேண்டும்?" என்றார்.

மிஸ்டர் கருப்பன்:—நாளையதினம் நான் சென்னைப்பட்டணம் போகத் தீர்மானித்துவிட்டேன். அதற்குப் பிரயாணச் சீட்டு வேண்டும்.

மிஸ்டர் பறங்கிப்பழம்:—யார் யாருக்கு?

மிஸ்டர் கருப்பன்:—எனக்கும், வார்டர் வீரப்பனுக்கும்.

மிஸ்டர் பறங்கிப்பழம்:—எஸ். இதோ எழுதித் தருகிறேன்—என்று கூறி, தமது மேஜையின்மேலிருந்த பிரயாணச் சீட்டுப் புஸ்தகத்தை எடுத்து, இரண்டு அநுமதிச் சீட்டுகளில் பெயர்கள் முத

ஷியவைகளை எழுதிக் கையெழுத்துச் செய்துகொடுக்க, மிஸ்டர் கருப்பன் அவைகளைப் பெற்றுக்கொண்டு வெளியில் போய்விட்டார்.

உடனே மிஸ்டர் பறங்கிப்பழம் கைதியை நோக்கி, “அடேய் 1030, நீ ஏன் ஒழுங்காக வேலைசெய்கிற தில்லை?” என்றார்.

1030ம் நம்பர் கைதி:—நான் எந்த வேலையையும் செய்து பழகினவனன்று, இந்த வார்டர் என்னை அநாவசியமாய் உபத்திரவிக்கிறான். நீந்தத்தெரியாதவனை நீந்து என்றால், அவன் எப்படி நீந்துவான்?

பறங்கிப் பழம் :—(கோபத்தோடு மேலும் கீழும் பார்த்து) ஓ, நீ எந்த வேலையையும் செய்து பழகவில்லையா! சாப்பிடமாத்திரம் பழகி இருக்கிறாயா! நல்லது; வார்டர், இவனைப் பார்த்தால் ஆள் மொழு மொழுவென்று வாட்ட சாட்டமா யிருக்கிறான். துரைஸானியம்மாளிடம் பூட்ஸ்காலால் உதைபட இவனுடைய உடப்பு தகுதியானதா யிருக்கிறது. இவன் பெரிய வாயாடி யென்பதை நான் பல தடவைகளில் கவனித்திருக்கிறேன். இவனுக்கு 6 சவுக்கடிகள் கொடுத்து, நம்முடைய பங்களாவில் கொண்டுபோய் விடு. அடிக்கடி இவனுக்கு சவுக்கடி கொடுத்தால்தான் இவனுடைய வாயாடித்தனம் போகும்—என்றார்.

உடனே வார்டர் எதிரில் சுவரில் மாட்டப்பட்டிருந்த சவுக்கை எடுத்து, சுளீர் என்ற சப்தத்தோடு அதை ஒரு சொடுக்குச் சொடுக்கி, கைதியின் முதுகில், ஒரு பழம் வழங்கினான். கைதி, “ஐயோ” என்று வீரிட்டலறியபடி கீழே சாய்ந்தான். உடனே வார்டர் புன்னகை செய்தபடி, “நாயே எழுந்திறடா; இப்படி யெல்லாம் நீ பாசாங்கு செய்தால், உன்னை விட்டுவிடுவேன் என்று நினைத்து மனப்பால் குடிக்கிறாயோ!” என்று கூறியபடி சுளீர் என்று அவனுடைய முதுகிலும் இடுப்பிலும் இன்னொரு தீட்டுத் தீட்ட, கைதி துள்ளிக்குதித்துத் துடி துடித்து, “ஐயோ, அப்பா, உயிர் போகிறதே, இனிமேல் நான் வேலை செய்கிறேன். என்னை அடிக்க வேண்டாம்” என்று கதறி ஓலமிட்டலறி பரிதாபகரமாக நாட்டியமாடத் தொடங்கினான். வார்டர் அவ்விதமாக தயை தாக்ஷணியமின்றி தண்டனை கொடுத்துக் கொடுத்துப் பழகியவனாதலால் கைதி சொல்வதைக் காதில் வாங்காமல், “ஒழுங்காய் வேலை செய்; தெரிகிறதா?” என்று கூறியபடி இன்னொரு முறை சவுக்கால் ஓங்கி சுளீர் என்று அடிக்க, கைதி தரையில்



நிற்காமல், “ஐயோ, அப்பா, ஐயோ அப்பா. உயிர் போகிறதே, அடிக்காதே அப்பா, இனிமேல் புத்தி வந்தது. ஒழுங்காய் வேலை செய்கிறேன்” என்று வாய் ஓயாமல் கூச்சலிட்டபடி தத்தித் தத்திக் குதிக்க, வார்டர் அதோடு நிறுத்தாமல், அதற்கு மேலும் மூன்று அடிகள் கொடுத்து, குற்றுயிராய்க் கீழே வீழ்ந்துவிட்ட அந்தக் கைதியைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு அருகிலிருந்த பங்களாவிற்குப் போய்ச்சேர்ந்தான்.

அப்போது, மிஸஸ் பறங்கிப்பழம் (தலைமை அதிகாரியின் மனைவி) பங்களாவின் முன்புறத்திலிருந்த தாழ்வாரத்தில் ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்து ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். 1030-ம் நம்பரும், வார்டரும் வந்ததைக் கண்டவுடன் துரைஸானியம்மாள் ஒய்யாரமாக நிமிர்ந்து வார்டரை நோக்கி, “யார் இந்தக் கழுதை? இவனுக்கு என்ன வேண்டுமாம்?” என்றாள்.

உடனே வார்டர், “இவனுக்கு எஜமானியம்மாளுடைய பூட்ஸ் காலின் உதைகள் வேண்டுமாம். எஜமானர் இவனை இங்கே வைத்துக்கொண்டு, ஆகவேண்டிய வேலைகளை இவனிடம் வாங்கிக்கொள்ளச் சொன்னார்” என்றான்.

துரைஸானி புன்னகையோடு, “ஓ! இவன் பூட்ஸ்கால் உதை கேட்கிறானா! அதற்காக எஜமானர் இங்கே அனுப்பினாரா! அவரிடம் பூட்ஸ் கால் இல்லையா! சரி; இருக்கட்டும். அதைப்பற்றி சமயம் வரும்போது யோசிப்போம். இங்கே குசினிக்காரனுக்கு 12 மணிமுதல் மலேரியா ஜுரம். அவன் படுத்துக்கொண்டிருக்கிறான். இவனை இப்போதே சமயலறையில் கொண்டுபோய் விட்டு இராத்திரிக்கு வேண்டிய பதார்த்தங்களைத் தயாரிக்கச் செய்” என்றாள்.

அப்போதும் வார்டருடைய கையில் சவுக்கு இருந்ததாகையால், அவன் அதை இன்னொரு முறை சுளீர் என்று சொடுக்கி கைதிக்கு பயமுண்டாக்கி, “போ உள்ளே” என்று அதட்டினான். கைதி மறுபடி தனக்கு அடி விழுமோ என்று அஞ்சி நடுங்கி விரைவாக உள்ளே பாயத் தொடங்கினான். அடுத்த நிமிஷம் இருவரும் சமயலறையை அடைந்தனர்.

சமயலறைக்குள் போய் நின்ற கைதி நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்துத் தனது தலையைச் சொரிந்துகொண்டு, பேந்தப்பேந்த விழித்து, "சமயல் எப்படிச் செய்கிறது? எனக்குத் தெரியாதே?" என்றான்.

அதைக் கேட்கவே, கோபத்தினால் வார்டருடைய கண்கள் சிவந்துபோயின. அவன், "உனக்கு எந்த வேலைதான் தெரியுமென்று நீ ஒப்புக்கொள்ளுகிறாய்! உனக்கு ஒன்றும் தெரியாது! நீ கவலைப்படாதே. உன்னை அடிக்கிற அடியில், உனக்குள் மறைந்துகொண்டிருக்கிற வேலைத்திறமை தானாகவே வெளியில் ஓடி வருகிறது பார்" என்று கூறி மறுபடி ஓர் அடி கொடுக்க, கைதி பயங்கரமாக ஊளையிட்டு, "ஐயோ அடிக்காதே அப்பா. உன் இஷ்டப்படி நான் சமயல் செய்கிறேன்" என்று கூறியபடி எதிரிலிருந்த ஸ்டவ்வை (Stove) எடுத்து வைத்து அதைப் பற்றவைத்தான். அச்சத்தினால் அவனுடைய கைகள் நடுங்கின. அந்த நிலைமையில், அவன், ஜலத்தோடிருந்த ஒரு கெட்டிலை எடுத்து ஸ்டவ்வின்மேல் வைத்தான்.

அப்போது சிறிது தூரத்தில் ஒரு மேஜையின்மேல் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்துகொண்டிருந்த வார்டர் கம்பீரமாக நிமிர்ந்து பார்த்து, "அடேய் ராஸ்கள், என்ன செய்கிறாய்? ஸ்டவ்வின்மேல் ஜலத்தை எதற்காக வைத்திருக்கிறாய்?" என்றான்.

கைதி நடுக்கத்துடன், "ஏதாவது செய்யச் சொன்னாயே! அதற்காக வைத்தேன்" என்றான்.

வார்டர்:—ஏதாவது செய்யப் போகிறாயா! என்ன செய்யப் போகிறாய்? வென்னீர் காய்ச்சு. உன் தலைமேல் கொட்டுகிறேன். அயோக்கிய நாயே. இராத்திரிக்கு சாப்பாடு தயார் செய்யச்சொன்னால், வென்னீரா சுடவைக்கப் போகிறாய்.

கைதி:—(கைகால் உதறலோடு ஸ்டவ்வின்மேல் இருந்த கெட்டிலை எடுத்துக் கீழே வைத்துவிட்டு) சரி; வென்னீர் வேண்டாம். நான் வேறே என்ன செய்யவேண்டும்? நீ சொல்லுகிறபடி செய்கிறேன்.

வார்டர்:—நான் சொல்ல வேண்டுமோ! நான் எதையும் சொல்லப் போகிறதில்லை. நீயேதான் செய்யவேண்டும். இராத்திரி என்



னென்ன சாப்பிடுவார்கள். குழம்பு, பதார்த்தம் முதலியவை வேண்டாமா?

கைதி:—இவர்கள் துரைகளல்லவா. ரொட்டி பிஸ்கோத் முதலியவை சாப்பிடுவார்கள். அதற்குக் குழம்பு எதற்காக. பிராத், சூப், புட்டிங்ஸ் எல்லாம் வேண்டும்.

வார்டர்:— என்னடா மூடக்கழுதை. எல்லாவற்றையும் தெரிந்துகொண்டே ஒன்றையும் அறியாதவன்போல் ஆட்டப்போடுகிறாயே. எடுக்கட்டுமா மாத்திரைக் கோலை—என்று கூறியபடி சவுக்கைக் கையில் எடுத்து அவனை நோக்கி ஒரு சொடுக்குச் சொடுக்க, அதன் நுனி அவனுடைய உடம்பில் பட்டு சதையைப் பெயர்த்துக்கொண்டு வந்தது.

அந்த அடியின் வேதனையை சகிக்க மாட்டாத கைதி, "எனக்கு எல்லாம் தெரியும். செய்கிறேன், செய்கிறேன்" என்று கதறியபடி அங்குமிங்கும் துள்ளிக் குதித்து, என்ன செய்வதென்பதை அறியாமல் மூளைக்குழப்பமடைந்து, ஒரு பக்கத்தில் ஒரு கண்ணாடி ஜாடியில் இருந்த மைதாமாவை யெல்லாம் ஒரு பெரிய பிங்கான் பேஸினில் கவிழ்த்துக்கொட்டி அதில் தண்ணீரை வார்த்துக் கரைக்கத் தொடங்கினான்.

வார்டர் கலகல வென்று நகைத்து, "அடே எருமைக்கடாவே! என்னடா செய்துவிட்டாய்? மாவையெல்லாம் ஏனடா கொட்டிக் கரைக்கிறாய்?" என்றான்.

கைதி:—பிராத் செய்யப் போகிறேன்.

வார்டர்:—அடே பாவி ஒரு மாதத்திற்கு வரக்கூடிய மாவைக் கரைக்கிறாயேடா!

கைதி:—இல்லை; அரைஜாடிதானே இருந்தது. துரை, துரைஸானி, மிஸி ஆகிய மூன்றுபேருடைய வயிறுகளும் அரைஜாடி அளவு இல்லையா! பிராத் தயாரானவுடன் மா கொஞ்சமாகிவிடும்—என்று கூறியபடி பக்கத்தில் இருந்த பச்சைக் காப்பிக்கொட்டை, கச்சல் கருவாடு, உப்பு, புளி, எண்ணெய், நெய், ஆளிவிதை, கடுகு, சர்க்கரை முதலியவைகளை யெல்லாம் எடுத்துக் கொட்டி, எல்லாவற்றையும் ஒன்றாய் அரைமணி காலம் பிசைந்துகொண்டிருந்தான். அதுவரையில் வேறு எதையோ கவனித்துக்கொண்டு மௌனமாகப் உட்கார்ந்திருந்த வார்டர், "என்னடா மடையா, அரைமணியாக ஸ்டவ்

வீணில் எரிந்துகொண் டிருக்கிறது. நீ வேறே எதையோ செய்து கொண் டிருக்கிறாயே. ஸ்டவ்வை அணை; மற்ற வேலைகளைச் செய்து வைத்துக்கொண்டு ஸ்டவ்வைப் பற்றவைக்கலாம்" என்று அதட்டலாகக் கூறினான்.

உடனே கைதி, "இதோ ஆய்விட்டது பிராத்" என்று கூறி பீங்கான் பேஸினை அப்படியே தூக்கி ஸ்டவ்வின்மேல் வைத்தான். உடனே பேஸினில் தீ உறைக்கத் தொடங்க, அதிலிருந்த கூழ் பொங்கி நாற்புறங்களிலும் வழிய ஆரம்பித்தது.

அதே காலத்தில் மிஸஸ் பறங்கிப்பழம், "என்ன வார்டர், என்ன தயாராகிறது? ஒரே நாற்றமாய் நாறுகிறதே!" என்று கேட்டபடி உள்ளே வந்தாள்.

வார்டர் குபீரென்று மேஜையை விட்டுக் கீழே இறங்கி வணக்கமாக நின்று ஏதோ சொல்ல வாரம்பித்தான். அதற்குள் மிஸஸ் பறங்கிப்பழம் ஸ்டவ்வைப் பார்த்துவிட்டாளாதலால், அவளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பிறந்துவிட்டது; அவள் "அடேடே! என்ன பித்துக்கொள்ளி வேலை இது! ஸ்டவ்வில் பேஸினை வைத்து நாசம் பண்ணுகிறாயே! எதற்காக இப்படிக் கூழ் காய்ச்சுகிறீர்கள்? புஸ்தகம் பைண்டு செய்யவா? அடேடே! வீட்டில் இருந்த மாவையெல்லாம் கூழாக்கிவிட்டீர்களே! அடே மூட நாய்களா! எடு எடு. பேஸினை முன்னால் கீழே இறக்கு" என்று கூறி தன் கையிலிருந்த புஸ்தகத்தால் ஓங்கி அந்தக் கைதியின் முதுகில் இடிக்க, கைதி அந்த வலியைப் பொறாமல் துள்ளிக்குதித்து, "இதோ இறக்கிவிட்டேன். இவர் பிராத் செய்யக் சொன்னார். அதைச் செய்கிறேன்" என்று கூறியபடி பேஸினைத் தொட்டு இறக்க, அதிலிருந்து அப்போதும் வழிந்துகொண்டிருந்த கூழ் அவனுடைய கைகளில் ஒட்டிக்கொண்டு சுட்டுவிட்டதாகையால், அவன் பேஸினை தடாரென்று கீழேபோட்டு, ஐயோ, அப்பா என்று கைகளை உதறிக்கொண்டு அங்கு மிங்கும் ஓட, அதைப் பார்த்து, கோபத்தோடு சிரித்த மிஸஸ் பறங்கிப் பழம், "அடே பித்துக்கொள்ளி ராஸ்கள். கைகளைத் தண்ணீரால் அலம்பிக்கொண்டு ஸ்டவ்வை நிறுத்து" என்று கூற, அவன் அப்படியே செய்தான். அப்போது மிஸஸ் பறங்கிப்பழம் வார்டரைப் பார்த்து, "வாட் நான்ஸென்ஸ் திஸ்? இவனை பிராத் செய்யச் சொன்னாயா? இது என்ன பிராத்? இதை நான் என் ஆயுள்காலத்திலேயே பார்த்ததில்லையே?" என்றாள்.



அப்போது வார்டர், "இல்லை அம்மா,. நான் சொன்னதைக் கேளாமல், இவனே இப்படிச் செய்கிறான். ஜாடியில் இருந்த மைதா மாவையெல்லாம் போட்டு, காப்பிக்கொட்டை, கருவாடு, உப்பு, புளி, சர்க்கரை, எண்ணெய், நெய், ஆளிவிதை, கடுகு எல்லாவற்றையும் கொட்டிக் கரைத்துக் கொதிக்க வைக்கிறான்" என்றான்.

அதைக்கேட்ட மிஸஸ் பறங்கிப்பழம் தனது கோபாவேசத்தை அடக்க மாட்டாதவளாய், "அடேடே! இதென்ன பிராத! இந்த உலகத்திலேயே இல்லாத புதிய பிராத்தா யிருக்கிறதே! ஒரு மாதத்திற்கு வரக்கூடிய சாமான்களையெல்லாம் கெடுத்துவிட்டீர்களே! யூ ஸெட் ஆப் இடியட்ஸ்" என்று கூறி, கைதியை நோக்கி பேசினை பூட்ஸ் காலால் விசையோடு உதைத்துத் தள்ள, அப்போது பக்கத்தில் கீழே உட்கார்ந்துகொண்டிருந்த கைதியின் முகம், மார்பு, கைகால்கள் முதலிய இடங்களிலும், சமயலறை, சுவர், மேஜை, நாற்காலி முதலிய எல்லாவற்றிலும் பசை தாறுமாறாய் சிதறிப் போயிற்று. அதன் சூட்டைத் தாங்கமாட்டாமல் கைதி துள்ளிக் குதித்துத் தாண்டவமாடி அங்கு மிங்கும் ஓடித் தவிக்கிறான். அவனுடைய இரண்டு கண்களிலும் அபாரமான எரிச்சல் உண்டாகி வதைக்கவே, அவன் ஐயோ ஐயோ என்று ஓலமிட்டலறி, தன் சட்டைத் துணியால் துடைத்துக்கொள்ள முயல, அப்போது வார்டர், தான் துரைஸானியின் கோபத்திற்கு இலக்காகாமல் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு, "அத் ராஸ்கல், சாமான்களைக் கெடுக்காதே கெடுக்காதே என்று நான் ஆயிரம் தடவை சொன்னேன். அதைக் கேட்காமல் எல்லாவற்றையும் பாழ்பண்ணுகிறாபா" என்ற அதட்டியபடி, தனது கையிலிருந்த சவுக்கினால், கைதியை அடிக்கவே, அவன் வீரிட்டலறிக்கொண்டு அவனுடைய சித்திரவதையிலிருந்து தப்புவதற்காக அங்குமிங்கும் ஓட, அவனுடைய நிலைமையைக் கண்டு அவன்மீது சிறிதளவு இரக்கம் கொண்ட மிஸஸ் பறங்கிப்பழம் வார்டரைப் பார்த்து, "போதும், அடிக்கவேண்டாம். நிறுத்து, அவன் கூழைத் துடைத்துக்கொள்ளட்டும்" என்றாள்.

உடனே வார்டர் அடிப்பதை நிறுத்தினான். ஆனாலும் கைதியை அதட்டி, "இவ்வளவு சாமானுடைய கிரயத்தையும இப்போது நீதான் கொடுக்க வேண்டும்" என்றான்.

கைதி, "எனக்கு சமயல் தெரியாதென்று நான் அப்போதே சொன்னேன். அதைக் காதில் வாங்காமல் எதையாவது செய்யச்

சொன்னாய். நான் கையில் அகப்பட்டதை எடுத்துப் போட்டுக் கொதிக்க வைத்தேன். சாமான்களைப் போட்டபோது நீ பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாய். இப்போது இவ்வளவுதூரம் ஏன் கோபிக்கிறாய்!" என்றான்.

உடனே துரைஸானி வார்டரை நோக்கி, "நீ சுத்த இடியட். சமயல் வேலை தெரியாதவனைக் கட்டாயப்படுத்தி அடித்தால், அவன் என்ன செய்வான். இவன் தாறுமாறாக சாமான்களைப் போட்டபோது நீ ஏன் பார்த்துக் கொண்டிருந்தாய் மடையா? நீ போ வெளியில். நான் கூப்பிடும்போது உள்ளே வா" என்றாள்.

உடனே வார்டர் எழுந்து வெளியில் போய்விட்டான். துரைஸானி கைதியைப் பார்த்து, "சரி; நான் சொல்லுகிறபடி செய்" என்று கூறித் தானே சமயல் வேலையை கவனிக்கலானாள். கைதியின் திகிலும், மூளைக் குழப்பமும் அப்போதும் தணியவில்லையாதலால், அவள் உப்பென்றால் அவன் பருப்பைக் கொடுப்பதும், புளியைக் கேட்டால், உள்ளியைக் கொடுப்பதுமாயிருக்க, தலைமை அதிகாரியான மிஸ்டர் பறங்கிப்பழமே அப்போது அங்கு வந்துசேர்ந்தார். துரைஸானி அவரிடம் அங்கே நிகழ்ந்த விஷயங்களைச் சொல்ல, துரை கைதியை நோக்கி "அடே முட்டாளே! நீ இங்கே உதவ மாட்டாய். நீ என்னோடு வா. நான் வேறே ஆளை அனுப்புகிறேன்" என்று கூறிக் கைதியை அழைத்துக்கொண்டு முன் பக்கம் போய், "அடேய், அந்தக் கட்டிலைத் துடை" என்றார்—கைதி ஒரு துணியை எடுத்துக்கொண்டு கட்டிலைத் துடைக்கத் தொடங்கினான். உடனே மிஸ்டர் பறங்கிப்பழம் வார்டரைப் பார்த்து, "நீ போய் சமயல் வேலை தெரியும் என்று சொல்லுகிற ஆசாமி ஒருவனை அழைத்துவா" என்றார். அவன் உடனே வெளியில்போய்விட்டான்.

அப்போது மிஸ்டர் பறங்கிப்பழம் எதையோ நினைத்துக் கொண்டவர் போல், "அடேய் 1030, அந்த பீரோவில் இருக்கும் சீசாவை எடுத்துக்கொண்டுவா" என்றார். கைதி கட்டிலைத் துடைப்பதை நிறுத்திவிட்டு, உடனே பீரோவிற் கருகில் சென்று அதைத் திறந்து உள்ளே இருந்த ஓர் ஒயின் சீசாவை எடுத்துக்கொண்டு வந்து, துரையிடம் கொடுத்துவிட்டு நின்றான். துரை அதன் கார்க்கைத் திறந்து, ஒரே மூச்சில் சுமார் அரைப்பங்களவு அந்த சீசாவிற்குள்ளிருந்த மதுரஸத்தை அருந்திய பிறகு கைதியைப்பார்த்து, "இடி



யட், நீ ஏன் நிற்கிறாய்? போய் வேலையைப்பார்" என்றார். உடனே கைதி கட்டிலண்டை சென்று மறுபடியும் துடைக்கத் தொடங்கி, அதே வேலையைச் செய்துகொண்டிருந்தான்.

இரவில் சுமார் எட்டுமணி ஆயிற்று. அப்போது பறங்கிப் பழத்தம்மாள், சாப்பாட்டை மேஜைமீது பரப்பிவிட்டு, மிஸ்டர் பறங்கிப் பழத்தை போஜனத்திற்கு அழைத்தாள். அவர் போய் உட்கார, தகப்பன், தாய், பெண் மூவரும் ஒன்றாயிருந்து இராச் சாப்பாட்டை நடத்தினர். அப்போது கைதி அங்கேயே இருந்து, அவர்களுடைய குற்றேவல்களைச் செய்துகொண்டிருந்தானாதலால், அவனுடைய நிலைமை நிரம்பவும் துன்பகரமானதாயிருந்தது. துரை அப்போது குடிவெறியிலிருந்தாராதலால் அவர் வாக்களித்தபடி கைதிக்கு அடிக்கடி பூட்ஸ்கால் ஒற்றிடம் கிடைத்துக் கொண்டே இருந்தது.

அவர்களுடைய வேலைகள் யாவும் இரவு பத்து மணிக்கு சம்பூர்ணமடைந்த பிறகு கைதி ஒரு ரொட்டித் துண்டும், ஒரு செம்பு தண்ணீரும் பெற்றுக் கொண்டான். மற்றவர்கள் அவரவர்களுடைய கட்டில்களில் படுக்கச்சென்றனர்.

தாழ்வாரத்தில் விடப்பட்ட கைதி தனது பழைய வரலாறுகளை நினைத்து வருந்தியபடி இருந்தான். அவனுக்குத் தூக்கம் உண்டாகவில்லையாதலால், அவன் எழுந்து சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான். தன்னுடைய உடம்பில் கூழ் பட்டதனால் தோல் பல இடங்களில் வழுவுண்டுபோயிருந்ததுமன்றி, உடம்பின் எரிச்சல் சகிக்கவொண்ணாததாயிருந்தது. ஆகவே, அவன் அவ்விடத்தை விட்டு எழுந்து பங்களாவைச் சுற்றிலும் சூழ்ந்து பரவியிருந்த சிங்கார வனத்திற்குள் நுழைந்து மெதுவாய் அங்கு மிங்கும் உலாவத் தொடங்கினான். அவ்வாறு அவன் சுமார் ஒரு மணி காலம் உலாவிய பின் அலுத்துப்போய் மணல் பாங்காயிருந்த ஒரு மரத்தடியில் இருளில் உட்கார்ந்துகொண்டான். பங்களாவில் இருந்த கடிகாரத்தில் அப்போது மணி பதினொன்றடித்தது. அப்போது பங்களாவின் பின்புறக் கதவை யாரோ திறந்துகொண்டு மெல்ல வெளிப்பட்டு வந்து, தான் உட்கார்ந்திருந்த மரத்திற்கு அடுத்த மரத்தினடியில் நின்றதை அவன் கண்டான். அப்போது வேறொரு திக்கிலிருந்து வந்த இன்னொருவர், "ஹலோ, மை டார்லிங், நீ எனக்காக நெடு

நேரமாய்க் காத்திருக்கிறாயா!" என்று நைவான குரலில் அன் பொழுகக் கூறியது கைதியின் செவிகளில் பட்டது. அவ்வாறு வந்த வர் உதவி அதிகாரியான மிஸ்டர் கருப்பன் என்றும், மரத்தடியில் ஏற்கனவே வந்து நின்றது மிஸ் பறங்கிப்பழம் என்றும் கைதி சுல பத்தில் யூகித்துக்கொண்டான். அவர்கள் இருவருக்கும் விவாகம் நடக்கப் போகிறதென்பதும், அவர் சென்னைக்குப் போக உத்தேசித் திருக்கிறாரென்பதும் கைதிக்கு நன்றாய்த் தெரியுமாதலால், அவன் அந்த விஷயத்தில் சுவாரஸ்யம் கொண்டு, அவர்கள் சம்பாஷித் ததை கவனிக்கலானான்.

புதிய காதலர் இருவரும் மேல்நாட்டாரின் தோரணைப்படி ஒருவரையொருவர் பிரேமையோடு ஆலிங்கனம் செய்து முத்தங் கள் கொடுத்துக்கொண்டபின் சம்பாஷிக்கத் தொடங்கினர்.

மிஸ்டர் கருப்பன் :—கண்ணே நான் உன்னிடம் சொன்னபடி பிரயாணச் சீட்டு வாங்கிக்கொண்டேன். நாளையதினம் புறப்படும் கப்பலில் சென்னைக்குப் போகிறேன். நான் திரும்பி மறுபடி உன் னைப் பார்க்க மூன்று தினங்கள் ஆகும். அதுவரையில் நான் உன் னைப் பிரிந்திருக்க நீ அநுமதி கொடுக்கவேண்டும்.

மிஸ் பறங்கிப்பழம் :—(கைக்குட்டையால் கண்களைக் கசக்கிக் கொண்டு) ஐயோ! மூன்று தினங்கள் பிடிக்குமா! அதுவரையில் நான் எப்படி சகிப்பேன்! உங்களை ஒரு நிமிஷம் பார்க்காவிட்டால், அது ஒரு யுகம்போல் வதைக்கிறதே! மூன்று பகல்கள், மூன்று இரவுகள் நான் உங்களைப் பார்க்காமலும், உங்களோடு கொஞ்சாம லும் எப்படி இருப்பேன்!

மிஸ்டர் கருப்பன் :—என் ஆருயிரே, கண்மணீ, நீ உன் மன நிலைமையை வெளியிடுகிறாய். நான் என் மன நிலைமையை வெளி யிட மாட்டாமல் தவிக்கிறேன். அவ்வளவே வித்தியாசம். உன்னை விட்டுப் பிரிந்து போகவேண்டுமென்று நான் எந்த நிமிஷம் தீர்மா னித்தேனோ, அதுமுதல் நான் பைத்தியம் கொண்டவன்போலவே இருக்கிறேன். என் கவனம் வேறு எந்த விஷயத்திலும் செல்லவில்லை.

மிஸ் பறங்கிப்பழம் :—அப்படியானால், நீங்கள் போகாமல் இருந்துவிடுகிறதுதானே! உங்கள் தாய் தகப்பனாரிடம் நேரில் போய்த்தான் கேட்கவேண்டுமென்பதென்ன. இது வெறும் மரி யாதைதானே. கடிதத்தின் மூலம் எழுதி அநுமதி கேட்டால்,



கொடுக்கிறார்கள். அவர்கள் அநுமதி கொடுக்காவிட்டாலும், நடப் பது நடக்கத்தான் போகிறது.

மிஸ்டர் கருப்பன்:—என் பெற்றோருக்கு நான் ஒருவன்தான் மகன். என் பொருட்டு அவர்கள் ஏராளமாகப் பணச்செலவு செய்து, என்னைப் படிக்கவைத்து, பெரிய துரைகளுக்கு சிபார்சு செய்து எனக்கு இந்த உத்தியோகமும் சம்பாதித்துக் கொடுத்தார் கள். ஆகையால்......

மிஸ் பறங்கிப்பழம்:—ஆசையாம், இவ்வளவுதூரம் உங்களுக் காகப் பாடுபட்டவர்களுக்கு இன்னமும் நீங்கள் சிரமம் கொடுக்கா மல், உங்களுக்குத் தகுதியான மனைவியைத் தேடும் பிரயாசையை அவர்களுக்கு வைக்காமல், நீங்களே என்னைத் தேடி சம்பாதித்துக் கொண்டீர்கள். இது விஷயத்தில் அவர்கள் சந்தோஷம் அடைய வேண்டும். அப்படி இருக்க, நீங்கள் நேரில் போகவில்லை என்பதற் காக அவர்கள் உங்கள்மேல் ஏன் ஆயாசப்படப்போகிறார்கள்.

மிஸ்டர் கருப்பன்:—(சந்தோஷ முகமலர்ச்சி காட்டி) என் கண்ணாட்டி, நீ எடுத்துக் காட்டும் நியாயம் ஒழுங்கானதுதான். ஆனால் இன்னொரு விஷயம் இருக்கிறது. நான் அவர்களுடைய அநுமதியைப் பெறுவதற்கு மாத்திரம் போகவில்லை. உனக்கு சன் மான மளிப்பதற்கு விலையுயர்ந்த ஏராளமான 'ஸில்க்' ஆடைகளை யும், வைர நகைகளையும் வாங்கி வரத் தீர்மானித்திருக்கிறேன். அவைகளை நேரில் வாங்காவிட்டால், அவ்வளவு திருப்தி உண்டா காது. அதற்காகவே நான் முக்கியமாய்ப் போகிறேன். என் உள் கருத்து இதுவாயிருந்தாலும், என் பெற்றோர் தங்களுடைய அநு மதிக்காக வந்ததாக நினைத்து சந்தோஷமடைவார்கள். அவர்க ளுடைய பிரியம் நமக்கு இருக்கிறவரையில் நமக்கு லாபமே யொழிய நஷ்டமில்லை. அவர்கள் தேடுகிற பொருள்கள், நமக்கே ஆகப் போகின்றன. என் தகப்பனார் பெரிய துரைமார்களிடம் சிபார்சு செய்து எனக்கு இதைவிட இன்னம் உயர்வான உத்தியோகம் செய்துவைப்பார்.

மிஸ். பறங்கிப்பழம்:—எனக்காக ஆடைகளும் நகைகளும் வாங் குவதற்காக நீங்கள் போகும் பட்சத்தில், அதைப்பற்றி நான் ஆட் சேபனை சொல்வது, உங்களுடைய மனதைப் புண்படுத்துவதுபோ லாகும். நானும் நேரில் வந்திருந்து அவைகளை வாங்கினால், என்

மனதிற்கும் திருப்தி உண்டாகும். ஆனால், என் பெற்றோர் என்னை உங்களோடு அயலூருக்கு அனுப்பமாட்டார்கள். ஆகையால், நான் எப்படியாவது என் மனதை அடக்கிக்கொண்டு இந்த மூன்று தினங்களும் பிரிந்திருக்கிறேன். நீங்கள் தனியாகவே போகப்போகிறீர்களா? உங்களுக்குக் குற்றேவல் செய்ய ஒரு வார்டரையும் அழைத்துக்கொண்டு போகலாமே. அதிகாரமெல்லாம் அப்பாவுடையதுதானே. அதைப்பற்றி யார் ஆட்சேபிக்கப்போகிறார்கள்.

மிஸ்டர் கருப்பன்:—நீ இந்த மாதிரி விரும்புவாய் என்பதை நான் முன்னால் யூகித்து, அதே போலத்தான் செய்யப்போகிறேன். நான் ஒரு வார்டரையும் அழைத்துக்கொண்டு போக உத்தேசிக்கிறேன். இரண்டு பிரயாணச் சீட்டுகள் வாங்கிவிட்டேன்.

மிஸ். பறங்கிப்பழம்:—எனக்காக சும்மா சொல்லுகிறீர்கள்.

மிஸ்டர் கருப்பன்:—நிஜமாகவே சொல்லுகிறேன். பிரயாணச் சீட்டுகள் இதோ சட்டைப் பையில்தான் இருக்கின்றன. ஒன்றா இரண்டா என்பதைப் பார்க்கிறாயா?

மிஸ். பறங்கிப்பழம்:—நீங்கள் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லும்போது, நான் சம்சயங்கொள்வது சரியல்ல; நீங்கள் சொன்னதே போதும்; காட்டவேண்டாம். கப்பல் எப்போதும் வரும்?

மிஸ்டர் கருப்பன்:— அது இந்நேரம் வந்திருக்கும். அதில் வந்திருக்கும் கைதிகளையெல்லாம் படகில் வைத்து இங்கே விடியற்காலம் நான்குமணிக்குக் கொண்டுவந்து இறக்குவார்கள். அவர்களை வார்டர்கள் ஒப்புக் கொண்டவுடன், இங்கிருந்து போவோரை ஏற்றிக்கொண்டு படகு நாலரை மணிக்குப் புறபபடும். அதில்தான் நானும், என் ஆளும் போகவேண்டும்.

மிஸ். பறங்கிப்பழம்:—அப்படியா! இப்போது மணி பதினொன்றரை இருக்குமே; நீங்கள் விடியற்காலம் எழுந்திருக்க வேண்டும். நடுவில் கொஞ்சமாவது நீங்கள் தூங்கவேண்டாமா; நீங்கள் போய்ப் படுத்துக்கொள்வது நல்லதென்று நினைக்கிறேன்—என்றாள்.

அதுவரையில் அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த 1030 நம்பர் கைதி எதையோ நினைத்துக்கொண்டவன்போல குபீரென்று எழுந்து, விரல்களை ஊன்றி நடந்து, அவர்கள் தன்னைப் பார்க்காதபடி பங்களாவை யடைந்து, அந்த மடந்தை திறந்து வைத்துவிட்டு வந்த வாசற்படியின் வழியாக உள்ளே



நுழைந்து, முக்கியமான ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு விரைவாக வெளியில் வந்துவிட்டான். அந்தப் பெட்டி ஒரு கஜ நீளம், ஒன்றரை அடி அகலம், ஒன்றரையடி உயரம் உள்ளதாயிருந்தது. கைதி அந்தப் பெட்டியுடன் வந்து முன்னிருந்த மரத்தடியில் உட்கார்ந்துகொண்டான். அந்த இடைக்காலத்தில் காதலர் இருவரும் ஆலிங்கனம் முதலிய பிரிவுச் சடங்குகளை நடத்திக்கொண்டிருந்தனர். முடிவாக, மிஸ். பறங்கிப்பழம், "நான் போய்வருகிறேன் சாவதானமாய்ப் போய் க்ஷேமமாய்த் திரும்பிவாருங்கள்" என்று கூறிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு பங்களாவிற்குள் சென்று கதவை மூடி உள்புறத்தில் தாளிட்டுக்கொண்டாள்.

மிஸ் கருப்பன் தன் மனதைக் கவர்ந்த அந்த மடந்தையை விட்டுப் பிரிந்துபோக மனமற்றவராய், அவள் கதவை மூடிக்கொண்டு உள்ளேபோன பிறகும், சிறிதுநேரம் அந்த இன்பகரமான கவர்ச்சியில் மதிமயங்கி நின்றபின் அரை மனதோடு புறப்பட்டுப் போகத் தொடங்கினார். கைதி தன் கையிலிருந்த பெட்டியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு அவரைப் பின்தொடர்ந்து செல்லலானான். சின்னதுரை அந்த பங்களாவை விட்டு வெளிப்பட்டு சிறிது தூரம் சென்றுகொண்டிருந்தார். அப்போது பின்னால் சென்ற கைதி தன் கையில் கெட்டியான நூல் கயிறொன்றை வைத்துக்கொண்டே ஓசை செய்யாமல் பாய்ந்து, கயிற்றின் இரண்டு நுனிகளையும் இரண்டு கைகளிலும் பிடித்துக்கொண்டு, தொய்வாயிருந்த அதன் நடுபாகத்தை மிஸ்டர் கருப்பனுடைய தலைக்கு மேலாகப் போட்டுக் கழுத்திற்குக் கொணர்ந்து இரண்டு முனைகளையும் கெட்டியாய் ஒரே நிலையில் பிடித்து சரேலென்று முடிபோட்டு இறுக்க, அவர் மூச்சுவிட மாட்டாமல் திக்குமுக்காடி பொத்தென்று கீழே விழுந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு தத்தளிக்கத் தொடங்கினார்.

* * * * *

மறுநாளைய விடியற்காலை 4-15 மணிக்கு துறைமுகத்தில் ஒரு படகு புறப்பட ஆயத்தமாயிருந்தது. கரையில் இரண்டு வார்டர்கள் காவல்காத்து நின்றனர். கப்பலிலிருந்து புதிய கைதிகளை அழைத்துக் கொணர்ந்தவர்களான இருவர் மாத்திரம் படகில் இருந்தனர். மிஸ்டர் கருப்பன் தன்னுடைய வார்டருடன் பத்து நிமிஷகாலத்தில் வருவதாய்ச் செய்தி சொல்லி அனுப்பி இருந்தாராதலால், அவருடைய வருகையை இருவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

படகு புறப்பட 5 நிமிஷகாலம் இருந்தபோது, இருவர் வந்து படகில் ஏறினர். ஒருவர் பூட்ஸ், தொப்பி, நிஜார், மேல்சட்டை முதலிய அலங்காரங்களோடிருந்தார். அவருடன் வந்தவன் ஒரு வார்டரின் உடுப்புகளையும் தொப்பியையும் அணிந்துகொண்டிருந்தான். அவர்கள் இருவரும் தங்கள் பயணச்சீட்டுகளைக் கரையிலிருந்த வார்டர்களுக்குக் காட்டினரானாலும், அவர்கள் கைதிகளைப்போல் இல்லாமல் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாயிருந்தமையால், வார்டர்கள் சம்சயங்கொள்ளாமல், பயணச் சீட்டுகளைப் பிரித்துப் பார்க்காமல், படகில் ஏற அநுமதித்துவிட்டனர். அவர்கள் படகில் ஏறியவுடனே படகு கப்பலை நோக்கி வலிக்கப்பட்டது.

அப்போது மிஸ்டர் கருப்பன் படகிலிருந்தவர்களைப் பார்த்து, "கப்பல் எத்தனை மணிக்குப் புறப்படப் போகிறது?" என்றார்.

ஒருவன், "படகு போனவுடன், நாம் கப்பலில் ஏறவேண்டியதுதான் தாமதம். உடனே படகை மேலே தூக்கிவிடுவார்கள். கப்பல் புறப்பட்டுவிடும். ஏன், உங்களிடம் பிரயாணச்சீட்டு இருக்கிறதல்லவா?" என்றான்.

மிஸ்டர் கருப்பன் புன்னகை செய்தபடி, "என்னப்பா! பயணசீட்டில்லாவிட்டால் கரையில் இருப்பவர்கள் எங்களைப் படகில் ஏற்றுவார்களா? நீ கேட்கிறதைப் பார்த்தால், இந்த வேலைக்குப் புதிதாய் வந்திருப்பவன்போல் இருக்கிறதே" என்றார்.

அந்த ஆள், "ஆம் நாங்கள் இருவரும் புதிய ஆள்கள்தான். அதனால்தான் கேட்டேன்" என்றான்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை நின்றுவிட்டது. அதன் பிறகு அரைநாழிகை காலத்தில் படகு கப்பலண்டை போய்ச் சேர, அதிலிருந்து தொங்கிய ஏணியின் வழியாக நால்வரும் மேலே ஏறிக் கப்பலுக்குள் சென்றனர். படகும் உயர்த்தப்பட்டது; அப்போது கப்பல் தலைவர் மிஸ்டர் கருப்பனிடம் வந்து, "உங்கள் பயணச்சீட்டைக் காட்டுங்கள்" என்றார்.

உடனே மிஸ்டர் கருப்பனும், அவருடைய வார்டரும் தம் தம் பயணச்சீட்டை எடுத்து மிக விநயமாகத் தலைவருக்குக் காட்ட மிஸ்டர் பறங்கிப்பழத்தின் படாடோபமான கையெழுத்தையும்



அந்த அச்சு பாரத்தையும் பார்த்த உடனேயே, கப்பல் தலைவர் திருப்தியடைந்து மற்ற விவரங்களை அதிகமாய் கவனிக்காமல் அசட்டையாக அவைகளைத் திருப்பிக் கொடுத்தபடி, "உங்கள் பெயர் மிஸ்டர், ஜே. கருப்பன் என்று காணப்படுகிறதே. போர்ட் பிளேரில் அதே பெயருடைய உதவி அதிகாரியொருவர் இருக்கிறதாக எனக்கு நினைவுண்டாகிறதே. அவரா நீங்கள்?" என்றார்.

மற்றவர் சிறிதும் தயங்காமல், "நான் அவருடைய அண்ணன். ரெங்கூனில் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தேன். இப்போது சென்னைக்குப் போகிறேன்" என்றார்.

தலைவர் அதை ஒப்புக்கொண்டு, "ரெங்கூனில் உமக்கு என்ன வேலையோ?" என்றார்.

மற்றவர், "ரெங்கூனில் நான் வயர்லெஸ் ஆபரேட்டர் உத்தியோகம் பார்ப்பவன்" என்றார்.

தலைவர் மகிழ்ச்சியோடு, "ஓ! நல்லதாயிற்று" என்று கூறியபடி தற்செயலாக வார்டருடைய காலைப் பார்த்தார். ஒரு காலில் முழங்காலின் கீழ் பாகம் முழுதிலும் பெரிய துணிக்கட்டு போடப்பட்டிருந்தது. தலைவர், "வார்டருடைய காலில் ஏன் கட்டுப் போடப்பட்டிருக்கிறது?" என்று வினவினார்.

மிஸ்டர் கருப்பன், "இவனுடைய காலில் யாரோ ஒரு துஷ்டக் கைதி கத்தியால் வெட்டிவிட்டானாம். புண் ஆறவில்லை; பட்டணத்தில் உள்ள பிரபல டாக்டர்களிடம் காட்டும்படி, என் தம்பி இவனை என்னுடன் அனுப்பினான்" என்றார்.

அப்போது கப்பல் புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதாகையால், கப்பல் தலைவர் அவர்களை விட்டு அப்பால் போய்விட்டார்; போனவுடன், கப்பல் புறப்பட்டுப் போக வாரம்பித்தது.

மிஸ்டர் கருப்பனும், அவருடைய வார்டரும் தனியான ஓரிடத்தில் ஒன்றாகவே இருந்தனர். இருவரும் தாங்கள் சென்னைக்குப் போனபின் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி திட்டங்கள் போட்டுக்கொண்டிருந்தனர். அதன் பிறகு மிஸ்டர் கருப்பன் அந்தக் கப்பலில் கம்பியில்லாத் தந்தியைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அறைக்குப் போய் அங்கிருந்த உத்தியோகஸ்தரோடு பேசிப் பரிச்சயம் செய்துகொண்டு, சிறிது நேரம்

சம்பாஷித்திருந்தபின் தமது இருப்பிடத்திற்கு வந்துவிட்டார். அவர் அவ்வாறு போய் வந்ததை எவரும் கவனிக்கவில்லை.

காலை சுமார் பத்துமணி சமயமாயிற்று. அப்போது கப்பல் தலைவர் அங்கே வந்துசேர்ந்தார். அவருடைய முகம் வாட்டமடைந்து விசனகரமாக மாறிப்போயிருந்தது. அதை கவனித்த மிஸ்டர் கருப்பன், "என்ன ஸார்? உங்களுக்கு உடம்பில் ஏதேனும் அசௌக்கியம் உண்டா? முகம் வாட்டமாயிருக்கிறதே" என்று மிகவும் கனிகரமாய்க் கேட்க, அவர் ஓரளவு ஊக்கம் கொண்டவராய், "கொஞ்ச நேரத்திற்குமுன் கப்பலில் ஒரு விசனகரமான காரியம் நிகழ்ந்துவிட்டது. எங்களுடைய வயர்லெஸ் ஆபரேட்டர் நேற்றிரவு வரையில் ஆரோக்கியமாயிருந்தவர் திடீரென்று இறந்துபோய்விட்டார்" என்றார்.

மிஸ்டர் கருப்பன் :—(வியப்பும் விசனமும் தோற்றுவித்து) ஆ! அப்படியா! மனிதர் திடீரென்று இறப்பதென்றால் இருதயக் கோளாறாய்த்தானிருக்கும்.

கப்பல் தலைவர் :—டாக்டர் அவருடைய உடம்பைப் பரீட்சித்துப் பார்த்தார். உடம்பு முழுதும் நல்ல பாம்பின் விஷம் ஏறி இருக்கிறது. இந்தக் கப்பல் முழுதிலும் தேடிப்பார்த்துவிட்டோம். பாம்பு எங்கும் அகப்படவில்லை தண்ணீரிலேயே இருக்கும் கப்பலில் நல்ல பாம்பு வரக்காரணமே இல்லை.

மிஸ்டர் கருப்பன் :—டாக்டர் நல்ல பாம்பின் விஷம் என்று சொல்வது தப்பாயிருக்கலாம்.

கப்பல் தலைவர் :—அது எப்படியாவது இருக்கட்டும். ஏதோ ஒரு விஷத்தினால் அவர் இறந்துபோய்விட்டார். அதுவரையில் நிச்சயமானது.

மிஸ்டர் கருப்பன் :—இதைக் கேட்க, எனக்கு நிரம்பவும் விசனமுண்டாகிறது. ஏனென்றால், நானும் இதே மாதிரியான உத்தியோகம் பார்க்கிறவனாகையால், இந்த அவகேடு எனக்கே நேர்ந்துவிட்டதுபோல, என் மனம் தவிக்கிறது.

கப்பல் தலைவன் :—இந்த எதிர்பாராத அபாய சமயத்தில் நல்ல அதிர்ஷ்டமும் கொஞ்சம் கலந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

மிஸ்டர் கருப்பன் :—எதை அதிர்ஷ்டம் என்கிறீர்கள்?



கப்பல் தலைவன் :—கம்பி இல்லாத்தந்தி இயந்திரங்களை கவனித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கூடியவர் இந்தக் கப்பலில் வேறு எவருமில்லை. இந்தக் கப்பல் சென்னைக்குப் போவதற்குள் எவ்விதமான அவசரச் செய்தி வந்தாலும் அதை அறிந்து பெற்றுக்கொள்ள ஒருவர் அவசியம் தேவை. அவர் இறந்துபோன சமயத்தில் அதே உத்தியோகம் வகிப்பவரான நீங்கள் இங்கே இருப்பது ஒரு பெரிய அதிர்ஷ்டமல்லவா!

மிஸ்டர் கருப்பன் :—அப்படியானால் அந்த உத்தியோக அலுவலை நான் கவனிக்கவேண்டுமென்கிறீர்களா?

கப்பல் தலைவன் :—நான் உங்களுக்கு இந்த சிரமத்தைக் கொடுத்தே தீரவேண்டியிருக்கிறது. இந்தக் கப்பலில் ஏராளமான செய்திகள் வருவது வழக்கமில்லை. ஒரு நாளைக்கு ஒரு செய்தி கிடைத்தால், அதுவே அரிது. ஆனால், அங்கே ஓர் உத்தியோகஸ்தர் அவசியம் காத்துக்கொண்டிருப்பது அத்தியாவசியமாயிருக்கிறது. நீங்கள் இங்கே இருப்பதை அங்கே இருங்கள்; சென்னைக்குப் போனபிறகு வேறு காயமான உத்தியோகஸ்தரை நாங்கள் நியமித்துக் கொள்ளுகிறோம். அதுவரையில் நீங்கள் அதை கவனித்தால், அதற்கு ஏற்பட்டுள்ள சம்பளத்தை உங்களுக்குக் கொடுக்கச் செய்கிறேன்.

மிஸ்டர் கருப்பன் :—நான் சம்பளத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படுகிறவனன்று. இந்த அபாய சமயத்தில் யாரும் உதவி செய்யக் கடமைப் பட்டவர்கள் என்ற ஒரு காரணத்தினாலேயே, நான் இதற்கு இணங்குகிறேன். அந்த இடத்தைக் காட்டுங்கள்.—என்றார்.

உடனே கப்பல் தலைவன் மிஸ்டர் கருப்பனை அவருடைய வார்டரோடு அழைத்துக் கொண்டுபோய், கம்பியில்லாத் தந்தியின் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்த இடத்தைக் காட்டினார். மிஸ்டர் கருப்பன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். வார்டர் சற்று தூரத்தில் பெட்டியோடு உட்கார்ந்துகொண்டான். மேலும், கப்பல் தலைவர் மிஸ்டர் கருப்பனுக்கு உபசார வார்த்தைகள் கூறித் தமது நன்றியறிதலைத் தெரிவித்தபின் தமது இதர கடமைகளை கவனிக்கும்பொருட்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

மிஸ்டர் கருப்பனுக்கும், அவருடைய வார்டருக்கும் தேவையான சாப்பாடு முதலியவைகள் அவ்விடத்திற்கே வந்துசேர்ந்தன.

ஒரு மணி நேரத்திற் கொருதரம் கப்பல் தலைவர் அங்கே வந்து ஏதேனும் விசேஷச்செய்தி வந்திருக்கிறதா என்று கேட்டுவிட்டுப் போனார். மாலை 4-மணி வரையில் எங்கிருந்தும் எந்தச் செய்தியும் வரவில்லை. ஆனால் நான்கு மணிக்கு அந்தக் கப்பலின் பெயரைச் சொல்லி யாரோ அழைத்தது தெரிந்தது 'வில்லி' என்பது அந்தக் கப்பலின் பெயர். 'வில்லி' 'வில்லி' என்பதற்குரிய எழுத்துக்கள் ஒலித்தன. உடனே மிஸ்டர் கருப்பன் அந்த அறையின் கதவை மூடி வைத்துவிட்டு, அந்த இயந்திரத்தின் ரிஸீவரை எடுத்து வைத்துக்கொண்டு, "ஆம். நான் 'வில்லி' கப்பலிலிருந்து பேசுகிறேன். நீங்கள் யார்? என்ன விசேஷம்?" என்று வினவினார்.

மற்றவர் :—நான் போர்ட் பிளேரிலிருந்து பேசுகிறேன். இன்றையதினம் மிஸ்டர் கருப்பனையும், வார்டர் வீரப்பனையும் கப்பலில் ஏற்றிக்கொண்டீர்களே! அவர்களைத் தவிர வேறு எவரையாவது கப்பலில் ஏற்றிக்கொண்டீர்களா?

மிஸ்டர் கருப்பன் :—வேறு யாரையும் ஏற்றிக்கொள்ளவில்லை. பயணச்சீட்டு இல்லாதவரை நாங்கள் ஏன் ஏற்றிக்கொள்ளுகிறோம். எதனால் உங்களுக்கு இவ்வித சந்தேகமுண்டாயிற்று?

மற்றவர் :—இங்கே இருந்த இரண்டு கைதிகள் காணப்படவில்லை. அவர்கள் ஒரு வேளை உங்கள் கப்பலில் ஏறி இருக்கிறார்களோ என்ற சந்தேகத்தினால் கேட்கிறோம். எல்லாவற்றிற்கும், நீங்கள் கப்பலின் அடிப்பாகங்கள் சாமான அறைகள் முதலியவற்றை ஆராய்ந்து பாருங்கள்.

மிஸ்டர் கருப்பன் :—பார்க்கிறோம். கைதிகளின் அடையாளங்களைச் சொல்லுங்கள்.

மற்றவர் :—(அடையாளங்களை விரிவாகச் சொல்லி) ஒருவனுடைய பெயர் சட்டநாதன்; இன்னொருவனுடைய பெயர் மாசிலாமணி. மாசிலாமணி என்பனுக்கு ஒரு காலில் முழங்கால் வரையில் வெட்டப்பட்டு, கட்டைக்கால் வைக்கப்பட்டிருக்கும்.

மிஸ்டர் கருப்பன் :—கொஞ்சம் இருங்கள்; ஆள்களை விட்டுத் தேடச் செய்கிறோம்—என்றார்.

அதன் பிறகு மிஸ்டர் கருப்பன் தமக்குப் பக்கத்திலிருந்த வார்டர் வீரப்பனிடம் சுமார் கால்மணி வரையில் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்த பின் போர்ட் பிளேர் வயர்லெஸ் ஸ்டே-



ஷன் அதிகாரியைக் கூப்பிட்டு, "நாங்கள் கப்பல் முழுதிலும் ஓர் இண்டு இடுக்குகூட விடாமல் தேடிப் பார்த்துவிட்டோம். நீங்கள் குறித்த அடையாளங்களுடைய கைதிகள் இங்கே இல்லை. இது நிச்சயமான விஷயம் அவர்கள் அந்தத் தீவில்தான் எங்கேயாவது மறைந்துகொண்டிருக்கவேண்டும்; அல்லது, கடலில் விழுந்து செத்துப்போயிருக்கவேண்டும்—என்று உண்மைபோலக் கூறினார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. அதன் பிறகு கால மணியில் கப்பல் தலைவன் வந்து ஏதேனும் விசேஷம் உண்டா என்று கேட்க, மிஸ்டர் கருப்பன், "ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டார்.

அதன் பிறகு உரிய காலத்தில் கப்பல் சென்னைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. மிஸ்டர் கருப்பன் வார்டர் வீரப்பனுடன் இறங்குவதற்கு முன் கப்பல் தலைவரிடம் போய் சொல்லிக்கொள்ள, அவர் மிஸ்டர் கருப்பனுக்குத் தமது நன்றியறிதலைத் தெரிவித்து, அவருக்குச் சேரவேண்டிய சம்பளப்பணம் ரூ 25 சொச்சத்தை உடனே கொடுத்து, கையைக் குலுக்கி சலாம் வைத்து வெளியில் அனுப்பினார். மிஸ்டர் கருப்பனும், வார்டர் வீரப்பனும் துறைமுகத்தை விட்டு வெளிப்பட்டு சென்னைப் பட்டணத்திற்குள் புகுந்து மாயமாய் மறைந்துபோயினர்.

---

## அத்தியாயம்—6

### நரியைக் குளிப்பாட்டிய நாகூர் மீரா லெப்பை

ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளையின் பங்களாவில் திருட்டு நடந்த தினத்திற்கு மறுநாட்காலை 7-மணி சமயமிருக்கும். சுயமரண புரம் போலீஸ் தலைவர் மிஸ்டர் லவ்லக் துரையும், ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர்மீரா லெப்பையும் முன்னவருடைய பங்களாவில் அடியில் வருமாறு பேசிக்கொண்டிருந்தனர்.

நாகூர்மீரா லெப்பை :— வேடிக்கையை என்னவென்று சொல்லுவேன்! ராவ்ஸாகேப் ஐயருக்கு நேற்று ஏதோ அவசரமான தந்தி வந்ததாம். அவர் உடனே புறப்பட்டு தமது மோட்டார்

வண்டியில் ஏறிக்கொண்டு போய்விட்டாராம். விடியற்காலையில் மற்றவர்களும் புறப்பட்டுப் போய்விட்டார்களாம். நான் விடியற்காலம் போய் பார்த்தால் இடம் சுத்த காலியாயிருக்கிறது. நாம் அனுப்பிய ஆர்டர்லிகள் இருவரும் குறட்டைவிட்டு சௌக்கியமாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மிஸ்டர் லவ்லக் :—நீங்கள் சொல்வது பெரிய அதிசயமாயிருக்கிறதே! என்னை நிரம்பவும் மரியாதையாக நடத்தும் சுபாவமுடைய ராவ்ஸாகேப் ஐயர் என்னிடம் மரியாதைக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் திடீரென்று புறப்பட்டுப்போனது வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்துவது போலல்லவா இருக்கிறது! இதுவரையில் எந்த மேலதிகாரியும் என்னை இந்த மாதிரி நடத்தியதே இல்லையே. என் உத்தியோக காலத்தில் இதுதான் முதலாவது அநுபவம்.

நாகூர் மீரா லெப்பை:—அவர்தான் ஏதோ அவசரமாகப் புறப்பட்டுப் போய்விட்டார்; உங்களிடம் சொல்லிக்கொள்ள, ஒருவேளை, அவருக்கு அவகாசம் இருந்திருக்காது. மற்றவர்கள் விடியற்காலம் புறப்பட்டுப் போனார்களாமே. அவர்களாவது டெலிபோன் மூலம் உங்களிடம் விஷயத்தைச் சொல்லக்கூடாதா? அல்லது, 'இன்ன காரணத்திற்காக உடனே புறப்பட்டுப் போகிறோம்' என்று உங்களிடம் சொல்லும்படி ஆர்டர்லிகளிடம் சொல்லிவிட்டுப் போகக்கூடாதா! காரியம் மர்மமாய்த்தான் நடந்திருக்கிறது.

மிஸ்டர் லவ்லக் :—ராவ் சாகேப் ஐயர் சாதாரணமானவரன்று. அவர் அபாரமான சாமர்த்தியமும், அற்புதமான யூகமும் உடையவர். அவர் மற்றவரிடம் புஷ்பம்போல மிக மிருதுவாயும், அடக்கமாயும், விநயமாயும் நடந்துகொள்ளுவார். ஆனால், தமது கடமையில் அவர் ஓர் எள்ளளவுகூடத் தவற மாட்டார்; காரியங்களை சாதிப்பதிலும் அபூர்வமான திறமையோடு நடந்துகொள்வார். அப்பேர்ப்பட்ட அருமையான மனிதர் நம்மிடம் சொல்லிக்கொள்ளாமல் போவதென்றால், அவருடைய மனதில் நம்மீது பெரிதும் கோபமும், அதிருப்தியும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது நிதரிசனமாகத் தெரிகிறது. அவர்தான் போனாலும், மற்றவர்கள்கூட ஒரே கட்டுப்பாடாக நம்மிடம் சொல்லிக்கொள்ளாமல் போனது பெரிய விபரீதச் செய்கையாய்த்தானிருக்கிறது. ராவ்சாகேப் ஐயர் பெரிய



இன்ஸ்பெக்டர் ஜெனரல் துரையான மூக்கிங்ஹாம் பகதூருக்கு செல்லக் குழந்தை போன்றவர். இவருடைய சொல்லென்றால் மிஸ்டர் மூக்கிங்ஹாம் பகதூருக்கு வேத வாக்கியம். இவர் நம்மைப்பற்றி ஏதாவது எழுதினால், உடனே நம் தலைச்சீட்டு கிழிந்து போன மாதிரிதான்.

நாகூர் மீரா லெப்பை :—(அபாரமான திகிலடைந்து) பெரிய ஜில்லா துரையான நீங்களே இப்படி அஞ்சும்போது எங்கள் விஷயத்தைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. மூக்கைத் தொட்டால், எங்களுக்கெல்லாம் உடனே பிராணன் போய்விடும்—என்றார்.

அப்போது டெலிபோனில் மணி ஒலித்தது. யார் கூப்பிடுகிறதென்று விசாரிக்கும்படி ஜில்லா துரை லெப்பையாரிடம் கூற, அவர் உடனே எழுந்து டெலிபோனண்டை சென்று அதன் ரிஸீவரை எடுத்து வைத்துக்கொண்டு, "யாரது?" என்றார்.

மற்றவன், "விநாயகம் பிள்ளையும், பராங்குச முதலியாரும் ஏறிக்கொண்டு போன மோட்டார் வண்டியில் சாரதி நான்" என்றான்.

அதைக் கேட்டவுடனே திடுக்கிட்டு வியப்படைந்த நாகூர் மீரா லெப்பை ஆவேசத்தோடு அந்தச் செய்தியை மிஸ்டர் லவ்லக்கிடம் தெரிவித்துவிட்டு மேலும் டெலிபோனில் பேசத் தொடங்கி, "ஓகோ! நீயா! நீ இப்போது எங்கிருந்து பேசுகிறாய்? என்ன விசேஷம்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்று பதைபதைப்பாக வினவினார்.

மோட்டார் ஓட்டி :—நான் இந்த ஊர்க்கோடியில் உள்ள தபாலாபீஸிலிருந்து பேசுகிறேன். ஒரு பெரிய அபாயம் நேர்ந்துவிட்டது. விடியற்காலம் நாங்கள் மோட்டார் வண்டியில் போனோமா! இந்த ஊருக்கு சுமார் ஐந்து மயில் தூரத்தில் ரஸ்தா இரண்டாகப் பிரிந்து போகிறது. எந்த வழியாக நாங்கள் போகிறதென்பதை நிச்சயிக்க மாட்டாமல், வண்டியை நிறுத்தி, யாராவது வழிப்போக்கர்கள் வருகிறார்களாவென்று கொஞ்சநேரம் பார்த்தோம். அப்போது திடீரென்று பல முரட்டு மனிதர்கள் வந்து எங்கள்மேல் விழுந்து என்னையும் என்னோடிருந்த இன்னொரு ஜெவானையும் கட்டிப் போட்டுவிட்டனர். அதேபோல பிள்ளையையும், முதலியாரையும் கட்டிப் போட்டுவிட்டு, இரவில் ராவ்சாகேப் ஐயருக்கு எங்கிருந்து

தந்தி வந்ததென்றும், அதில் என்ன சங்கதி எழுதப்பட்டிருந்ததென்றும் கேட்டனர். அவர்கள் அந்தத் தகவல் தங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டனர். உடனே திருடர்கள் மோட்டார் வண்டியிலிருந்த ஸர்க்கார் பெட்டிகளையெல்லாம் எடுத்து தங்களோடு வந்திருந்த ஓர் இரட்டை மாட்டு வண்டியில் வைத்து, பிள்ளையையும், முதலியாரையும் வண்டிக்குள் போட்டுக்கொண்டனர். அதன் பிறகு என்னையும் ஜெவானையும் எங்களுடைய மோட்டார் வண்டியில் தூக்கிப் போட்டு, விசையைத் திருப்பிவிட்டனர். மோட்டார் வண்டி அதன் பாட்டில், கிளைப்பாதை யொன்றில் வெகுதூரம் சென்றது. வண்டி ஏதேனும் பள்ளத்தில் வீழ்ந்துவிடப் போகிறதே என்ற திகிலினால் நானும், இன்னொரு ஜெவானும் பலமாகக் கூச்சலிட்டோம். யாரும் எங்களை கவனித்ததாகத் தெரியவில்லை. வண்டி வேகமாய் ஓடி ஒரு பெரிய ஆலமரத்தின் அடிக்கட்டையில் முட்டிக்கொண்டது தெரிந்தது. அதன் பிறகு எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் எவ்வளவுநேரம் பிரக்ஞையை இழந்து கிடந்தேனென்பதும், இன்னொரு ஜெவான் என்னவானான் என்பதும் எனக்குத் தெரியவில்லை. பிறகு எனக்கு சுய நினைவுண்டான போது பொழுது விடிந்திருந்தது. யாரோ வழிப்போக்கன் எங்கள் இரண்டுபேர்களுடைய கட்டுகளையும் அவிழ்த்துவிட்டு வேப்பிலைக் கொத்தினால் மாறி மாறி எங்கள் முகத்தில் விசிறிக்கொண்டிருந்தான். நானும் இன்னொரு ஜெவானும் தட்டித் தடுமாறி மெல்ல எழுந்தோம். அந்த வழிப்போக்கன் எங்கேயோ அவசரமாய் ஊருக்குப் போகிறவனாதலால், அவன் எங்களை அவ்வளவோடு விட்டுப் போய்விட்டான். இன்னொரு ஜெவானும், நானும் அரும் பாடுபட்டு நடந்து இந்த ஊர்ப் போஸ்டாபீஸுக்கு வந்து சேர்ந்தோம். எங்களால் இனி நடக்க இயலவில்லையாதலால், இந்த ஆபீஸ் திண்ணையில் படுத்திருக்கிறோம். எங்களை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வண்டி அனுப்புவதோடு, ரஸ்தாவில் உடைபட்டுக் கிடக்கும் மோட்டார் வண்டியை இந்த ஊருக்குத் தள்ளிக்கொண்டு வரவும் உடனே ஏற்பாடு செய்யுங்கள். பிள்ளையும், முதலியாரும் எங்கே கொண்டு போகப்பட்டார்கள் என்பது தெரியவில்லை—என்றான்.

அதைக் கேட்ட நாகூர் மீரா லெப்பையின் உடம்பு அச்சத்தினாலும், அநுதாபத்தினாலும் கிடுகிடென்று நடுங்கியது. அவர்



உடனே அத் தகவல்களை மிஸ்டர் லவ்லக் துரைக்குத் தெரிவிக்க, அவரும் அதேபோல பெருத்த கலவரமும், மனவேதனையும் அடைந்து இரண்டொரு நிமிஷகாலம் திகைத்துத் தத்தளிக்கலானார். அவர் உடனே தமது அழைப்பு மணியை அழுத்த, ஓர் ஆர்டர்லி உடனே வந்து ஆஜரானான். அவனை ஏவி, அடபோதே வீட்டிற்குச் சென்ற டிப்டி சூபரின்டென்டு மிஸ்டர் ஆறுவமுதனை அழைத்து வரும்படி உத்தரவிட, அவன் ஒரு சைக்கில் வண்டியில் ஓடி, ஐந்தே நிமிஷத்தில் மிஸ்டர் ஆறுவமுதனுடன் வந்து சேர்ந்தான்.

ஜில்லா துரை அவரிடம் விஷயத்தைக் கூற, அவரும் அபாரமான வியப்பும் திகைப்பு மடைந்து, உடனே ஓர் எட்கான்ஸ்டேபிலையும், நான்கு ஜெவான்களையும் அழைத்து, உடைபட்டுக் கிடந்த மோட்டார் வண்டியைக் கொண்டுவந்து சேர்க்கும்படி உத்தரவிட, அவர்கள் சைக்கில்களில் ஏறிக்கொண்டு தலைதெறிக்க ஓடினர். உடனே ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் மூலம் செய்தி பறக்க, அங்கிருந்து ஆம்புலென்ஸ் மோட்டார் வண்டியொன்று தபால் ஆபீஸுக்கு ஓடி, திண்ணையில் படுத்திருந்த இரண்டு ஆசாமிகளையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது. அவ்விடத்தில் டாக்டர் அவர்களுடைய காயங்களைக் கட்டி, கட்டில்களில் படுக்க வைத்து, ரொட்டி, பால் முதலிய ஆகாரங்களைக் கொடுத்து உபசரித்தார்.

மிஸ்டர் லவ்லக்:—(மிஸ்டர் ஆறுவமுதனை நோக்கி) விநாயகம் பிள்ளையையும், பராங்குச முதலியாரையும் கண்டுபிடிப்பதற்கு நாம் உடனே ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் இருவருக்கும் இந்த மாதிரியான அபாயம் நேர்ந்துவிட்டதாக நாம் உடனே ராவ் சாகேப் ஐயருக்குத் தந்தி யனுப்பவேண்டும்.

மிஸ்டர் ஆறுவமுதன் :—ஐயர் எந்த ஊருக்குப் போனார் என்பது தெரியவில்லையே!

நாகூர் மீரா லெப்பை :—ஆஸ்பத்திரியில் இருக்கும் ஜெவான்களிடம் கேட்டுப் பார்த்தால் அது தெரியலாம்.

மிஸ்டர் லவ்லக்:—நேற்று அவருக்கு எந்த ஊரிலிருந்து தந்தி வந்ததென்பதையும், அதில் என்ன விஷயம் இருந்ததென்பதையும், தபாலாபீஸில் போய்த் தெரிந்துகொண்டால், அதிலிருந்தும் ராவ்

சாகேப் ஐயர் எந்த ஊருக்குப் போயிருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்து, உடனே அவருக்குத் தந்தியனுப்பி இந்த வழிப்பறியை அறிவிக்கலாம்.

மிஸ்டர் ஆறாவமுதன் :—ஏற்கனவே ஐயர் இந்த ஊர்ப் போலீஸ் நிர்வாகத்தைப்பற்றி அதிருப்தியடைந்து கோபித்துக்கொண்டு நம்மிடம் சொல்லாமல் போயிருக்கிறார். இது எரியும் நெருப்பில் எண்ணெயை விடுவதுபோ லிருக்கும்.

மிஸ்டர் லவ்லக் :—நாம் என்ன செய்யலாம். ஊரில் துஷ்டர்கள் அதிகமாயிருந்தால், நிலைமை நம்மால் சமாளிக்க முடியாததாயிருக்கிறது. அவர் கெட்டிக்காரர்தானே. அவருடைய மோட்டார் களவாடப்பட்டுப்போயிற்று. அவருடைய சகாக்கள் வழிப் பறிக்கு இலக்காயினர். அவர்களே இவைகளைப் பிடிக்கிறதுதானே! அவர்களாலேயே முடியாதபோது நாம் மாத்திரம் மந்திரசக்தி உடையவர்களா! நாம் மனதாரவும், நம்முடைய சாமர்த்தியத்திற்குத் தக்கபடியும் முயற்சிப்போம். அதற்குமேல் வருவது வரட்டும். இப்போது ஸி. ஐ. டி. ஸப்-இன்ஸ்பெக்டர்கள் யார் யார் இருக்கிறார்கள்?

மிஸ்டர் ஆறாவமுதன் :—மிஸ்டர் நாராயணசாமி போன இடம் தெரியவில்லை. சுப்பையாவை ஜாமீனில் விட்டோம். அவர் ரஜா வாங்கிக்கொண்டு எங்கெங்கோ அலைந்துகொண்டிருக்கிறார். இனி வெளியூர்களிலிருந்துதான் திறமைசாலிகளை வரவழைக்கவேண்டும்.

மிஸ்டர் லவ்லக் :—சரி; அதுவரையில் நாம் சும்மா இருப்பது சரியல்ல. நீங்கள் தேவையான ஜெவான்களை அழைத்துக்கொண்டு உடனே போய் மாட்டு வண்டிச் சுவடு முதலியவைகளைக் கொண்டு, அவர்கள் இருவரும் அடைபட்டிருக்கும் இடத்தைக் கண்டுபிடியுங்கள். நாகூர் மீரா லெப்பையாரே, நீங்கள் உடனே ஆஸ்பத்திரிக்குப் போய், அங்கே படுத்திருக்கும் ஜெவான்களுடன் பேசி, ராவ் சாகேப் ஐயர் எந்த ஊருக்குப் போனார் என்பதையும், இவர்கள் எந்த ஊருக்குப் போனார்கள் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள். உடனே தபாலாபீஸுக்குப் போய் ஐயருக்கு என்ன தந்தி வந்ததென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஐயர் இருக்குமிடம் நிச்சயமாய்த் தெரிந்தால், உடனே அவருக்குத் தந்தி யனுப்புங்கள். உங்களுக்கு சந்தேகம் உண்டாகும் பட்சத்தில் டெலிபோன் வழியாக என்னிடம் கேளுங்கள்.



மிஸ்டர் ஆறாவமுதன் :—சரியானபடி தகவல் தெரியாவிட்டால், நாம் இதை எப்படியும் வேலூருக்குத் தெரிவிக்கவேண்டும். அதோடு பத்திரிகையில் வெளியிட்டால், ராவ் சாகேப் ஐயர் எங்கே இருந்தாலும் இதைத் தெரிந்துகொள்வார்.

மிஸ்டர் லவ்லக் :—அதையெல்லாம் கடைசியாகச் செய்வோம் —என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய திட்டங்கள் முடிவுபெற்றன.

மிஸ்டர் ஆறாவமுதன் தமது பரிவாரங்களுடன் பிள்ளையையும் முதலியாரையும் கண்டுபிடிக்கப் பிரயாணமானார். நாகூர்மீரா லெப்பையார் தமது ஸைக்கிலில் ஏறிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று, அங்கே படுக்கவைக்கப் பட்டிருந்த ஜெவான்களிடம் பேசி, விஷயங்களை நேருக்கு நேர் கேட்டுத் தெரிந்துகொண்டார். ஆனால் முதல் நாளிரவில் ராவ் சாகேப் ஐயருக்கு எங்கிருந்து தந்தி வந்ததென்பதும். அதன் விவரமென்னவென்பதும், அவர் எங்கே போனாரென்பதும், அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் விநாயகம்பிள்ளையும், பராங்குச முதலியாரும் சுயமரணபுரத்தை விட்டு, அதற்கடுத்த ஜில்லாவின் தலைமை நகருக்குச் சென்றனர் என்பதை மாத்திரம் அவன் தெரிவித்தான். ஆகவே, அந்தத் தலைமை நகரில் அவர் இருக்கிறாராவென்று தந்தியின் மூலம் கேட்டு, அங்கே செய்தியனுப்பலாமென்று நினைத்துக்கொண்டு ஸப்-இன்ஸ்பெக்டர் மிக துரிதத்தில் தமது ஸைக்கிலை மிதித்துக்கொண்டு தபால் ஆபீஸுக்குப் போய்ச்சேர்ந்தார்.

அது ஜில்லாவின் தலைமை ஆபீஸாதலால், அது ஒருபெரிய கட்டடத்தில் இருந்தது. அதற்குள் ஒரு தலைமைப் போஸ்டுமாஸ்டரும், சுமார் இருபது குமாஸ்தாக்களும், ஏராளமான தபாற் சேவகர்களும் இருந்தனர். அந்த ஆபீஸின் பின்புறத்தில இருந்த ஜாகையிலேயே போஸ்ட்மாஸ்டர் தமது குடும்பத்தாருடன் இருந்தாராதலாலும், அவர் பென்ஷன் வாங்கிக்கொள்ள வேண்டிய நிலைமையை எட்டிக்கொண்டிருந்த கிழவராதலாலும், அவர் வேலைகளைத் தாமே கவனிப்பாய்ப் பார்க்காமல் குமாஸ்தாக்களையே நம்பி இருந்தார். அதுவுமன்றி அவருடைய குடும்பத்தில் ஏராளமான குழந்தைகள் இருந்தமையாலும், அவர் தமது மனைவியை குடுகுடுபாட்டி ஆக்கி வைத்திருந்தாராதலாலும், பெயராக் குழந்தைகளுக்குப் பால் புகட்டுவது, அசங்கியத்துணி கசக்கிக் காயவைப்பது முதல், மனைவியின்

தலைவலிக்குக் காப்பி போட்டுக்கொடுப்பது வரையில் உள்ள சணக்சுற்ற வீட்டு வேலைகளை அவரே அடிக்கடி போய்ப் போய்ச் செய்ய வேண்டியவராயிருந்தார். ஆதலால், அவர் தமது ஆசனத்தை ஜாகைக்கும் ஆபீஸுக்கும் மையமான ஓரிடத்தில் போட்டுக்கொண்டிருந்தார். அவருடைய கவனமும் பொழுதும் பெரும்பாலும் தமது குடும்பக் காரியத்திலேயே சென்றுகொண்டிருந்தன. ஆகவே ஆபீஸில் என்னென்ன வேலைகள் நடக்கின்றனவென்பது அவருக்கு அவ்வளவு நிச்சயமாய்த் தெரியாதாகையால் திடீரென்று எவரேனும் மேலதிகாரியோ, போலீஸாரோ வந்தால் அவருக்கு உடனே நடுக்கல் ஜுரம் உண்டாகிவிடுவது வழக்கம். குமாஸ்தாக்கள் அடிக்கடி வந்து அவரிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டு சென்றனராலும், அதற்குள் இருக்கது பாய்போ, தேளோ என்பதைப்பற்றி அவர் சிறிதும் கவலைகொள்ள மாட்டார். அப்மாதிரியான இயல்புடையவரான போஸ்ட் மாஸ்டர் அன்று தமது ஆசனத்தில் உட்கார்ந்து வழக்கத்திற்கு மாறாக எதையோ நிரம்பவும் கவலையோடு கவனித்து தமக்கெதிரில் நின்ற ஒருவனைப் பார்த்து, ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அப்போது போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் ஆடம்பரமான உடைகளோடு திடீரென்று தோன்றி தமது ஸைக்கிலை சுவரில் சார்த்திவிட்டு உள்ளே வந்தார். அவ்வாறு எதிர்பாராவிதமாகப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் வந்ததைக் காண, போஸ்ட் மாஸ்டா திடுக்கிட்டு பிரமித்துப் போனார். அவருடைய உடம்பு குபீரென்று வியர்த்துப் போய் ஒரு விதமான படபடப்பை அடைந்தது. அவர் நிரம்பவும் பாடுபட்டு சமாளித்துக்கொள்ள முயன்றார். அவருடைய வாய் குளறத் தொடங்கியது. அவர் திருடனைப்போல விழித்தபடி ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "வாருங்கள், ஸப்-இன்ஸ்பெக்டர் ஸார்; இப்படி இந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்று கூறி உபசரித்து, ஒரு நாற்காலியைக் காட்ட, ஸப்-இன்ஸ்பெக்டர் உட்கார்ந்துகொண்டு, "என்ன போங்கள்; ஊர் நிரம்பவும் கெட்டுப் போய்விட்டது" என்று விரக்தியாகப் பேசினார். இரவில் கொள்ளைக்காரர்களிடத்தில் அகப்பட்டு வந்த ஜெவான்கள் அந்த ஆபீஸ் டெலிபோன் வழியாகவே பேசினார்களாதலால், அந்த விஷயத்தை மனதில் வைத்துக்கொண்டு ஸப்-இன்ஸ்பெக்டர் அவ்விதம் பீடிகைபோட்டுப் பேசினார். ஆனால் போஸ்ட் மாஸ்டருடைய கவனம் அதில் செல்லவில்லை



சமீப காலத்தில் அந்த ஆபீஸில் நடந்த ஒரு திருட்டைப்பற்றி போஸ்ட் மாஸ்டருடைய மனம் கலவரமடைந்திருந்ததாகையால், அதைத் தெரிந்துகொண்டே ஸப்-இன்ஸ்பெக்டர் வந்து அவ்வாறு பேசுகிறார் என்று நினைத்து பெரிதும் சஞ்சலமடைந்து தவித்தவராய்த் தமக்கெதிரில் இருந்த அழைப்பு மணியை அழுத்தினார். குமாஸ்தாக்கள் இருந்த அடுத்த ஹாலிலிருந்து ஒரு தபாற் சேவகன் அவருக்கெதிரில் வந்து நின்றான்.

உடனே போஸ்ட்மாஸ்டர், "அடேய், திருவேங்கடம்; ஸப்-இன்ஸ்பெக்டர் எஜமானுக்கு ஒரு கிளாஸில் ஐஸ் போட்டு, ஸ்பென்ஸர் ஆரஞ்ச் கிரஷ் வாங்கிக் கொண்டுவா. ஓடு சீக்கிரம்" என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் தமக்கு நடந்த அதீதமான உபசாரத்தைக் கண்டு உண்மையிலேயே வியப்படைந்து, "அடாடா! எனக்கேன் இவ்வளவு மரியாதை! நான் ஸர்க்காருடைய கடமையைச் செய்ய வந்தேன். இப்போது சொந்த உபசாரம் என்ன வேண்டியிருக்கிறது" என்றார். அவர் சாதாரணமாகப் பேசினாராலும், அது குற்றமுள்ள மனத்தினரான போஸ்ட் மாஸ்டருடைய மனதை முன்னிலும் அதிகமாய்க் கலக்கத் தொடங்கி, ஸப்-இன்ஸ்பெக்டர் தமக்குப் பிடி கொடுக்க மாட்டாரோ என்ற அச்சத்தை உண்டாக்கியது. அப்போதும் சேவகன் போகவில்லையாதலால், போஸ்ட் மாஸ்டர் அவனைப் பார்த்து, "ஏண்டா முழிக்கிறாய்? ஸாயப் ஐபா நல்ல தங்கமான மனதுடையவர்கள். அவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். நீ போய் சீக்கிரம் கொண்டு வா" என்றார்.

உடனே சேவகன் அவ்விடத்தை விட்டு ஓட்டமாகச் சென்றான். அதற்குப் பின் இருவரும் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர். அப்போது போஸ்ட் மாஸ்டர் ஒரு முறை கனைத்துக்கொண்டு, எச்சிலைப் பன்முறை விழுங்கி, ஸப்-இன்ஸ்பெக்டரிடம் எதையோ கேட்க விரும்புகிறவர் போலவும், ஆனால் அதைக் கேட்க அதைரியப்படுகிறவர் போலவும் காணப்பட்டு, "ஏன் ஸார் இந்த சங்கதியை இதற்குள் உங்களுக்குச் சொன்னது யார்?" என்றார்.

அதைக் கேட்கவே சற்று முன் ஜெவான்கள் அங்கிருந்து டெலிபோனில் பேசிய விஷயத்தை அவர் குறிக்கிறாரோ என்னும் எண்ணம் ஸப்-இன்ஸ்பெக்டருடைய மனதில் உடனே தோன்றிய

தானாலும், நாகூர் மீரா லெப்பை சிறந்த பகுத்தறிவுடைய புத்திமானாதலால், போஸ்ட் மாஸ்டர் வேறு ஏதோ விஷயத்தைக் குறித்துப் பேசுகிறார் என்று சம்சயிக்கலானார். ஜெவான் அங்கிருந்து டெலிபோனில் பேசியதைப்பற்றி, 'இதற்குள் உங்களுக்கு யார் சொன்னது' என்று கேட்பது பொருத்தமற்றதாய்த் தோன்றியது. ஆகவே, ஸப்-இன்ஸ்பெக்டர் எச்சரிப்படைந்து, "உங்களைப்போ லிருப்பவர்கள் இந்த மாதிரியான தோரணையில் பேசுவது சரியல்ல" என்று நிரம்பவும் தந்திரமாக மறுமொழி கூறினார். அந்த மறுமொழியைக் கேட்க, போஸ்ட் மாஸ்டருடைய நாடி வீழ்ந்துபோயிற்று. அவருடைய முகம் வாட்ட மடைந்தது.

அவர் ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து விகாரமாகப் பற்களைக் காட்டி யாசகனுடைய த்வனியில் பேசத் தொடங்கி, "என்னமோ பாவம்; சொற்ப சம்பளக்காரன். தெரியாத்தனத்தினால் செய்து விட்டான். ஆனாலும் ஒரே ஆபீஸில் இருக்கிறவர்கள் இப்படியெல்லாம் கிருத்திரமம் பண்ணி அவனை சந்தியில் இழுத்து விடுகிறார்கள். நீங்கள் சொன்னதுபோல ஊர் சுத்தமாகக் கெட்டுப் போய்விட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(வியப்படைந்தாராலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல்) இதையெல்லாம் கிருத்திரமம் என்று நீங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நீங்கள் இப்படி வளைத்து வளைத்து சவுக்கம் கட்டிப் பேசுவதும் எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. பிறர் கிருத்திரமம் பண்ணுகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். நீங்கள் சரியான சங்கதியைத்தான் சொல்லுங்களேன்.

போஸ்ட் மாஸ்டர்:—கிருத்திரமம் என்பதால், அது தப்பானது என்று நான் சொல்ல வரவில்லை. எந்த மனிதனுக்கும் பொல்லாத வேளை என்பது ஒன்று அவசியம் எப்போதாவது ஏற்படுகிறது. அப்போது புத்தி சொற்பத்தில் மாறாட்ட மடைந்துவிடுகிறது. ஆனால் இந்த மனிதன் நீண்ட ஸர்வீஸ்காரன். இதுவரையில் யோக்கியனாகவே இருந்தான். இதுதான் இவன் தவறாய் நடந்துகொண்ட முதலாவது சந்தர்ப்பம். ஆகையால், நான் எச்சரித்து மன்னித்து விட்டேன். அதை யாரோ தெரிந்துகொண்டு உங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தெரிவிக்காதிருந்தால், வயிறு வெடித்துப் போய்விடுமோ என்னவோ—என்றார்.



அப்போது நாகூர் மீரா லெப்பைக்கு விஷயம் செவ்வையாக விளங்கிவிட்டது. அந்த ஆபீஸில் எவனோ ஒருவன் குற்றம் செய்துவிட்டான் என்றும், அதை அவர் மன்னித்து விட்டார் என்றும், அதைப்பற்றி எவரோ கோள் சொல்லியதன்மேல் தாம் வந்திருப்பதாக போஸ்ட் மாஸ்டர் எண்ணிக்கொண்டிருக்கிறார் என்றும் உடனே லெப்பையார் அநுமானித்துக்கொண்டவராய், "சரி; மற்றவர் சொன்னதிருக்கட்டும். அதற்கு நான் அதிக மதிப்பு வைக்கிறவனன்று. நீங்கள் உங்கள் வாயாலேயே விஷயத்தைச் சொல்லிவிடுங்கள். அதன் பிறகு மேலே ஆகவேண்டியதைப்பற்றி யோசித்துக்கொள்வோம்" என்றார்.

அப்போது தபாற் சேவகர்கள் இருவர் அங்கே வந்தனர். ஒருவனுடைய கையில் ஒரு கண்ணாடிக் கோப்பையில் நுரையோடு கூடிய கிரஷ் இருந்தது. அதற்குள் 'ஐஸ்' கட்டி மிதந்தது. மாதுரியமான ஆரஞ்சுப்பழ மணம் குபீரென்று வீசி, லெப்பையாருடைய நாவில் ஜலம் ஊறும்படி செய்தது. சேவகன் அதை மிக வணக்கமாய் லெப்பையாரிடம் நீட்ட, அவர், "அரேரே! என்ன ஓய்! கிரஷா? இதைக் குடிக்கக் குடித்து தெவிட்டிப் போய் விட்டது. இந்த வாசனையை தூரத்தில் முகரும்போதே, வயிற்றில் புரட்டல் உண்டாகிறது. ம். சரி. நீங்கள் பிரியமாய்க் கொடுப்பதை வேண்டாமென்று நிராகரிப்பது மரியாதையல்ல. இப்படிக் கொடு" என்று சந்தோஷமற்ற தோற்றத்தோடு கூறி அதை வாங்கி இரண்டு மூன்று தரம் சப்பிய பிறகு, "சரி; நீ போ" என்றார்.

அவன் உடனே அப்பால் போய்விட்டான். இன்னொருவன் மாத்திரம் கைகளைக் கட்டிக்கொண்டு மிக வணக்க வொடுக்கமாக நின்றுகொண்டிருந்தான். அப்போது போஸ்ட் மாஸ்டர், "அடே..ய் ஏழுமலை, நீ செய்த காரியத்தைப்பற்றி ஸப்-இன்ஸ்பெக்டர் ஐயாவுக்கு யாரோ புகார் சொன்னார்களாம். விசாரிப்பதற்காக ஐயா வந்திருக்கிறார்கள். ஐயா நிரம்பவும் தயாளமான மனதுடையவர்கள். இந்தத் தடவை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்" என்றார்.

உடனே அந்த சேவகன் கண்ணும் கண்ணீருமாய் நாகூர் மீரா லெப்பைக்கு முன்னால் போய் நின்று, "எஜமானே, நான் மிகவும் ஏழை; பெரிய குடும்பி. இதுவரையில் நான் அற்ப தவறுகூடச் செய்தவனன்று. இந்தத் தடவை எப்படியோ தவறு நடந்துவிட்டது. இனி நான் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுகிறேன்.

இந்த ஒரு தடவை நீங்கள் எப்படியாவது பெரிய மனதோடு இந்த
ஏழையைக் காப்பாற்ற வேண்டும்'' என்று தேம்பித் தேம்பி அழுத
படி கூறி இரண்டு கைகளையும் எடுத்து லெப்பையாருக்குப் பன்
முறை சலாம் வைத்தான்.

நாகூர் மீரா லெப்பை உண்மையில் இளக்கமான சுபாவமுடை
யவராதலால், அந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்டு முற்றி
லும் கலங்கிப்போனாராலும், அதைக் காட்டிக்கொள்ளாமல்,
"இதெல்லாம் சரிதான் அப்பேன். நீ உள்ளதை உள்ளபடி என்
னிடம் சொல். கொஞ்சமும் பொய் கலவாமல் விஷயத்தை என்
னிடம் தெரிவி. முதலில் என்ன நடந்தது?'' என்று தந்திரமாகக்
கூறி, விஷயத்தைத் தெரிந்துகொள்ள முயற்சித்தார்.

தபால் சேவகன் :—நான்கு நாட்களுக்கு முன்பு ஓர் இன்ஷி
யூர்டு கடிதம் வந்தது.

லெப்பையார் :—எங்கிருந்து யாருக்கு வந்தது ?

தபால் சேவகன் :—தேவகோட்டையிலுள்ள ஒரு செட்டியார்
இந்த ஊரிலுள்ள ஒரு செட்டியாருக்கு அனுப்பி இருந்தார்.

லெப்பையார் :—தொகை எவ்வளவு?

தபால் சேவகன் :—250 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்யப்
பட்டது.

லெப்பையார் :—அதை என்ன செய்தாய் ?

தபால் சேவகன்:—அதையும், ஒரு பார்ஸலையும், இன்னும் சில
கடிதங்களையும் எடுத்துக்கொண்டு காலை சரியாக 9-15-க்கு ஆபீஸை
விட்டுப் புறப்பட்டு பட்டுவாடா செய்வதற்காக வெளியில்
போனேன்; சில தெருவுக்களுக்கு பட்டுவாடா செய்தேன். அப்
போது நடுவழியில் இருவர் என்னைப் பார்த்து, நிரம்பவும் விசனகர
மாகப் பேசத் தொடங்கி, "என்ன அப்பா, ஏழுமலை, எங்கள் அடை
யாளம் தெரியவில்லையா? நாங்கள் உன்னுடைய மாமனார் ஊர்க்காரர்க
ளல்லவா. உனக்கு சங்கதி வரவில்லையா? நீ போகவில்லையா?'' என்ற
னர். நான் திடுக்கிட்டுப்போனேன். என் சம்சாரத்தை பிரஸவத்திற்
காக நான் என்னுடைய மாமனார் வீட்டிற்கு அனுப்பி இருந்தேன்.
அதைப்பற்றியே அவர்கள் பேசுவதாக நான் நினைத்தேன். அவர்கள்
என்னிடம் நெடுங்காலம் பழகிய அன்னியோன்னியர்கள்போல்பேசத்
தொடங்கி, "அப்பா ஏழுமலை, இப்படி ஆகுமென்று யாரும் நினைக்க



வில்லை. திடீரென்று விபரீதமான காரியமாய் முடிந்துவிட்டது.
இந்நேரம் முதலுக்கும் மோசம் வந்திருக்குமோ என்னவோ''
என்று கண்ணீர் விடுத்துக்கொண்டே பேசினார்கள். எனக்கு பகீ
ரென்று பற்றியது. அடி வயிற்றில் குழப்பமும் வேதனையும் உண்
டாகிவிட்டன. என் சம்சாரத்திற்குத்தான் ஏதேனும் அபாயம் நேர்ந்
திருக்க வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டு, "நீங்கள் சொல்
வது என்னவென்று எனக்கு விளங்கவில்லையே!'' என்றேன். அவர்
கள், "அடேடே! உனக்கு சங்கதி தெரியாதா! நீ விசனப்படுவா
யென்று உன் மாமனார் மாமியார் உனக்குச் செய்தி சொல்லியனுப்ப
வில்லைபோலிருக்கிறது. உன் சம்சாரத்தின் சிசு அகாலத்தில்
வெளிப்பட ஆரம்பிக்கவே, அந்த அம்மாள் இரண்டு நாட்கள் வரை
யில் பட்டபாடு சொல்லிமுடியாது. டாக்டர் வந்து ஆயுதங்களை
உபயோகித்து கருப்பையை அறுத்து குழந்தையை வெளிப்
படுத்தினர். உன் மனைவி நிரம்பவும் அபாயகரமான நிலைமையில்
இருக்கிறாள்; இனி பிழைப்பது சந்தேகம்'' என்றார்கள். அதைக்
கேட்டவுடனே எனக்கு உயிரே போனதுபோ லாய்விட்டது. மூளை
குழம்பிவிட்டது. நான் எங்கிருந்தே னென்பதே தெரியவில்லை.
நான் வெளிக்கு அவசரமாய்ப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டு
விட்டது. நான் அவர்களைப் பார்த்து, "எனக்கு சங்கதி இதுவரை
யில் தெரியாது. நான் உடனே ரஜா வாங்கிக்கொண்டு போகிறேன்''
என்றேன்.

அவர்கள், "அப்படியே செய். போகத் தாமதமானால், முக
முழிப்புகூட இல்லாமல் போகும்'' என்றனர். நான் அவர்களைப்
பார்த்து, "நீங்கள் எனக்கு ஓர் உபகாரம் செய்யவேண்டும். இதோ
பக்கத்தில் கக்கூஸ் இருக்கிறது. நான் அவசரமாய் அங்கே போய்
விட்டு, ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். அதுவரையில் இவைகளை
யெல்லாம் வைத்துக்கொண்டிருங்கள்'' என்று கூறியபடி, பணப்
பையை என்னுடைய சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு,
மற்றவைகளையெல்லாம் அவர்களிடம் கொடுத்துவிட்டு ஓட்டமாக
ஓடி அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு, பைத்தியக்காரன்
போல் ஓடி வந்தேன். வந்து பார்க்கிறேன். அவர்கள் இருவரும்
காணப்படவில்லை. ஆனால் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டுத் திண்
ணையில் கடிதங்கள், பார்ஸல், மணியார்டர் பாரங்கள், தோல் பை
முதலிய யாவும் இருந்தன. அவர்கள் ரயிலுக்குப் போகும் அவசரத்

தில், ஒருவேளை, அவைகளை வைத்துவிட்டுப் போயிருக்கலாமென்று நினைத்து அவைகளை எடுத்துக்கொண்டேன். என்னுடைய நிலைமை பைத்தியங் கொண்டவனுடைய நிலைமைபோ லிருந்தது. கடிதங்களை எடுத்துக்கொண்டு ஊருக்குள் போய் பட்டுவாடா செய்யவும் என்னால் ஆகாதுபோ லிருந்தது; எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, ஆபீஸிற்குப் போவதற்கும் பயமா யிருந்தது. வெறுங் கடிதங்களையெல்லாம் கொடுத்துவிட்டுத் திரும்பியபோது, எனக்கு இன்ஷியூர்டு கடிதத்தின் நினைவுண்டாயிற்று. சட்டைப்பைகளில் பார்த்தேன். அது காணப்படவில்லை. பணப்பையில் பார்த்தேன்; இல்லை. மணியார்டர் பாரங்கள், கடிதங்கள் முதலியவைகளைத் தடவித் தடவிப் பார்த்தேன். அது அகப்படவில்லை. என் பாடு வெலவெலத்துப் போய்விட்டது. என் சம்சாரத்தைப்பற்றிக் கேட்ட செய்திக்கு சமதையாகவே அதுவும் இருந்தது. ஒருவேளை ஆபீஸில் அதை வைத்துவிட்டேனோ என்ற சம்சயம் என் மனதில் உண்டாயிற்று. உடனே நான் ஆபீஸுக்கு ஓடி அங்கே தேடினேன் தேடினேன். என்னுடைய வெறிக் கோலத்தை கண்டு எஜமானும் மற்றவர்களும் என்னிடம் சங்கதியைக் கேட்க, நான் நடந்த விஷயங்களை உள்ளபடி வெளியிட்டேன். எல்லோரும் என் விஷயத்தில் இரக்கங்கொண்டனர். நான் எஜமானருடைய காலைப் பிடித்துக்கொண்டு, அந்த இன்ஷியூர் துகையான 250 ரூபாயை உடனே கொடுத்துவிடுவதாகச் சொன்னேன். இவர்கள் இணங்கினார்கள். நான் இதுவரையில் பாடு பட்டுச் சேர்த்து ஸேவிங்ஸ் பாங்கில வைத்திருந்த 250. ரூபாயை உடனே வாங்கிக்கொடுத்துவிட்டேன். எஜமான் உடனே அந்த செட்டியாரை வரவழைத்து அவரிடம் விஷயங்களைத் தெரிவித்துப் பணத்தையும் கொடுக்க, அவரும் என் மேல் இரக்கங்கொண்டு, இன்ஷியூர்டு கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாக ரசீதுகளில் கையெழுத்துச் செய்து கொடுத்துவிட்டுப் போய்விட்டார். உடனே எஜமான் எனக்கு ரஜா கொடுத்து, இவர்களுடைய மோட்டார் பைஸைக்கில் வண்டியில் உட்கார வைத்து, என்னை என் மாமனார் வீட்டிற்கு அனுப்பினார்கள். நான் போய் என் மாமனாருடைய வீட்டின் வாசலை அடைகிறேன். என் சம்சாரம் பூர்ண கர்ப்பமான வயிற்றோடு சிரித்துக்கொண்டு வெளியில் ஓடி வந்தாள். அவளைப் பார்த்தவுடன், நான் பார்த்தது பொய்யோ மெய்யோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. என் மனம் ஒரு விதத்தில்



அபாரமான சந்தோஷம் கொண்டது. இன்னொரு விதத்தில் விசனமடைந்தது. அவளுக்கு எவ்வித அபாயமும் ஏற்படவில்லையென்ற செய்தியினால் நான் ஆனந்தமடைந்து பொங்கிப் போனேன். யாரோ அயோக்கியர்கள் வேண்டுமென்றே பொய் சொல்லி, என்னை ஏமாற்றி எனக்கு 250 ரூபாய் நஷ்டம் வைத்துவிட்டார்களே என்ற விசனம் ஒரு புறத்தில் உண்டானதானாலும், என் சம்சாரம் க்ஷேமமாயிருந்தது எனக்கு லக்ஷம் 250 ரூபாய்கள் கிடைத்ததுபோ லிருந்தது. அவளிடம் உண்மையைச் சொன்னால், உண்மையில் அவளுக்கு அகாலப் பிரசவம் ஏற்பட்டுவிடுமென்று அஞ்சி, போஸ்ட்மாஸ்டர் என்னை ஓரிடத்திற்கு அனுப்பியதாகவும், போகும் வழியில் அவளைப் பார்த்துவிட்டுப்போக நினைத்து வந்ததாகவும் சொல்லி, அவள் கொடுத்த பலகாரத்தையும், காப்பியையும் வாங்கி உண்டுவிட்டு வந்து சேர்ந்து, விஷயத்தை எஜமானரிடம் சொன்னேன். எஜமானர் என் மேல் அநுதாபம் கொண்டு என்னை மன்னித்துவிட்டார்கள். எனக்கு விரோதிகளான சிலர் வம்புவளர்த்தார்கள். யாரோ இருவர் சொன்னதாக நான் சொன்னதெல்லாம் பொய்யென்றும், நான் என் சம்சாரத்தைப் பார்ப்பதற்காக அப்படி தந்திரம் எண்ணினேனென்றும், கவரில் 250 ரூபாய்க்கு மேல் அதிகப்பண மிருந்ததால், அதை அபகரித்துக்கொண்டு, 250 ரூபாயைக் கொடுத்துவிட்டதாகவும் சிலர் புரளி செய்கிறார்களாம். அவர்களே உங்களுக்கு செய்திசொல்லி யனுப்பி இருப்பார்கள். எப்படியாவது நீங்கள் தான் இந்த ஏழையைக் காப்பாற்ற வேண்டும்—என்று தழுதழுத்த குரலில் கூறினான்.

அந்த வரலாற்றைக் கேட்டபோது ஸப்-இன்ஸ்பெக்டருடைய கண்கள் பலசமயங்களில் கலங்கின. அவருடைய முகம் மாறி மாறி விசனத்தையும், சந்தோஷத்தையும் காட்டியது. அயலாருடைய கஷ்ட சுகங்களால் அவருடைய மனம் சுலபத்தில் மாறுபடக்கூடியது என்பதை அவருடைய முகம் கண்ணாடி போல் காட்டியது. அவர், "அவர்கள் இருவரையும் நீ உன் மாமனாருடைய ஊரில் எப்போதாவது பார்த்ததாக நினைவுண்டாகிறதா?" என்றார்.

சேவகன் :—உண்டாகவில்லை.

லெப்பை:—அவர்கள் பார்வைக்கு எப்படி இருந்தார்கள்?

சேவகன் :—ஒருவன் கருப்பாய் உயரமாய் தடிப்பாய் இருந்தான். அவன் மேளக்காரன் சாயலாய் ஆடம்பரமான ஜரிகை

வேஷ்டிகள், கடுக்கன்கள், தங்கக்கொடி ருத்ராக்ஷம் முதலியவைகளோடு காணப்பட்டான். அவனுக்கு 35, அல்லது, 40 வயதிருக்கலாம். இன்னொருவனுடைய வயது முப்பதிற்குள்ளாகவே இருக்கலாம். அவனுடைய ஒரு காலில் முழங்காலிற்குக் கீழ்பாகத்தில் பெரிய துணிக்கட்டு காணப்பட்டது. காலின் கீழ்பாகமே தெரியவில்லை. அவன் மா நிறமான மெல்லிய சரீரமுடையவனாயிருந்தான். அவன் ஜெயில் வார்டர்போல் உடுப்புகள் போட்டுக்கொண்டிருந்தான்.

நாகூர் மீரா லெப்பை:— இது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எந்த ஊர் ஜெயில் வார்டர் இந்த மாதிரியான வேலையில் இறங்கியிருப்பான். சரி; நீ போய் அந்தண்டை இரு—என்றார்.

உடனே ஏழுமலை அந்த இடத்தைவிட்டு பக்கத்திலிருந்த கூடத்திற்குப் போய்விட்டான்; நாகூர் மீரா லெப்பை உடனே தமது நெற்றியில் கையை வைத்து அழுத்திக்கொண்டு இரண்டொரு விநாடி காலம் சிந்தனை செய்தார். அவர் முடிவாக என்ன சொல்வாரோ என்பதைப்பற்றி ஆவல் கொண்டவராய் போஸ்ட் மாஸ்டர் நாகூர் மீரா லெப்பையாருடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். ஸப்-இன்ஸ்பெக்டர் மேலும் இரண்டு நிமிஷ காலம் மௌனத்திலாழ்ந்திருக்க, போஸ்ட் மாஸ்டர், "விலாசதார் இன்ஷியூர்ட் கடிதத்தை வாங்கிக்கொண்டுவிட்டதாக ரசீதில் கையெழுத்துச் செய்து கொடுத்துவிட்டார். இனி புகாருக்கு இடமில்லை. நீங்கள் இதைப்பற்றி உங்கள் மேலதிகாரிகளுக்கு அவசியம் எழுதித்தான் ஆகவேண்டுமோ என்ன?" என்று மிக விநயமாகக் கேட்டார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் "அதைப்பற்றித்தான் யோசனை செய்கிறேன். இருக்கட்டும்; அதைப்பற்றி என் முடிவை நான் சீக்கிரம் தெரிவிக்கிறேன். நான் இன்னொரு காரியத்தைப் பற்றியும் வந்தேன். கொஞ்ச நேரத்திற்குமுன் இரண்டு ஜெவான்கள் இங்கே வந்து டெலிபோன் மூலமாய்ப் பேசிய விஷயம் உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

போஸ்ட் மாஸ்டர்:—ஓ, தெரியும். ஏதோ வழிப்பறி நடந்துவிட்டதாமே!

நாகூர் மீரா லெப்பை:— ஆம். ஆம். டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராவ் ஸாகேப் ஐயருக்கு நேற்றிரவு எங்கிருந்தோ அவசர



மான தந்தி வந்ததாம். அவர் உடனே புறப்பட்டுப் போய்விட்டாராம். மற்றவர்கள் விடியற்காலம் போனார்கள். அப்படிப் போனவர்களைத்தான் திருடர்கள் தடுத்து, சிலரைக் கொண்டுபோயிருக்கிறார்கள்; சிலரைத் துரத்திவிட்டார்கள். இந்தச் செய்தியை நாங்கள் உடனே ராவ் ஸாகேப் ஐயருக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் எந்த ஊருக்குப் போயிருக்கிறாரென்பது தெரியவேண்டும். நேற்றிரவு அவருக்கு வந்த தந்தியின் நகல் இருந்தால் வரவழையுங்கள்.

அதைக் கேட்டவுடனே போஸ்ட் மாஸ்டர் முகமலர்ச்சியோடு, "இதோ வரவழைக்கிறேன்" என்று கூறியபடி மிகுந்த உற்சாகத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்து அழைப்பு மணியை அழுத்த, அடுத்த விநாடியில் திருவேங்கடம் வந்துசேர்ந்தான்.

போஸ்ட் மாஸ்டர், "தந்தி குமாஸ்தாவிடம் போய், நேற்றிரவில் வந்த தந்திகளின் நகல் புஸ்தகத்தோடு உடனே இங்கே வரச்சொல்" என்றார்.

அப்போது காலிடம்ளர் தரையில் வைக்கப்பட்டிருந்ததாகையால், திருவேங்கடம் அதையும் எடுத்துக்கொண்டு விரைவாக வெளியில் சென்றான்.

சிறிது நேரத்தில் ஒரு குமாஸ்தா அங்கே வந்துசேர்ந்தார். அவருடைய கையில் கார்பன் காகிதத்தோடு கூடிய ஒரு நோட்டுப் புஸ்தகம் காணப்பட்டது. அவர் ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்தவுடன் அவருக்கு ஒரு சலாம் போட்டுவிட்டு, போஸ்ட்மாஸ்டருக்குப் பக்கத்தில் போய் நின்றார்.

போஸ்ட் மாஸ்டர், "நேற்றிரவு வந்த ஏதோ ஒரு தந்தியைப் பற்றி ஸப்-இன்ஸ்பெக்டர் ஐயாவுக்கு ஏதோ தகவல் தெரியவேண்டுமாம். அவர்கள் கேட்பதைச் சொல்லும்" என்றார்.

குமாஸ்தா நாகூர் மீரா லெப்பையைப் பார்த்து, "உங்களுக்கு என்ன தகவல் தேவை?" என்று மிக விநயமாகக் கேட்டார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நேற்றிரவு டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராவ்ஸாகேப் சமய சஞ்சீவி ஐயருக்கு ஓர் அவசரத்தந்தி வந்ததே. அது எங்கிருந்து வந்தது?

குமாஸ்தா:—அந்தமான் தீவிலுள்ள போர்ட் பிளேரிலிருந்து வந்தது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—தந்தியை அனுப்பியவர் யார்?

குமாஸ்தா:—அதில் மிஸ்டர் பம்ப்கின்ஸ் என்று கையெழுத்துச் செய்யப்பட்டிருந்தது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—தந்திக்கு நகல் இருந்தால் எடுங்கள்—என்றார்.

உடனே குமாஸ்தா தமது கையிலிருந்த நோட்டுப் புஸ்தகத்தின் காகிதங்களை அவசர அவசரமாகப் புரட்டினார்; ஒரு தரம் முதலிலிருந்து கடைசிவரையில் புரட்டினார்; மறுதரம் கடைசியிலிருந்து முதல் பக்கம் வரையில் புரட்டினார். அவருடைய முகம் விகாரமாக மாறியது. அவருடைய தோற்றம் தடுமாற்றத்தைக் காட்டியது. குமாஸ்தா மெல்லவும் மாட்டாமல், விழுங்கவும் மாட்டாமல் தத்தளிக்கிறார். அவர் எந்த நகலைத் தேடினாரோ அதைத் தவிர மற்றவை எல்லாம் காணப்பட்டன.

அவருடைய வேதனையைக் கண்ட போஸ்ட்மாஸ்டர், "என்ன ஒரு நாழிகையாய்த் தடவுகிறீரே! இன்னுமா நகல் அகப்படவில்லை! நோட்டை இப்படிக் கொடும்" என்று கூறியபடி அதை வாங்கி அவசர அவசரமாகப் பக்கங்களைத் தள்ளினார். அவருடைய முகம் நேர்வாள மருந்துண்டவருடைய முகம்போலாயிற்று. கைகால்கள் நடுங்குகின்றன.

போஸ்ட் மாஸ்டர், "என்ன ஆச்சரியம்! அது மாத்திரம் காணப்படவில்லையே! அதை யார் எடுத்திருப்பார்கள்! நடுவில் ஒரு காகிதம் கிழிபட்டிருப்பது நன்றாகத் தெரிகிறதே" என்றார்.

அதைக் கேட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்தவராய், "ஏதேது! எங்கே கையை வைத்தாலும் பாம்பும் தேளுமாய் இருக்கின்றனவே! மற்ற நகல்கள் எல்லாம் இருக்க, இதற்கு மாத்திரம் எந்தத் திருடன் வந்திருப்பான்! அதனால் யாருக்கு என்ன உபயோகம்!" என்றார்.

உடனே போஸ்ட் மாஸ்டர், "அதைப்பற்றி அக்கரை இல்லை. உடனே போர்ட் பிளேர் போஸ்ட் மாஸ்டரிடம் கேட்டு, அதன் விஷயத்தை மறுபடி தெரிவிக்கும்படி செய்து, நகல் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அது தூரமான இடம். தந்தி போகவும், மறுமொழி வரவும் குறைந்தது ஆறுமணி காலமாவது பிடிக்கும். நான் உடனே தந்தியனுப்பி, அதை வரவழைத்து வைத்துக் கொண்டு டெலிபோன் மூலம் உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றார்.



ஸப்-இன்ஸ்பெக்டர்:—சரி, அப்படியே செய்யுங்கள் (குமாஸ்தாவை நோக்கி) ஏன், ஐயா, அதன் விஷயம் உங்களுக்கு நினைவிருக்கிறவரையில் சொல்லுங்களேன்.

குமாஸ்தா:—(சற்று நேரம் ஆழ்ந்து யோசனை செய்து) ஆம், ஆம், இப்போது விஷயம் நினைவிற்கு வருகிறது. போர்ட் பிளேரில் இருந்து இரண்டு கைதிகள் தப்பித்துக்கொண்டு எங்கேயோ போய் விட்டார்களாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(திடுக்கிட்டு) அவ்வளவுதானா நினைவிற்கு வருகிறது?

குமாஸ்தா:—அவர்கள் அநேகமாய் சென்னைக்கு வந்திருக்கலாமென்று நம்புவதாகவும், அவர்களை உடனே பிடிக்க முயர்சிக்க வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்ததது போல நினைவுண்டாகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவ்வளவு தானா! அதற்குமேல் எதுவும் நினைவிற்கு வரவில்லையா? கைதிகளுடைய அடையாளம் பெயர் முதலியவை கொடுக்கப்படவில்லையா?

குமாஸ்தா:—பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகள் நினைவிற்கு வரவில்லை. அவர்கள் இருவரும் தஞ்சாவூர் செஷன்ஸ் கோர்ட்டில் தண்டனை பெற்றவர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. வழக்கின் வருஷமும் நம்பரும் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகள் நினைவிற்கு வரவில்லை—என்றார்.

நாகூர் மீரா லெப்பை:—(போஸ்ட் மாஸ்டரை நோக்கி) நீங்கள் சொன்னபடி உடனே போர்ட் பிளேருக்குத் தந்தியனுப்பி நகலை வரவழையுங்கள்.

போஸ்ட் மாஸ்டர்:—சரி; அதை உடனே செய்கிறோம்—என்றார். அதுவன்றி ஸப்-இன்ஸ்பெக்டர் 3 தந்தி பாரங்களை வரவழைத்து போர்ட் பிளேர், தட்சாவூர், யேலூர் ஆகிய மூன்றிடங்களிலுள்ள போலீஸ் தலைமை அதிகாரிகளுக்கும் செய்திகள் எழுதினார். வேலூர் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராவ் ஸாகேப் சமய யஞ்சீவி ஐயர் அங்கே வந்திருக்கிறாரா என்பதை உடனே தெரிவிக்கச் செய்யும்படி ஷை தந்தியில் கேட்டிருந்தார். அவைகளையும் உடனே அனுப்பும்படியும், அவைகளில் ஒட்டப்பட

வேண்டிய ஸர்வீஸ் ஸ்டாம்புகளைத் தாம் ஆபீஸுக்குப் போன வுடன் அனுப்புவதாகவும் கூறினர்.

போஸ்ட் மாஸ்டர் அவைகளை ஒப்புக்கொண்டு, உடனே அனுப்புவதாக வாக்களிக்க, அதோடு நாகூர் மீரா லெப்பை எழுந்து தாம் செலவு பெற்றுக்கொள்வதாகச் சொல்லி போஸ்ட் மாஸ்டருக்கு சலாம் வைத்தார்.

போஸ்ட் மாஸ்டர் வியத்தோடு புன்னகை செய்து, "போஸ்ட்மேன் ஏழுமலையின் விஷயத்தைப்பற்றி நீங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டாம். அந்த விஷயத்தைப் பற்றி உங்களிடம் புகார் சொன்னது யார் என்பதை நீங்கள் இன்னமும் என்னிடம் சொல்லவில்லையே!" என்றார்.

நாகூர் மீரா லெப்பையும் புன்னகை செய்தபடி, "வேறு யார் கோள் சொல்லப் போகிறார்கள்! நீங்களேதான் சொன்னீர்கள்" என்றார்.

போஸ்ட் மாஸ்டர் அதன் கருத்தை அறியாதவராய், "என்ன! என்ன! நானா கோள் சொன்னேன்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம். நான் இங்கே வந்த நிமிஷம் வரையில் எனக்கு ஏழுமலை இன்ஷியூர்டு கடிதத்தை இழந்ததைப் பற்றிய செய்தி தெரியவே தெரியாது. என்னைக் கண்டவுடன், அப்பா குதிருக்குள் இல்லை என்று நீங்களே அந்த விஷயத்தைக் கிளப்பி விட்டீர்கள்; எனக்கு ஐஸ் போட்ட கலர் சப்ளை செய்தீர்கள்; என்னுடைய அவசர வேலையை அரைமணி காலம் தாமதப்படுத்தினீர்கள்" என்றார்.

அதைக் கேட்கவே, போஸட் மாஸ்டருடைய முகம் கூம்பியது. தாம் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் மூடத்தனமாய் நடந்துகொண்டதைப் பற்றி வெட்கமடைந்து குன்றிப்போனாரானாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாய்ப் பேசத்தொடங்கி, "சரி, எல்லாவற்றிற்கும் இந்த விஷயம் உங்களுக்குத் தெரிந்ததும் நல்லதாயிற்று. இன்ஷியூர்டு கடிதத்தை அபகரித்துக்கொண்டு போனவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கவில்லை. நீங்கள் அந்த விஷயத்தில் அவசியம் கவனம் செலுத்துவீர்கள். அதுவும் ஒரு நன்மைதான். சரி; நீங்கள் நிற்கிறீர்களே; சலாம்; போய் வாருங்கள்" என்று கூறி ஸப்-இன்ஸ்பெக்டருக்கு சலாம் வைத்தார்.



நாகூர் மீரா லெப்பை சந்தோஷ முகமலர்ச்சியோடு அவருக்கு சலாம் செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு தமது வீட்டிற்குப் போய்த் தமது சாப்பாட்டை முடித்துக்கொண்டு, மிஸ்டர் லவ்லக் துரையின் பங்களாவிற்குப் போய்ச்சேர்ந்து, போஸ்டாபீஸில் தாம் தெரிந்துகொண்ட விஷயங்களையும், செய்துவிட்டு வந்திருக்கும் ஏற்பாடுகளையும் தெரிவித்தார்.

உடனே ஜில்லா துரை, "நீங்கள் புறப்பட்டுப் போனவுடன் சென்னைப் பட்டணத்திலிருந்த எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. போர்ட் பிளேரிலிருந்து தப்பி வந்த இரண்டு கைதிகளைப்பற்றிய தகவல்கள் இதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை நீங்களே படித்துப் பாருங்கள்—என்று கூறியபடி ஒரு தந்திக் காகிதத்தை நாகூர் மீரா லெப்பையிடம் நீட்டினர்.

அவர் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவராய் அதைப் பெற்றுப் படித்து அதன் விஷயங்களைத் தெரிந்துகொண்டார். "ஓகோ கும்பகோணம் சட்டநாதபிள்ளையும் அவருடைய தம்பியான மாசிலாமணியுமா சாமர்த்தியமாகத் தப்பி வந்துவிட்டார்களாம்! பெரியவர் சட்டைக்கார துரை போலவும், சின்னவர் வார்டர்போல வும் உடைகள் தரித்திருந்தார்களாமே! அவர்கள் தாங்கள் இந்த ஊருக்கு வந்துவிட்டோமென்று காட்டிவிட்டார்கள். இன்ஷியூர்டு கடிதத்தை இழந்த தபாற் சேவகன் சொன்ன அடையாளங்களி லிருந்து அவர்களில் ஒருவன் மாசிலாமணி என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஒரு காலில் முழங்காலின் கீழ் பாகத்தில் கட்டுப் போடப்பட்டிருந்ததாம்; அந்த பாகத்தில் காலே தெரியவில்லை யாம். அவன் வார்டரைப்போல உடுப்புகள் போட்டிருந்தானும்.

மிஸ்டர் லவ்லக்:—(அபாரமான வியப்போடு) ஓ! தபாற்காரன் அப்படியா சொன்னான்! சரி; அப்படியானால் அவர்கள் இந்த ஊருக்கு வந்தார்கள் என்பது நிச்சயமாகிறது. அவர்கள் இந்த ஊரில் எங்கே தங்குவார்களோ!

நாகூர்மீரா லெப்பை:—அதே வேஷங்களில் இருந்தால், துரைகள் தங்கும் இடத்தில்தான் தங்கவேண்டும். மற்றவர்கள் அவர்களைச் சேர்ப்பார்களா!

மிஸ்டர் லவ்லக்:—இன்னுமா அந்த வேஷத்தில் இருப்பார்கள்! அந்த வேஷத்தைக் கலைத்திருப்பார்கள். எல்லாவற்றிற்கும்



199435

நீங்கள் போய், பிரயாணிகள் தங்கும் சத்திரங்கள், ஓட்டல்கள் முதலியவைகளில் பார்த்துவிட்டு வாருங்கள்—என்றார்.

நாகூர் மீரா லெப்பை உடனே துரிதமாக அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு அந்த ஊரின் ரயில்வே ஸ்டேஷனை யடைந்து அதற்கு அடுத்தாற்போல வெளியில் நின்ற போலீஸ் ஜெவானிடம் போய், தப்பி வந்த இரண்டு கைதிகளின் உடுப்பு அடையாளங்களைச் சொல்லி, அம்மாதிரியான பிரயாணிகள் இருவர் சில தினங்களுக்கு முன் வந்ததை அவன் பார்த்தானா என்று விசாரிக்க, அவன் தான் பார்த்ததாக நினைவுண்டாகவில்லையென்று சொல்லிவிட்டான். அதேபோல, அந்த ரஸ்தாவின் இதர இடங்களிலும், கடைத் தெருவிலும் நின்ற ஜெவான் ஒவ்வொருவனிடத்திலும் அவர் சென்று, முதலாவது ஜெவானிடம் கேட்டதுபோலவே கேட்க, பெரும்பாலோர் தமக்கு நினைவுண்டாகவில்லை என்றே சொல்லிவிட்டனர்.

ஆனால் குஜிலிக் கடைத்தெருவண்டை நின்ற ஓர் எட்கான்ஸ்டேபில, "ஆம். அம்மாதிரியான உடுப்புகளோடிருந்த இரண்டு ஆசாமிகளை நான் சுமார் 3 தினங்களுக்கு முன் இங்கே பார்த்தேன். இளநீர் வெட்டி விற்ற ஒருவனுக்கும், அவர்களுக்கும் சண்டை உண்டாகிவிட்டது. அவர்கள் கொடுத்த வெள்ளி இரண்டணா செல்லாதென்றும், நிக்கல் இரண்டணாதான் செல்லுமென்றும் அவன் சொன்னான். அவர்கள் வெள்ளி இரண்டணாதான் கொடுப்போம் என்றும், வாங்காவிட்டால், தாங்கள் வேறு பணம் கொடுக்காமல் போய்விடுவோமென்றும், அதைப்பற்றி போலீஸாரிடம் சொல்லிக்கொள்ளலாமென்றும் சொன்னார்கள். அவன் அவர்களை விடாமல் அவர்களுடைய சட்டையைப் பிடித்துக்கொண்டு இழுத்தான். அவர்கள் அவனை அடிக்கப் போனார்கள். அவன் அவர்களைக் கத்தியால் வெட்டிவிடுவதாக பயமுறுத்தினான். நான் அதைக் கண்டு அங்கே ஓடி சமாதானப்படுத்தி அவர்களை அனுப்பி வைத்தேன். உடனே அவர்கள் ஒரு குதிரை வண்டியைக் கூப்பிட்டு, பிள்ளையார் கோவில் தெருவிற்குப் போகவேண்டுமென்று சொல்லி, வாடகை பேசி ஏறிக்கொண்டு போய்விட்டார்கள்.

நாகூர் மீரா லெப்பை:— வண்டிக்காரனுடைய அடையாளம் தெரியுமா?

எட்கான்ஸ்டேபில்:—பார்த்தால் கண்டுபிடிப்பேன்.



நாகூர் மீரா லெப்பை:—இங்கே வேறே யாராவது ஒரு ஜெவானை நிறுத்திவிட்டு நீ என்னோடு வா—என்றார்.

உடனே எட்கான்ஸ்டேபில் பக்கத்தில் ஒரு கட்டிடத்தில் இருந்த டெலிபோன் வழியாகப் போலீஸ் ஸ்டேஷன் ரைட்டருக்குத் தெரிவிக்க, ஐந்தே நிமிஷத்தில் ஒரு ஜெவான் ஸைக்கிள் வண்டியில் அங்கே வந்துசேர்ந்தான். அவனை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு எட்கான்ஸ்டேபில் ஸப்-இன்ஸ்பெக்டரோடு வர, அவர், "நாம் இப்போது ரயில் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கும் வண்டிக் கொட்டகையண்டை போய் நிற்போம். எல்லாக் குதிரை வண்டிக்காரர்களும் எப்படியும் அங்கே வந்துசேருவார்கள்" என்று கூறி, எட்கான்ஸ்டேபிலை அழைத்துக்கொண்டு, ரயில்வே ஸ்டேஷனை அடைந்து, அங்கிருந்த வண்டிக் கொட்டகைக்குப் போய்ச்சேர்ந்தார்.

அப்போது அவ்விடத்தில் சுமார் பத்து வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வண்டிக்காரர்கள் எல்லோரும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து தாயக்கொட்டை ஆடிக்கொண்டிருந்தனர்; சிலர் பீடி குடித்துக் கொண்டிருந்தனர்.

போலீஸாரைக் கண்டவுடன் அவர்கள் உளறியடித்துக் கொண்டு எழுந்தனர். வாயில் பீடியை வைத்திருந்தவர்கள் சடக்கென்று அதைப் பிடுங்கி மறைவில் எறிந்துவிட்டு அடக்க ஒடுக்கமாக நின்றனர். ஸப்-இன்ஸ்பெக்டர் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு, "ஓகோ, காசு வைத்து ஆடுகிறீர்களோ!" என்று முறைப்பாகக் கூறினார்.

ஒரு வண்டிக்காரன்:—இல்லே எசமான். குடிக்கறத்துக்குக் கஞ்சிக்குத் தாளம் போடுது. தாயக்கொட்டைக்குக் காசா கெட்டேடு. அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க எசமானே—என்றான்.

நாகூர் மீரா லெப்பை:—எட் கான்ஸ்டேபில், காய்களையெல்லாம் எடுத்து குப்பைத் தொட்டியில் போடு. ஆட்டம் என்ன? வண்டியை ஓட்டிக்கொண்டு தெருவோடு போனால் சவாரி கிடைக்கிறது—என்றார்.

எட்கான்ஸ்டேபில் உடனே அந்த உத்தரவை நிறைவேற்ற, அப்போது வண்டிக்காரர்கள் எல்லோரும் நிரம்பவும் பயந்துவிட்டவர்கள்போல், கைகளைக் கட்டிக்கொண்டு வரிசையாக நின்றனர். அப்போது அவ்விடத்தில் வேறு நான்கு வண்டிகள் வந்தன.

உடனே எட்கான்ஸ்டேபில் சந்தோஷ முகமலர்ச்சி யடைந்து, அவ்வண்டிகளில் ஒன்றின் வண்டிக்காரனைக் கூப்பிட, அவன் உடனே கீழே இறங்கி ஓடி வந்தான். போலீஸ்காரர் இருவரும் அவனை அழைத்துக்கொண்டு, தனியான ஓரிடத்திற்குச் சென்றனர். விஷயம் இன்னதென்பதைத் தெரிந்துகொள்ள மாட்டாமையால் அந்த வண்டிக்காரனுக்குக் குலைநடுக்கம் எடுத்துக் கொண்டது. தான் ஏதோ குற்றம் செய்துவிட்டதுபற்றி அவர்கள் தன்னைக் கொண்டுபோய் மறைவில் வைத்துக்கொண்டு மர்த்தனம் செய்யப்போகிறார்கள் என்ற பீதியினால், அவனுடைய பிராணனில் பெரும் பாகமும் போய்விட்டது. அந்த நிலைமையில் எட்கான்ஸ்டேபில், "டேய், அண்ணெக்கி ஒரு நாளு, குஜிலி மார்க்கட்டுலெ, ரெண்டு பேரே சவாரி ஏத்திக்கிட்டுப் போனியே. காபகம் வருதா?" என்றான்.

வண்டிக்காரன் :—இல்லீங்களே எசமான்.

எட் கான்ஸ்டேபில் :—அடெ கழுதெ. சரியா காபகப்படுத்திப் பாரு. ஒருத்தரு தொரை மாதிரி இருந்தாரு. இன்னொருத்தரு காலுலெ பெரிய முட்டை மாதிரி கட்டுப் போட்டிருந்தாரு. அவுரு சயிலு வார்டரு மாதிரி உடுப்புப் போட்டிருந்தாரு. எளனீர்க்காரனுக்கு வெள்ளி ரெண்டணா குடுத்தாங்க. அவன் வாணான்னு கத்தியாலே அவுகளெ வெட்ட வந்தானேடா. நீ கூட அப்பாலெ நிண்டியேடா!

வண்டிக்காரன் :—ஆமாங்க எசமான், ஆமாங்க எசமான். இப்ப காபகம் வருதுங்க.

எட் கான்ஸ்டேபில்:—அவுகளெ எங்கிட்டுக் கொண்டு போயி வுட்டே?

வண்டிக்காரன் :—தெரிலீங்களே!

எட் கான்ஸ்டேபில்:—பொய் பேசாதப்பேன். பொய் சொன்ன வாய்க்கி போஷணம் அத்துப் போவும். என்னமோ, ஏதோன்னே பயந்துக்கிட்டு சங்கதியெ அமுக்காதே; அதுனாலே ஒனக்குக்கெடுதி எதுவும் இல்லப்பேன். நல்லா காபகப்படுத்திப் பாத்துச் சொல்லு.

வண்டிக்காரன் :—ஓ! அவுங்களைப் பத்தியா கேக்கறீங்க. நம்ப புள்ளாரு கோவிலு இருக்குதல்ல. அதுக்குச் சோத்துக்கையி வாடேலே ஒரு ஊட்டுலெ உட்டேனுங்க.



எட் கான்ஸ்டேபில் :—அது ஆரோடெ ஊடு?

வண்டிக்காரன் :—தெரியாதுங்களே துரையே!

எட் கான்ஸ்டேபில் :—அந்த ஊட்டெக் காட்டுவியா?

வண்டிக்காரன் :—ஏஞ்சாமீ, அவுங்களெத் தேட்றீங்க?

எட் கான்ஸ்டேபில் :—அந்தக் கதையெல்லாம் ஒனக்கென்னத்துக்குடா! கேக்கறத்துக்கு சவாப்புக் குடு. அதுக்கு மேலெ அதனப்பிரசங்கம் வாணும். ஓட்டியா வண்டியே இப்பிடி—என்றார்.

வண்டிக்காரன் ஓரே ஓட்டமாக ஓடி வண்டியை ஓட்டிக்கொண்டு வர, எட் கான்ஸ்டேபில் ஏறி உள்ளே உட்கார்ந்துகொண்டான். ஸப்-இன்ஸ்பெக்டர் ஸைக்கில் வண்டியில் பின் தொடர்ந்து வந்தார். வண்டி பிள்ளையார் கோவில் தெருவை நோக்கிச் சென்றது. அவன் ஏதோ பெரிய தவறைச் செய்துவிட்டுப் போலீஸாரிடம் வசமாய் மாட்டிக்கொண்டானென்று நினைத்துக்கொண்டு, மற்ற வண்டிக்காரர்கள் எல்லோரும் கும்பலாய் தூர நின்றபடி கவனித்துக்கொண்டிருந்தனர்.

வண்டி ஒரு மாடி வீட்டின் முன்னால் போய் நின்றது. உடனே ஸப்-இன்ஸ்பெக்டரும், எட் கான்ஸ்டேபிலும், அந்த வீட்டின் நடையில் போய் நின்றனர். எட் கான்ஸ்டேபில், "ஐயா, ஐயா, ஆரு ஊட்டுலே?" என்றான். அடுத்த நிமிஷம் ஒரு ஸ்திரீ வந்து நின்று, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்றாள். அவளுக்கு வயது சுமார் 25-க்குமேல் 30க்குள் இருக்கலாமானாலும், அவள் நிரம்பவும் அழகான தோற்றமுடையவளாய் இருந்தாள். அவள் பட்டாடைகளையும் ஏராளமான ஆபரணங்களையும் அணிந்துகொண்டிருந்தாள்.

நாகூர் மீரா லெப்பை:—வீட்டின் ஆண்பிள்ளையை வரச் சொல்லுங்கள். அவரிடம் நாங்கள் சில சங்கதிகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அந்த ஸ்திரீ:—இந்த வீட்டில் ஆண்பிள்ளை இருப்பதாக யார் உங்களுக்குச் சொன்னது?

நாகூர் மீரா லெப்பை :—(புன்னகையோடு தமக்குத் தாமே 'வீட்டில் ஆண்பிள்ளை இருப்பது ஒரு பெரிய இளப்பபோலிருக்கிறதே!' என்று சொல்லிக்கொண்டு) இந்த வீட்டில் ஆண் பிள்ளை இருப்பதாக எங்களிடம் யாரும் சொல்லவில்லை. ஒரு வீட்டிற்கு

அன்னிய ஆண்பிள்ளைகள் வந்தால், சாதாரணமாய், வீட்டு ஆண்பிள்ளைகள்தான் வந்து அவர்களுடன் பேசுவார்கள். அதுதான் இருதிறத்தாருக்கும் மரியாதை. இந்த வீட்டில் ஆண்பிள்ளை இல்லையென்பது இப்போது நீங்கள் பேசிய விதத்தால் தெரிகிறது. அப்படியானால் நான் கேட்பதற்கு நீங்களே பதில் சொல்லுங்கள்.

அந்த ஸ்திரீ:—நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள்? கேளுங்கள்.

நாகூர் மீரா லெப்பை:—சில தினங்களுக்கு முன்பு, இந்த வீட்டிற்கு இரண்டு விருந்தாளிகள் வந்தார்களே; அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

அந்த ஸ்திரீ:—இந்த வீட்டுக்கு விருந்தாளிகள் யாரும் வரவில்லையே!

நாகூர் மீரா லெப்பை:—ஒரு குதிரை வண்டியில் இரண்டு ஆண்பிள்ளைகள் இங்கே வந்தார்கள். அவர்களை ஏற்றிவந்த குதிரை வண்டிக்காரன் இதோ வந்திருக்கிறான். அவர்கள் உள்ளே இருந்தால இப்படி வரச் சொல்லுங்கள்.

அந்த ஸ்திரீ:—ஓகோ! அவர்களையா தேடுகிறீர்கள்! யாரோ இரண்டு பேர்கள் வந்தார்கள். அவர்கள் வேறே யார் வீட்டுக்கோ போக வேண்டியவர்கள்; உடனே போய்விட்டார்கள்.

நாகூர் மீரா லெப்பை:—உங்கள் வீட்டைத் தேடி வந்தவர்கள் ஏன் அவ்வளவு அவசரமாய்ப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்?

அந்த ஸ்திரீ:—அவர்கள் லீலாவதி அம்மாள் என்ற பெயருடைய ஒரு பெண்பிள்ளையைத் தேடிக்கொண்டு வந்தார்களாம். கடைத்தெருவில் விசாரித்ததில், யாரோ இந்த வீடென்று அடையாளம் சொன்னார்களாம். அதனால் அவர்கள் இங்கே வந்தார்களாம். தங்கள் தவறைத் தெரிந்துகொண்டவுடன் போய்விட்டார்கள்.

நாகூர் மீரா லெப்பை:—அப்படியானால், உங்கள் பெயரும் லீலாவதியம்மாள்தான் போலிருக்கிறது?

அந்த ஸ்திரீ:—ஆம், பெயர் ஒன்றாயிருப்பதனால்தான் அவர்கள் என் வீட்டைத்தான் தேடுகிறார்களென்று யாரோ அவர்களை இங்கே அனுப்பி விட்டார்கள்.

நாகூர் மீரா லெப்பை:—ஐயோ, பாவம். அவர்களுக்கு நீங்கள் சரியான இடத்தைச் சொல்லி அனுப்பினீர்களா?



அந்த ஸ்திரீ:—எனக்குத் தெரிந்திருந்தால் சொல்லி இருப்பேன். அவர்கள் எந்த லீலாவதியம்மாளைத் தேடுகிறார்களென்பது எனக்குத் தெரியவில்லை; பக்கத்தில் யாரிடத்திலாவது விசாரிக்கும்படி சொல்லியனுப்பி விட்டேன்.

நாகூர் மீரா லெப்பை:— அவர்கள் ஆண்பிள்ளையின் பெயரைச் சொல்லித் தேடாமல் பெண்பிள்ளையின் பெயரைச் சொல்லி ஏன் தேடினார்கள்? சாதாரணமாய் ஆண்பிள்ளைகள் இல்லாமல் தனியாயிருக்கும் விதவைகள், அல்லது, தாசிகள் முதலியோர்களைத்தான் அந்த மாதிரி குறிப்பார்கள்! அந்த அம்மாள் இன்னார் என்பதைப்பற்றி நீங்கள் விசாரிக்கவில்லையா?

லீலாவதி:— அவர்கள் தேடிய லீலாவதி அம்மாளின் புருஷனுக்குப் போலீஸில் ஏதோ உத்தியோகம் என்று சொன்னார்கள்.

நாகூர் மீரா லெப்பை:—சம்சாரத்தின் பெயர் அவ்வளவு பிரபலமாகும்படி விட்டிருக்கும் ஆண் சிங்கம் இந்த ஊர்ப் போலீஸ் இலாகாவில் யாரும் இல்லையே! நீங்கள் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறதே! நீங்கள் தனியாகவா இங்கே இருக்கிறீர்கள்?

லீலாவதி:—ஆம்.

நாகூர் மீரா லெப்பை:—நீங்கள் எப்படி ஜீவனம்செய்கிறீர்கள்?

லீலாவதி:—எனக்கு இந்த ஊரில் கொஞ்சம் சொத்திருக்கிறது. இந்த வீடு என் சொந்த வீடு. நான் இந்த ஊர் காமாக்ஷியம்மன் கோவில் தேவதாசி—என்றாள்.

அதைக் கேட்கவே, ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகம் ஒரு விதமான வெறுப்பைத் தோற்றுவித்தது. ஆயினும், அவர் அவளைப் பார்த்து, "அவர்களில் ஒருவர் துரை மாதிரியும், இன்னொருவர் ஜெயில் வார்டர் மாதிரியும் இருந்தார்களல்லவா?" என்றார்.

லீலாவதி:—நான் தேவதாசியாயிருந்தாலும் பரம்பரையாய் சொத்து சுதந்தரங்களுடன் மானமாய் ஜீவனம் செய்துவருகிறவள். அன்னிய புருஷர் எவரேனும் வந்தால், நான் அவர்களுடைய முகத்தையோ, உடம்பையோ பார்ப்பதில்லை. ஆகையால், அவர்கள் இருவரும் எப்படி இருந்தார்கள், அல்லது, என்னென்ன உடைகளை அணிந்திருந்தார்கள் என்று பார்க்கவில்லை—என்றாள்.

உடனே நாகூர் மீரா லெப்பை, "அடேய் வண்டிக்காரா! இப்படி வா. அவர்கள் இருவரும் குஜிலி மார்க்கட்டண்டையல்லவா

உன்னுடைய வண்டியில் ஏறினார்கள்? பிள்ளையார் கோவில் தெருவில் எங்கே கொண்டுவந்து விடவேண்டுமென்று பேசினார்கள்?" என்றார்.

வண்டிக்காரன்:— அம்மங் கோவிலு தாசியம்மா வூட்டுலெ வுடனும்னு சொன்னாங்க.

நாகூர் மீரா லெப்பை:—(லீலாவதியை நோக்கி) என்ன அம்மா, இவன் இப்படிச் சொல்லுகிறான்? அப்படியானால், யாரோ ஒரு போலீஸ்காரருடைய சம்சாரம் அம்மன் கோவிலில் தாசி உத்தியோகம் வகித்திருப்பதாக அல்லவா அர்த்தம் ஆகிறது.

லீலாவதி:—அதையெல்லாம் என்னிடம் கேட்பதில் உபயோகமென்ன? அதில் சம்பந்தப்படுகிறவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாகூர் மீரா லெப்பை:—அம்மன் கோவில் என்பது காமாக்ஷியம்மன் கோவில்தானே? அதில் உங்களைத்தவிர வேறு தேவதாசிகள் இருக்கிறார்களா?

லீலாவதி:—அம்மன் கோவில் என்றால், இன்னம் வேறே ஏதாவது அம்மன் கோவிலைக் குறித்தார்களோ என்னவோ! நீங்கள் இந்த ஊரில் இருப்பவர்கள்தானே? இங்கே எத்தனை கோவில்கள் இருக்கின்றன, எத்தனை தேவதாசிகள் இருக்கிறார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? தெரியாவிட்டாலும், ஊரில் விசாரித்தால் சொல்லுகிறார்கள். வெளியில் போய் வருகிறவர்களான நீங்கள் வீட்டிற்குள்ளிருக்கும் பெண்பிள்ளையிடம் இதையெல்லாம் கேட்கிறீர்களே!

நாகூர் மீரா லெப்பை:—நீங்கள் கோவில் விஷயங்களில் அநுபவசாலியாதலால், உங்களிடம் கேட்டால், சுலபத்தில் தெரியுமென்று கேட்டேன். உங்களுக்குத் தெரியாதென்றால், கட்டாயமில்லை. அதிருக்கட்டும். இப்போது இந்த வீட்டில் உங்களோடு வேறே யாரும் இல்லையா?

லீலாவதி:—இல்லை.

நாகூர் மீரா லெப்பை:—நாங்கள் உள்ளே போய்ப் பார்க்கலாமா!

லீலாவதி:—நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா?



நாகூர் மீரா லெப்பை:—அப்படி நான் சொல்லவில்லையே! மற்றவர் சொல்வதோடு நாங்கள் திருப்தியடைந்து போய்விடக் கூடாது. சந்தேகப்பட்ட ஆசாமிகள் ஓரிடத்தில் இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தால், நாங்கள் தலைப்பொறியாய் அந்த இடத்தையெல்லாம் ஓர் இண்டு இடுக்குகூட விடாமல் தேடிப் பார்த்துவிட வேண்டுமென்று போலீஸ் பிரம்மா எங்கள் தலையில் எழுதியிருக்கிறார். அதுவே தவிர, ஒருவர் சொல்வதை நம்புவது, இன்னொருவர் சொல்வதில் அவநம்புதல் கொள்வது என்று நாங்கள் சுயேச்சைப்படி நடக்க முடியாது.

லீலாவதி:—இந்த ஐயாமாத்திரம் உள்ளே வந்து பார்க்கட்டும். உங்களுக்கு ஏன் அந்தப் பிரயாசை?

நாகூர் மீரா லெப்பை:—நான் அதிக சம்பளம் வாங்குகிறவன். ஆகையால் எல்லாப் பிரயாசையையும் நான்தான் வகிக்க வேண்டும். இவன் சொற்ப சம்பளக்காரன். இவன் சொற்பமாகத்தான் வேலை செய்வான். ஆகையால் வீட்டை சோதனைபோடும் வேலையை இவனுக்குக் கொடுத்தால், இவன் செய்ய மாட்டான்.

லீலாவதி:—நீங்கள் ஜாதியில் ஹிந்துவா?

நாகூர் மீரா லெப்பை:—(புன்னகை செய்தபடி) ஏது நீங்கள் கூட ஜாதி விஷயத்தில் இவ்வளவு கவலையோடு கேட்பது! தெய்வத்திற்கும் ஜாதி வித்தியாசமில்லை; தெய்வத்திற்குப் பணிவிடை செய்யும் தெய்வ தாசிகளுக்கும் ஜாதி வித்தியாசமில்லை என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதேபோல போலீஸ் பிரம்மாவுக்கும் ஜாதி வித்தியாசமில்லை. அந்தந்த ஜாதியார் வீட்டில் அந்தந்த ஜாதி உத்தியோகஸ்தன்தான் சோதனை போடவேண்டுமென்று அந்த பிரம்மா சட்டமிடவில்லை. நாங்கள் என்ன செய்கிறதம்மா.

லீலாவதி:—நீங்கள் சாயப்பு வகுப்பைச் சேர்ந்தவர்கள்போலிருக்கிறீர்களே?

நாகூர் மீரா லெப்பை:— (புன்னகையோடு) என்ன அம்மா என்னை நீங்கள் 'போலி' சாயப்பு வென்கிறீர்களே? நான் ஸாயப்பு அல்ல போலவா இருக்கிறேன்? அப்படியானால் நான் நிஜ ஸாயப்பு என்கிறீர்களா?

லீலாவதி:—நீங்கள் ஸாயப்புவாயிருக்கிறீர்களே, ஹிந்துவாகிய எங்கள் வீட்டிற்குள் நுழைகிறேனென்கிறீர்களே?

நாகூர் மீரா லெப்பை:—'உயர்ந்த ஜாதியாரான ஸாயப்பு நம் வீட்டிற்குள் நுழைகிறேனென்கிறாரே' என்பது உங்கள் கவலையா? அப்படியானால், இந்தக் காரியம் முடிந்தவுடன், நான் ஆற்றில் அல்லது குளத்தில் தலைமுழுகிவிடுகிறேன். தலை மயிரைக் காய வைத்துக் கொள்ளவேண்டுமென்ற உபத்திரவம் எனக்கு இல்லை. நான் எத்தனை தடவை வேண்டுமானாலும் தலை முழுகலாம்—என்றார்.

அதற்குமேல் லீலாவதி அவருக்கு மறுமொழி கொடுக்கவில்லை யாதலால், அவரும் எட்கான்ஸ்டேபிலும் லீலாவதியுடன் வீட்டிற்குள் புகுந்து மிக ஜாக்கிரதையாக எல்லா இடங்களையும் சோதித்துப் பார்த்துவிட்டு வெளியில் வந்தனர். போர்ட் பிளேரிலிருந்து தப்பிவந்த கைதிகள் அந்த வீட்டின் வரையில் வந்தனர் என்பது சந்தேகமறத் தெரிந்ததானாலும், அங்கிருந்து அவர்கள் எங்கே போயினர் என்பது மர்மமாயிருந்தது. அம்மன்கோவில் தாசி அம்மாளுடைய வீட்டிற்கு ஓட்டும்படி கைதிகள் வண்டிக்காரனிடம் கேட்டுக் கொண்டதிலிருந்து, அந்த லீலாவதியம்மாளுடைய வீட்டிற்கே அவர்கள் வர எண்ணினரென்பதும், அவர்களுக்கும் லீலாவதியம்மாளுக்கும் இரகசியமான சம்பந்தம் ஏதாகிலும் இருக்கவேண்டும் என்பதும் நிச்சயமாயின. அதற்கு மேல் விஷயம் எதுவும் விளங்கவில்லை.

ஆதலால் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை அவ்வளவோடு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார். அவ்விடத்தில் குதிரை வண்டிக்காரனை அனுப்பிவிட்டு, எட்கான்ஸ்டேபிலை நோக்கி. "நீ உன் உடுப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு, இந்த லீலாவதியம்மாளுக்குத் தெரியாதபடி ஏதாவதொரு வேஷம் போட்டுக்கொண்டு, அவளுடைய வீட்டிற்கு எதிரில் போய் கவனித்துக்கொண்டிருந்து, அவளுடைய வீட்டிற்கு யார் யார் வருகிறார்கள், அவள் எங்கே போகிறாள் என்பதையெல்லாம் பார்த்து உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்றார்.

எட்கான்ஸ்டேபில்:—அங்கு எவராவது வந்து போனால், அவரைத் தொடர்ந்து போகவேண்டும்; அதே காலத்தில் வீட்டில் இருக்கும் லீலாவதியையும் கவனிக்கவேண்டும். நான் ஒருவன் மாத்திரம் இருப்பது போதாது.

நாகூர் மீரா லெப்பை:— அப்படியானால், இன்னம் இரண்டு ஜெவான்களையும் உடுப்பில்லாமல் அழைத்துக்கொண்டு போ. எல்



லோரும் பிச்சை வாங்கும் பண்டாரங்கள்போல் வேஷம் போட்டுக் கொண்டுபோய் எதிர்த்த வீட்டுத் திண்ணையில் படுத்திருந்து கவனியுங்கள்—என்றார்.

உடனே எட்கான்ஸ்டேபில் அவருக்கு சலாம் வைத்துவிட்டுப் போய்விட்டான். பிறகு நாகூர் மீரா லெப்பை அன்று கோர்ட்டில் நடந்த சுந்தரத்தின் வழக்கு விசாரணையைப்பற்றிய விவரங்களை ரைட்டரிடம் தெரிந்துகொண்டு, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு மிஸ்டர் லவ்லக் துரையுடைய கச்சேரிக்குப் போய், தாம் தெரிந்துகொண்ட விஷயங்களையெல்லாம் கூற, அதைக் கேட்ட ஜில்லா துரை நிரம்பவும் சந்தோஷமடைந்தவராய், "சரி; மர்மமெல்லாம் இப்போது அந்த லீலாவதியினிடம் அடங்கி இருக்கிறது. அவள் இன்ன தெருவில் இருக்கிறாள் என்பது கைதிகளுக்குத் தெரிந்திருக்கதிலிருந்து, அவர்கள் தண்டனை அடைந்த காலத்திலேயே இவளைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பது நிச்சயமாய்த் தெரிகிறது. அவர்கள் இப்போது இவளுடைய வீட்டில் இல்லையானாலும், இவளுடன் அவர்கள் எப்படியும் சம்பந்தப்படுவார்கள். ஆகையால், எட்கான்ஸ்டேபிலை நீங்கள் நியமித்திருப்பது சரியான ஏற்பாடுதான். நீங்கள் அடிக்கடி போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். அந்த சுந்தரத்தின் வழக்கு முடிந்துவிட்டதா?

நாகூர் மீரா லெப்பை:— உங்களுடைய மோட்டார் வண்டியைத் திருடிய குற்றத்திற்காக ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டதாம். ஜட்ஜ் கந்தசாமிபிள்ளையின் வீட்டில் நடந்த திருட்டில் அவன் சம்பந்தப்பட்டதற்கு திருப்திகரமான சாட்சியில்லாமையால், அந்தக் குற்றம் ருஜுப்படுத்தப்படவில்லை என்று மாஜிஸ்டிரேட் சொல்லிவிட்டாராம்.

மிஸ்டர் லவ்லக்:—இந்த சுந்தரம் தண்டனை அடைந்துவிட்டானானாலும், அவன்தான் என்னுடைய மோட்டார் வண்டியைத் திருடியவன் என்ற திருப்தி என்மனதிற்கே இன்னமும் ஏற்படவில்லை.

நாகூர் மீரா லெப்பை:—ஏன் திருப்தி ஏற்படவில்லை? பல காரணங்களைக்கொண்டுதானே மாஜிஸ்டிரேட் தண்டித்திருக்கிறார்.

மிஸ்டர் லவ்லக்:—என்னென்ன காரணங்கள்?

நாகூர் மீரா லெப்பை:—அவனைப் போலீஸார் அரெஸ்ட் செய்தபோது, அவன் மோட்டார் ஓட்டியின் உடைகளோடு உங்

களுடைய வண்டியில் காணப்பட்டான். இது முதலாவது பாயின்ட். அவனிடம் அப்போது டிரைவர் லைசென்ஸ் இல்லாதது இரண்டாவது பாயின்ட். அவன் நிரபராதியா யிருந்தால், அவன் ஜனங்களோடு ஓடியிருக்கமாட்டான். அவன் ஓடினது சம்சயத்தை உண்டாக்குகிறது. இது மூன்றாவது பாயின்ட். நேற்று மாலையில் ஜட்ஜ் கந்தசாமிபிள்ளையின் பங்களாவில் திருட்டு நடந்தபோது, இவன் பின்புறச் சந்தில் ஒளிந்து நின்று, ஜெவான்களை கண்டவுடன் ஓடியது இவன் சம்சயமான நடத்தையுடைய ஆசாமி என்பதைக் காட்டுகிறது. இது நான்காவது பாயின்ட். இத்தனை காரணங்களையும் கவனித்தே மாஜிஸ்டிரேட் அவனுக்கு தண்டனை கொடுத்தார்.

மிஸ்டர் லவ்லக்:—அவர் ஏற்கனவே நல்ல நிலைமையில் இருந்தார். இப்போது ஏழ்மை நிலைமையில் இருக்கிறார். மோட்டார் வண்டி சுலபத்தில் விற்கப்படக் கூடிய சாமானா, அதை இவர் திருடியிருப்பாரா என்பதை மாஜிஸ்டிரேட் கவனிக்கவில்லை.

நாகூர் மீரா லெப்பை:—கையு மெய்யுமாய்த் திருட்டு சொத்தோடு ஆசாமி பிடிபட்டிருக்கையில், அதன் உசிதா உசிதத்தை மாஜிஸ்டிரேட் கவனித்து, போலீஸ் ஜெவான்களுடைய சாட்சியத்தை அலட்சியம் செய்வது சட்ட விரோதமானதல்லவா. ஆதியில் அவர் நல்ல நிலைமையில் இருந்தாரென்றால், இப்போது அப்படி இருந்தால், திருடி இருக்கமாட்டாரே. இப்போது திருடி இருப்பதிலிருந்தே, இவருடைய நிலைமை கேவலமானதா யிருக்கவேண்டுமென்று ருஜுவாகிறதல்லவா!

மிஸ்டர் லவ்லக்:—என்ன இருந்தாலும் இன்னமும் என் மனதிற்கு திருப்தி ஏற்படவில்லை. சுந்தரம் யோக்கியமான மனிதர் என்ற எண்ணமே என் மனதில் படுகிறது. அவர் ஆதியில் முதலாவது சர்ஜன் பதவி வகித்தவர்; இவரிடம் ஆபரேஷன் செய்துகொள்ள வந்த ஒரு யௌவனப் பெண்ணிற்கு மயக்கங்கொடுத்துப் படுக்க வைத்தவர், அங்கே யாரும் இல்லையென்று கண்டு, அந்த ஸ்திரீயின் அதரத்தில் முத்தமிட்டாராம். அதை சிலர் பார்த்துவிட்டனராம். அது விபரீதமாய் வளர்ந்துவிட்டது. இனி இவர் வைத்தியத் தொழிலே செய்யக்கூடாதென்று துரைத்தனத்தார் உத்தரவு பிறப்பித்து, இவரை வேலையிலிருந்து விலக்கிவிட்டார்களாம். அந்தக் குற்றத்தைத் தவிர இவர் இதுவரையில் வேறு எந்தக் குற்றமும் செய்ததாகத் தெரியவில்லை. இப்படியெல்லாம் நீங்கள் அவசரப்



பட்டு மனிதர்களை தண்டனைக்குக் கொண்டுபோவது அவ்வளவு உசிதமானதல்ல. இதிருக்கட்டும். இவரும், இந்த ஊர் முதலாவது ஸர்ஜனும் ஓர் இரகஸியக் கூட்டத்தார் கோஷா ஸ்திரீகள் போல் வேஷம் போட்டுக்கொண்டு மறைந்து வேலை செய்வதாகச் சொன்னார்களே. அவர்களைக் கண்டுபிடிக்க நீங்கள் என்ன முயற்சி எடுத்துக்கொண்டீர்கள்? ஸப்-இன்ஸ்பெக்டர் நாராயணசாமியை யார் தூக்கிக்கொண்டு போனார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள நீங்கள் முயற்சி செய்தீர்களா? ராவ் சாகேப் ஐயருடைய மோட்டார் வண்டியைக் கண்டுபிடிக்க என்ன ஏற்பாடு செய்தீர்கள்? ராவ் சாகேப் ஐயர் நம்மெல்லோரையும் அவசியம் வீட்டிற்கு அனுப்பிவிடுவார் என்பது கவனத்தில் இருக்கட்டும். யாரோ டெலிபோனில் ராவ் சாகேப் ஐயரிடம் உங்களுடைய கட்சியைத் தாங்கி, அவரை பயமுறுத்தினார்களாம். இவ்விஷயங்களெல்லாம் உங்களுக்கு முடிவில் கெடுதலாக முடியும். ஆகவே, நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள்—என்றார்.

அப்போது டெலிபோன் கலகலவென்று ஓசை செய்தது. நாகூர் மீரா லெப்பை எழுந்துபோய், "யாரது?" என்று கேட்க, மற்றவர், "நான் ஜில்லா ஜட்ஜ் கந்தசாமிபிள்ளை; நீங்கள் ஸப்-இன்ஸ்பெக்டர் மிஸ்டர் லெப்பையா?" என்றார்.

நாகூர் மீரா லெப்பை:—ஆம். நான் நாகூர் மீரா லெப்பை தான். என்ன விசேஷம்?

## அத்தியாயம்—7

### உம்மணா மூஞ்சிக்கு அம்மணிகள் மூவர்

ஜில்லா ஜட்ஜ்:—திருடன் இன்னான் என்பது தெரிந்ததா?

நாகூர் மீரா லெப்பை:—(சந்தோஷத்தோடு) ஓ, தெரிந்துபோய்விட்டது.

கந்தசாமி பிள்ளை:—(வியப்போடு) யார் அவன்?

நாகூர் மீரா லெப்பை:—இந்த ஊரில் வயத்து நாதையர் என்ற பெயருடன் ஒரு வக்கீல் இருக்கிறார். அவரைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம்.

கந்தசாமி பிள்ளை :—ஆம், தெரியும். அவருக்கும் திருடருக்கும் என்ன சம்பந்தம்?

நாகூர் மீரா லெப்பை :—அவருடைய மைத்துனரே முன் தடவையில் உங்கள் பங்களாவில் திருடி தண்டனை அடைந்தவர் என்பது சந்தேகமறத் தெரிந்துபோய்விட்டது. அவரை சென்ற வருஷத்தில் சிறைச்சாலைக்கு அனுப்பியபோது நாங்கள் அவருடைய போட்டோப்படம் ஒன்று எடுத்திருந்தோம். அதை நான் நேற்று பார்த்தேன். அதே ஆசாமி நேற்றிரவு சாப்பாட்டு ஓட்டலிலிருந்து வந்ததைக் கண்டு, அவர் யாரென்று ஓட்டல்காரரிடம் விசாரித்ததில், ராமநாதன் என்றும், அவர் வக்கீல் வயத்துநாதையருடன் சம்பந்தப்பட்டவரென்றும் தெரிந்துகொண்டேன். அந்த வக்கீலின் மைத்துனருடைய பெயரும் அதுதானென்பதும் தெரிந்தது—என்று கூறி, தாம் பிறகு வக்கீலின் வீட்டில் செய்த விசாரணையின் விவரத்தையெல்லாம் தெரிவித்தார்.

அந்த வரலாற்றைக் கேட்ட ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை ஆச்சரியமடைந்தவராய், "இது பெரிய வேடிக்கையாயிருக்கிறதே! அப்படியானால் தண்டனை அடைந்தவரான ராமநாதன் என்பவர் நிரபராதியான மனிதர் என்றல்லவா நினைக்கும்படியாயிருக்கிறது" என்றார்.

நாகூர் மீரா லெப்பை :— நான் வக்கீலின் வீட்டை விட்டு ஸ்டேஷனுக்கு வந்து கால் மணி நேரம் அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று ஓர் ஐயர் என் முன்னால் வந்து நின்றார். "யார் நீங்கள்?" என்றேன். அவர், "நான் வக்கீல் வயத்துநாதையருடைய வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரன். கொஞ்ச நேரத்திற்குமுன், வக்கீலுக்கும் அவருடைய சம்சாரத்துக்கும் சண்டை நடந்தது. உடனே துப்பாக்கி வெடித்த ஓசை உண்டாயிற்று. வக்கீலின் வீட்டில் யாரோ யாரையோ சுட்டுக் கொன்றிருக்க வேண்டுமென்ற சம்சயம் உண்டாகிறது. நானும் பக்கத்து வீட்டுக்காரர்களும் போய்ப் பார்த்ததில், முன் கதவு தாளிடப்பட்டிருக்கிறது. நாங்கள் கதவைத் தட்டினோம். யாரும் கதவைத் திறக்கவில்லை. ஆகையால் சங்கதியை உங்களிடம் தெரிவிக்கலாமென்று வந்தேன்" என்றார். அதைக் கேட்டவுடன் நான் திடுக்கிட்டுப் போனேன். வக்கீலின் சம்சாரம் என்னிடம் உண்மையை ஒப்புக்கொண்டதைப் பற்றி, வக்கீல் அந்த அம்மாளின்மேல் பெரிதும் கோபம் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியுமாதலால், அந்த ஆத்திரத்தில்



அவர் தம்முடைய சம்சாரத்தை சுட்டுவிட்டாரோ என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று. நான் அந்த ஐயரைப் பார்த்து, "வெடி ஓசை உண்டானதற்கு முன் அவர்கள் பேசியது ஏதாவது காதில் விழுந்ததா?" என்று கேட்டேன். அவர், "அந்த அம்மாள் ஆத்திரமாக அடியில் வரும் வார்த்தைகளைச் சொன்னது என் காதில் விழுந்தது" என்றார். அந்த அம்மாள் சொன்ன வார்த்தைகளாவன: 'படத்தில் இருப்பவன் என் தம்பி என்பது நிச்சயம். இவன் சிறையிலிருந்து வெளியில் வந்த தினம் மாலையில் அந்த சுப்பையா இவனைத் தொடர்ந்து வந்திருக்கிறான். இவன் நம்முடைய வாசல் வரையில் வந்தானாம். இவனோடு நீங்கள் ஆற்றங்கரைக்குப் போனீர்கள்; அங்கிருந்து ஓடி வந்து ஒட்டியாணத்தை வாங்கிக்கொண்டு போனீர்கள். அதன் பிறகு என் தம்பியும், நீங்களும் ஓட்டலுக்குப் போயிருக்கிறீர்கள். இதையெல்லாம் நேருக்குநேர் கேட்டால், அவர்களை உடாய்க்கிறீர்கள். நான் விஷயத்தைத் தெரிந்துகொண்டேன். உங்களுக்கு சம்பாத்தியமில்லை. என் தம்பியை ஏவி, ஜட்ஜியின் வீட்டில் திருடச்சொன்னீர்கள். அந்தத் திருட்டுச் சொத்தில் சேர்ந்ததே அந்த ஒட்டியாணமும். அது இங்கே இருந்தால் போலீஸார் பிடித்துக் கொள்வார்களென்று அவசரமாய் வாங்கிக்கொண்டு போனீர்கள். இப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் என் தம்பியின் படத்தைக் காட்டினால், கண்கள் கெட்டுப்போயிருப்பதாகப் பொய் சொல்லுகிறீர்கள்; நான் அதைப் பார்க்கக்கூடாதென்று, உங்களால் ஆனவரையில் தடுத்தீர்கள். அது பலிக்கவில்லை. என் தம்பியை அநியாயமாய்க் கெடுத்த மனிதரான உங்கள் முகத்தில் இனி விழிக்க எனக்கு இஷ்டமில்லை. அவனும், நீங்களும் இன்னும் திருட்டில் இறங்கி அவமானப் படுவதையும் கண்டு சகிக்க என்னால் ஆகாது,' என்று அந்த அம்மாள் சொல்ல, உடனே வெடி சப்தம் கேட்டது என்று அந்த ஐயர் தெரிவித்தார். உடனே நான் அவர் சொன்னதையெல்லாம் அப்படியே எழுதி அவரிடம் கையெழுத்துப் பெற்றுக்கொண்டேன்.

கந்தசாமி பிள்ளை :—இது விபரீத விஷயமாயிருக்கிறதே! முன் தடவை என் பங்களாவில் திருடப்பட்ட நகைகளில் ஒட்டியாணமும் ஒன்று என்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அதை அந்த வக்கீலா வைத்திருந்தார்! கண்ணியமான ஒரு வக்கீல், அதிலும் பிராம்மண ஜாதியார், அவர் இந்த மாதிரியான நடத்தையில்

இறங்கி இருப்பாரா என்பது எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கைப் படவே இல்லையே. அந்த அம்மாள் வெளியிட்ட அபிப்பிராயம் தப்பானதா யிருக்கலாம். நீங்கள் உடனே வக்கீலின் வீட்டிற்குப் போய்ப் பார்த்தீர்களா?

நாகூர் மீரா லெப்பை:—நான் சில ஜெவான்களுடன் போனேன். வெளிக்கதவு மூடப்பட்டிருந்தது. கதவைத் தட்டினோம். அதற்குமேல் சமயற்காரர் உட்புறத்திலிருந்து, "யார்?" என்று விசாரித்தார். போலீஸார் வந்திருப்பதாகச் சொன்னோம். அதன் பிறகு கால்மணி காலம் காத்திருந்தோம். கதவு திறக்கப்பட்டது. வக்கீல் எதிரில் நின்றார்; எங்களைப் பார்த்தவுடன் அவர் தமது இயற்கைப் படி கம்பீரமாக நிமிர்ந்து எங்களை அருவருப்பாகப் பார்த்து, "இது வரையில் இருந்து இழவுகொடுத்துவிட்டுப் போனீரே! இதற்குள் மறுபடி எங்கே வந்துசேர்ந்தீர்?" என்றார். அதைக் கேட்டவுடன், அவருடன் பேசுவதற்கு எனக்கே பயமா யிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் வந்து என்னிடம் தெரிவித்த தகவல்களை நான் அவரிடம் சொல்லி, அப்படி ஏதாகிலும் காரியம் நடந்ததா என்று கேட்டேன். வக்கீல் நிரம்பவும் ஆத்திரமாகப் பேசத்தொடங்கி, "ஏது போலீஸார் எங்களைத் தூங்கவிட மாட்டீர்கள்போ லிருக்கிறதே! எனக்கும், என் சம்சாரத்திற்கும் சண்டை உண்டாகவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா என்ன? இந்த வீட்டில் வெடி ஓசையாவது கேட்கிறதாவது! நீர் போனபிறகு, நாங்கள் போய்ப் படுத்துக் கொண்டோம். இப்போதுதான் என் சம்சாரம் தூங்க ஆரம்பித்தாள். எவனோ நடுவீதி நாராயணன் உம்மிடம் வந்து எதையோ உளறினால், அதைக் கேட்டுக்கொண்டு, நீர் இப்படி ஓடிவரலாமோ! இப்படி யெல்லாம் சொன்ன மனிதனுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டு மென்றே நினைக்கிறேன்" என்றார். உடனே நான், "சரி; உங்கள் மனைவி சரியான நிலைமையில் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டுப் போகவேண்டும். அவர்களை இப்படிக் கூப்பிடுங்கள்" என்றேன். உடனே அந்த அம்மாள் வக்கீலுக்குப் பக்கத்தில் நின்றபடி, "நான்தான் இதோ வந்து நிற்கிறேனே! வேண்டுமென்றே எங்கள்மேல் யாரோ தப்பான சங்கதிகளை யெல்லாம் சொல்லுகிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு நீங்கள் இப்படி அடிக்கடி வந்து எங்களை உபத்திரவிப்பது ஒழுங்கல்ல; எங்கள் வீட்டில் எந்த வெடியும் உண்டாகவில்லை; கார்த்திகை, அல்லது, தீபாவளியா யிருந்தால்



சீனா வெடி சத்தமாவது உண்டாயிருக்கும்" என்றார். அதைக் கேட்கவே, நான் தடுமாறிப் போய், சமயல்காரரைக் கூப்பிடச் செய்து, அவரிடம் கேட்டேன், அவர் "நேக்கு ஒண்ணுந் தெரியாதே! என்னைக் கேக்கறயளே! அதிர்வெடி கோவில்லெ போட்டாத்தான்! இஞ்செ ஏது?" என்றார்.

அதற்குமேல் அவர்களிடம் விசாரிப்பதில் உபயோக மில்லை என்று தீர்மானித்துக்கொண்டு நான் வந்துவிட்டேன். அந்த அம்மாளை வக்கீல் சுட்டாரா, அல்லது, அந்த அம்மாளே தன்னைச் சுட்டுக் கொண்டார்களா என்பது தெரியவில்லை. தோட்டா அந்த அம்மாள் மேல் படாமல் தவறிப்போ யிருக்கலாம். வக்கீல் சுட்டிருந்தால், அது கொலைசெய்ய எத்தனித்த குற்றமாகிறது; அந்த அம்மாளே சுட்டுக்கொண் டிருந்தால், அது தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த குற்றமாகிறது. நாங்கள் வந்ததற்குள் இருவரும் சமாதானமடைந்து, எதையும் வெளியிடாமல் மறைத்துவிடத் தீர்மானித்திருக்கலாம். சமயற்காரரும் அவர்களுக்கு அநுசரணையாய் நடந்துகொண் டிருக்கலாம்.

கந்தசாமி பிள்ளை:—அப்படியானால் இனி என்ன செய்ய உத்தேசிக்கிறீர்கள்?

நாகூர் மீரா லெப்பை—ராமநாதனைத் தேடி அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கும்படி ஜெவான்களை அனுப்பி இருக்கிறேன்.

கந்தசாமி பிள்ளை:—இன்னொரு விஷயம். அன்றையதினம் மாலையில் வக்கீல் ஒட்டியாணத்தை வாங்கிக்கொண்டு போனாரென்று அவருடைய சம்சாரம் சொன்னதாக பக்கத்து வீட்டுக்காரர் உங்களிடம் சொன்னா ரல்லவா. வக்கீலுடைய வீட்டில் கொலை நடந்த தினத்தன்று தாம் ஹநுமய்ய செட்டியாருடைய காசுக்கடைக்கு ஒரு காரியமாய்ப் போயிருந்ததாகச் சொன்னா ரல்லவா. அங்கே போய், அங்கே வக்கீலுடைய ஒட்டியாணம் இருந்தால், அதை வாங்கி என்னிடம் கொண்டுவந்து காட்டுங்கள். அதை நான் பார்த்தால், பொய் மெய் உடனே விளங்கும்.

நாகூர் மீரா லெப்பை:—சரி; அதுவும் நல்ல யுக்திதான். நான் அதை உடனே கவனிக்கிறேன்—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவுற்றது. ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை உடனே சிந்தனையி லாழ்ந்துபோனார்.

நாகூர் மீரா லெப்பை தெரிவித்த விஷயங்கள் எவரும் எதிர்பார்க்கக் கூடாத புதுமையாயிருந்தமையால், அவர் பெரிதும் வியப்பில் ஆழ்ந்தவராய் சாய்மான நாற்காலியில் அமர்ந்திருந்தார். தமது பங்களாவில் ஒரு வருஷ காலத்திற்கு முன்னர் நிகழ்ந்த திருட்டில் ஒரு பிராம்மண வக்கீலும், அவருடைய மைத்துனரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விஷயம் அவருக்குக் கனவுபோலிருந்ததேயன்றி உண்மைபோல் படவில்லை. அதுவன்றி முதல்நாள் மாலையில் நடந்த திருட்டில், அதே மனிதர் பகிரங்கமாகத் தாம் இன்னார் என்பதை வெளியிடத் துணிவாரா என்ற சம்சயமும் அவருடைய மனதில் உண்டாயிற்று. பழைய குற்றவாளியின் பெயரைச் சொல்லிக்கொண்டு வேறு எவனேனும் வந்திருக்கலாமென்ற சந்தேகமும் அவருடைய மனதில் உதித்தது. அவ்வாறு அவர் சிந்தாக்கிராந்தராயிருக்க, அவருடைய சேவகன் அவருக்கெதிரில் வந்து நின்றான்.

கந்தசாமி பிள்ளை, "என்ன விசேஷம்?" என்றார்.

சேவகன், "யாரோ ஓர் அம்மாள் வண்டியில் வந்து தெருவில் இருக்கிறார்கள். எஜமானைப் பார்க்கவேண்டுமாம்" என்றான்.

ஸ்திரீ என்ற சொல்லைக் கேட்டவுடனே அவருடைய மனதில் முதல் நாள் மாலையில் வந்த கோஷா ஸ்திரீயின் நினைவே முன்னால் வந்து நின்று ஒரு விதமான அச்சத்தை உண்டாக்கியது. அவர் ஸ்திரீகள் மிகவும் நுட்பமான இயல்புடைய அபலைகள் என்ற அபிப்பிராயமுடையவராயிருந்தாராதலால், முதல் நாள் மாலையில் அப்பேர்ப்பட்ட ஓர் அபலையே தம்மை ஏமாற்றித் தலைகீழாய்க் கட்டி வைத்துவிட்டுத் தமது பணத்தை அபகரித்துக்கொண்டு போனாள் என்ற எண்ணத்தினால், அவருடைய மனம் நிரம்பவும் சஞ்சலமடைந்திருந்த நிலைமையில் அன்று இன்னொரு ஸ்திரீ தம்மைக் காண வந்திருக்கிறார்கள் என்ற செய்தி அவரைத் தூக்கிவாரிப்போட்டது. அவர், தமது வீட்டை நாடி எவர் வந்தாலும், அமரிக்கையாக இருந்து, அவர் வந்த காரணம் என்ன என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வதே வழக்கமன்றி எவரையும் பார்க்காமல் நிர்த்தாக்ஷண்யமாய்த் திருப்பியனுப்புவது வழக்கமில்லையாதலால், அவர் தமது நிதானத்தில் தவறாமல், சேவகனைப் பார்த்து, புன்னகைசெய்து, "நேற்று வந்த கோஷா ஸ்திரீயல்லவே! சாதாரணமான பெண்பிள்ளைதானே?" என்றார்.



சேவகன், "கோஷா இல்லீங்க; ஆரோ பாப்பாரம்மா கணக்கா இருக்காங்க; ஒண்ணும் வித்தியாஷமாப் படல்லீங்க" என்றான்.

"சரி; அப்படியானால் வரச்சொல்" என்றார் ஜட்ஜ். இரண்டு நிமிஷ காலத்தில் ஒரு ஸ்திரீ, அவருக்கு முன் வர நாணமடைந்தவள்போல் வாசற்படியண்டை நின்று எட்டிப் பார்த்து உடம்பை நெளித்துக்கொண்டாள். அவளுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். அந்த அம்மாளுடைய வல மேலாக்கு, இடதுபக்க குசவக் குஞ்சம் ஆகியவற்றிலிருந்து அவள் ஸ்மார்த்தப் பிராம்மண ஸ்திரீ அல்லது தட்டார ஸ்திரீயாயிருக்க வேண்டுமென்ற சம்சயம் ஜட்ஜியின் மனதில் உண்டாயிற்று. அவர் ஸ்திரீகளைக் கண்டால், தாமும் ஒரு ஸ்திரீ போல மாறிப்போகும் இயல்பினராதலால், அவரும் கிலேசமடைந்து குனிந்து நிமிர்ந்து பிரஸவ வேதனைப்படலானார். அடுத்த நிமிஷம் அந்த ஸ்திரீ, "நான் ராமநாதனுடைய தமக்கை" என்று கணீரென்ற குரலில் கூறி தனது ப்ரவரத்தை வெளியிட்டுக் கொண்டாள்.

உடனே கந்தசாமி பிள்ளைக்கு தைரியம் உண்டாகிவிட்டதாகையால், அவர், "யார்! ராமநாதனுடைய அக்காளா? அதாவது, வக்கீல் வயத்துநாதையருடைய......

அந்த ஸ்திரீ:—சம்சாரம். நேற்று சாயங்காலம் இந்த பங்களாவில் யாரோ ஒரு கோஷா ஸ்திரீ வந்து துணிச்சலான பல காரியங்களைச் செய்துவிட்டுப் போய்விட்டாளாம். போன வருஷத்தில் யாரோ இந்த பங்களாவில் புகுந்து சொத்துகளைத் திருடிக்கொண்டு போய் ஒரு வருஷ கால தண்டனை அடைந்தார்களாம். நேற்று சாயங்காலம் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒரு படத்தை வைத்துக்கொண்டு எங்களுடைய ஜாகைக்கு வந்து என் தம்பிதான் அந்தமாதிரியான திருட்டுகளையெல்லாம் நடத்தினதாகச் சொல்லி மிரட்டினார். என் தம்பி யோக்கியமான சிறு பையன். நாங்கள் பரம்பரையாக வேதாத்யயனம்செய்யும் சாஸ்திரிகள் வம்சத்தில் வந்தவர்கள். எங்களுக்கும் இப்பேர்ப்பட்ட அக்கிரமமான துணிச்சல் காரியங்களுக்கும் வெகுதூரம்.

கந்தசாமி பிள்ளை:— நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாயிருக்கலாம். முன் தடவை இந்த பங்களாவில் திருடிய மனிதனை

நான் நேரில் பார்க்கவில்லை. மற்றவர்களுடைய சாட்சியத்தினாலேயே அவன் முன் தடவையில் தண்டனை யடைந்தான். இந்தத் தடவையிலும் நான் ஆளைப் பார்க்கவில்லை. ஆகையால் எனக்கு உங்கள் தம்பியின்மேல் எவ்விதமான பகைமையும் கிடையாது. நான் மறுபடி போலீஸாரிடம் சொல்லி, இந்த விஷயத்தில் ஆற அமர விசாரித்து எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளும்படி நான் செய்கிறேன்.

அந்த ஸ்திரீ:—நீங்கள் தர்மராஜனுடைய அவதாரம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் நீங்கள் சம்பந்தப்படும் வரையில் அக்கிரமம் எதுவும் நடக்காதென்பது நிச்சயம். ஆனால் நேற்று இங்கே நடந்த விஷயங்களை ஸப்-இன்ஸ்பெக்டர் எங்களுக்குச் சொன்னார். அதில் முக்கியமான ஒரு விஷயம் சுத்த அசம்பாவிதமாய்ப் பட்டது. அதை உங்களுக்குத் தெரிவித்துவிட்டுப் போவதற்காகவே நான் முக்கியமாய் இப்போது இங்கே வந்தேன். ஒரு திருட்டை நடத்துகிறவன், எவ்வளவு முட்டாளா யிருந்தாலும், தான் இன்னான் என்பதைச் சொல்லவே மாட்டான். முன்னே நடந்த விசாரணையில் தன் பெயரை வெளியிட மறுத்தவன் இப்போது அதைக் கூசாமல் வெளியிடுவானா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

கந்தசாமி பிள்ளை:— எல்லோருமறிய வெளியிடவில்லையே! நான் தனியா யிருந்தபோது என்னிடத்தில் மாத்திரந்தானே அப்படி வெளியிட்டார். முன்பு விசாரணை நடந்த காலத்தில் தம்முடைய பெயரை வெளியிட மறுத்தவர், தாம் விடுபட்டு வந்தவுடன் என் பங்களாவை சூறை விட்டுவிடுவதாகக் கருவிவிட்டுப் போனாராம். அந்த மாதிரி பகிரங்கமாய்ச் சொன்னவர் அதை நிறைவேற்றி விட்டதாக என்னிடம் சொல்லிப் பெருமை பாராட்டிக் கொண்டார் என்று நினைப்பது கிரமமான அநுமானந்தானே!

அந்த ஸ்திரீ:—அந்த மாதிரி பகிரங்கமாய்க் கருவி விட்டுப் போன மனிதர் கோஷாவாக வரவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறதே?

கந்தசாமி பிள்ளை:—எப்படி?

அந்த ஸ்திரீ:— கோஷா வேஷத்தில் வந்தவர் பங்களாவில் நுழைந்ததையோ, பங்களாவிலிருந்து வெளியில் போனதையோ



யாரும் பார்க்கவில்லை. வெளியில் இருந்த சேவகன் தினசரி மூட்டை என்னும் பத்திரிகையின் நிருபரான கிருஷ்ணமாச்சாரியைத் தவிர வேறு யாரும் உள்ளே வரவில்லை என்று உறுதியாகச் சொல்லுகிறான். அந்த ரிப்போர்ட்டருடைய கையில் ஒரு தோல் பையும் இருந்ததாம்.

கந்தசாமி பிள்ளை:—(வியப்போடு) அப்படியானால்?

அந்த ஸ்திரீ:— அந்த மனிதன் அந்தத் தோல் பைக்குள் கோஷா உடுப்பு, பழத்தட்டு முதலியவைகளைக் கொண்டு வந்திருக்கலாம். மறைவில் இருந்தபடி அதை எடுத்து மாட்டிக்கொண்டு வந்து உங்களுக்கருகில் வந்து திராவகத்தைப் பீய்ச்சி இருக்கலாம். அதன் பிறகு நீங்கள் மயங்கிப் போய்விட்டீர்கள். அவன் உங்கள் பெட்டியைத் திறந்து நோட்டுகளையும் கடிதங்களையும் எடுத்து தோல் பையில் வைத்து அதை ஒரு பக்கத்தில் வைத்திருக்கலாம்; மற்ற சாமான்களை வாரி இறைத்திருக்கலாம். பிறகு உங்களைத் தூக்கித் தலைகீழாய்க் கட்டி வைத்துவிட்டுப் போலீஸாருக்கும் டெலிபோன் மூலம் சொல்லிவிட்டு கோஷா உடுப்பை எடுத்து தோல் பைக்குள் வைத்துவிட்டு, கூச்சலிட்டு சேவகனை வரவழைத்து உங்களுடைய கட்டையும் அவிழ்த்துவிட் டிருக்கலா மல்லவா! அப்போது கோஷா ஸ்திரீ வெளியிலிருந்து வரவும், உள்ளே இருந்து போகவும் அவசியம் ஏற்பட்டிருக்காதல்லவா! அவருடைய தோல்பெட்டியை நீங்களும் போலீசாரும் ஏன் சோதனை போடவில்லை?

கந்தசாமி பிள்ளை:—(திடுக்கிட்டு ஆச்சரியமடைந்து) நீங்கள் சொல்வது எவரும் எதிர்பார்க்காத விபரீதமான அநுமானமாயிருக்கிறதே! தினசரி மூட்டை என்பது கண்ணியமான பத்திரிகையல்லவா; அதனுடைய ரிப்போர்ட்டரைப்பற்றி நீங்கள் இப்படி அவதூறாய்ப் பேசுவது சரியல்ல. இந்த மாதிரி நீங்கள் அவரைப்பற்றிச் சொன்னீர்கள் என்பது அவருக்குத் தெரிந்தால், அவர் உங்கள் பேரில் மானநஷ்ட தாவா தாக்கல் செய்தாலும் செய்துவிடுவார். அவர் கண்ணியமான மனிதர் என்பது நமக்கு நிச்சயமாய்த் தெரிகையில், அவருடைய தோல் பையை நாம் ஏன் சோதனை போடுகிறது!

அந்த ஸ்திரீ:—அந்த சமயத்தில் ஒரு மகாராஜா இருந்தால் கூட, அவருடைய பையை சோதனை போட்டுத்தான் பார்க்க வேண்டும். கண்ணியமான ஒரு கோஷா எப்படித் திருடனாக மாறி

ளோ, அதேபோல, கண்ணியமான தோற்றமுடைய ஒரு ரிபோர்ட்டர் ஏன் அந்த வேஷதாரியாய் மாறக்கூடாது. இங்கே வருவதற்கு வேறு மார்க்க வழியில்லை. என் தம்பிக்கு மாந்திரீக சக்தியும் இல்லை. ஆகாய மார்க்கமாய் ஏரோபிளேன் வழியாக வந்ததாகவும் நினைக்க வழியில்லை. அவ்விதம் வந்திருந்தால், உங்களுக்கு சப்தம் கேட்டிருக்கும். அப்படி இருக்க, என் தம்பி ராமநாதன் இங்கே வந்தான் என்று சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறது?

கந்தசாமி பிள்ளை:—உங்கள் தம்பிதான் வந்தாரென்று நான் யாரிடத்திலும் சொல்லவில்லையென்று ஏற்கனவே சொன்னேனே! ஸப்-இன்ஸ்பெக்டரல்லவா அந்த மாதிரி சொல்லுகிறார். இப்போது நீங்கள் குறிப்பிட்ட சந்தேகத்தை அவரிடம் தெரிவித்தால், அவர் என்ன சொல்லுகிறார் என்று பார்க்கலாமே!

அந்த ஸ்திரீ:—நான் உங்களிடம் தெரிவிக்க எண்ணியதைத் தெரிவித்து விட்டேன். என் தம்பி இங்கே வந்திருக்கவே வகையில்லை யென்பதையும், அந்த கிருஷ்ணமாச்சாரியேதான் இப்படியெல்லாம் செய்திருக்க வேண்டுமென்பதையும் எடுத்து விளக்கி விட்டேன். எப்பேர்ப்பட்ட பெரிய கொலை வழக்கில்கூட தீர்மானம் எழுதும் வல்லமையுடைய நீங்கள் இதை நிச்சயிக்கும் விஷயத்தை ஒரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு விட்டால், அதற்கு மேல் நான் எதையும் சொல்வதற்கில்லை.

கந்தசாமி பிள்ளை:—நீங்கள் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரிதான் இப்படியெல்லாம் செய்திருக்க வேண்டுமென்று சந்தேகித்தால், மற்றவர் உடனே அதை வேதவாக்கியமாய் ஏற்றுக்கொண்டுவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது சரியல்ல. எதையும் தக்க ஆதாரங்களைக் கொண்டே நிச்சயிக்க வேண்டும். அந்த வேலையை முதன் முதலில் செய்ய வேண்டியவர் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்.

அந்த ஸ்திரீ:—ஸப்-இன்ஸ்பெக்டரோடு நாங்கள் பேசிக்கொண்டிருந்த வரையில், அவர் எங்கள் விஷயத்தில் அமரிக்கையாய் நடந்து உண்மையைக் கண்டுபிடித்து ஒழுங்காய் நீதி வழங்குவார் என்னும் நம்பிக்கை எங்களுக்கு கொஞ்சமும் உண்டாகவில்லை. அதனாலேயே நான் நேரில் உங்களிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டுமென்று இங்கே வந்தேன். நீங்கள் எல்லாவற்றையும் அறிந்த சர்வக்ஞரா யிருந்தும், அந்த ஸப்-இன்ஸ்பெக்டரிடமே எல்லாப்பொறுப்பையும்



மாற்றுகிறீர்கள். அப்படி இருக்க, நாங்கள் இனி தெய்வத்தினிடத்தில்தான் முறையிட வேண்டும். ஆனால் தெய்வங்கள் சகலத்தையும் மனிதர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெறும் கல்களாயிருக்கின்றன. அவைகளிடம் முறையிட்டுக்கொள்வதும் ஒன்றுதான், சும்மா இருப்பதும் ஒன்றுதான். அது போகட்டும். நீங்கள் எங்களிடம் கருணை கூர்ந்து இன்னோர் உதவியையாகிலும் செய்யலாகாதா?

கந்தசாமி பிள்ளை:—என்ன உதவி அம்மா?

அந்த ஸ்திரீ:—அந்த தினசரி மூட்டையின் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியை நீங்கள் தயவுசெய்து இங்கே ஒரு பத்து நிமிஷகாலம் வரவழைத்தால், நான் அவரிடமே கேள்விகள் கேட்டு உண்மையை வெளிப்படுத்துவேன்—என்றாள்.

அதைக் கேட்ட ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை உடனே மறுமொழி கொடுக்க மாட்டாமல் சிறிதுநேரம் எதைப்பற்றியோ யோசனை செய்தவராய் மௌனமாயிருக்க, அந்த அம்மாள் "டெலிபோன் பக்கத்தில்தானே இருக்கிறது. அதன் மூலமாய் அவரைக் கூப்பிடுங்கள். ஒரே நிமிஷத்தில் உண்மை உங்களுக்குத் தெரிந்துபோகுமென்று என்னவோ ஒரு வைத்தியக்கார நினைவு என் மனதில் உண்டாகிறது" என்று விநயமாக வற்புறுத்தி வேண்டிக்கொள்ள, அந்த வேண்டுகோளை மறுக்க மாட்டாதவராய் கந்தசாமிபிள்ளை, "உங்கள் கோரிக்கையைக் கருதி அவரை அழைக்க வேண்டுமென்று பூர்ணமாக நான் விரும்புகிறேனாலும், எந்த உரிமையினால் அவரை அழைக்கிறது என்பதைப்பற்றி யோசிக்கிறேன்" என்றார்.

அந்த அம்மாள், "இதற்கு உரிமை எதற்கு? உங்களோடு அவர் டெலிபோனில் பேசி, இங்கே வர அநுமதி கேட்டாரே; அது எந்த உரிமையினாலோ அதே உரிமையினால் நீங்களும் அவரை அழைக்கக் கூடாதா! ஒரு நிரபராதியைக் காப்பாற்றும் பொருட்டு, நீங்கள் இதை அவசியம் செய்யலாம். நான் டெலிபோனில் பேசிப் பழகியவளன்று. இல்லாவிட்டால் நானே இந்நேரம் அவரைக் கூப்பிட்டிருப்பேன்" என்று கூறினாள்.

கந்தசாமி பிள்ளை:—சரி; நான் இதோ கூப்பிடுகிறேன். நீங்களே அவரிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள்—என்று கூறிவிட்டு பக்கத்திலிருந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்து வைத்துக்கொண்டு, தினசரி மூட்டை ஆபீஸின் நம்பரைக் குறிக்க, உடனே

அந்த ஆபீஸோடு கம்பி சேர்க்கப்பட்டது. மறு பக்கத்திலிருந்தவர், "யார் அது?" என்றார்.

கந்தசாமி பிள்ளை:—நான் ஜில்லா ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை. தினசரி மூட்டையின் பத்திராதிபரோடு நான் பேசவேண்டும். அவர் ஆபீஸில் இருந்தால், தயவு செய்து, அவரைக் கூப்பிடுங்கள்.

மற்றவர்:—இதோ கூப்பிடுகிறேன்--என்று வணக்கமாகக் கூறிவிட்டு, உடனே ஒரு சேவகனை அனுப்ப, பத்திராதிபர் டெலிபோனண்டை வந்திருந்து, பேசத் தொடங்கினார்.

பத்திராதிபர்:—ஹலோ, மிஸ்டர் ஜட்ஜ்.

கந்தசாமி பிள்ளை:—எஸ். நான்தான் கூப்பிட்டேன். பிரயாசை கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும். உங்கள் ஆபீஸ் ரிப்போர்ட்டர் மிஸ்டர் கிருஷ்ணமாச்சாரியாருடன் நான் கொஞ்ச நேரம் பேச அநுமதி கிடைக்குமா?

பத்திராதிபர்:—(திடுக்கிட்டு) யார்! யார்! ரிப்போர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியா!

கந்தசாமி பிள்ளை:— (திகைப்போடு) ஆம். உங்கள் ஆபீஸ் ரிப்போர்ட்டரைத்தான் குறிக்கிறேன்!

பத்திராதிபர்:—எவரை? ரிப்போர்ட்டர் கோபாலையரையா குறிக்கிறீர்கள்?

கந்தசாமி பிள்ளை:—நான்தான் கிருஷ்ணமாச்சாரி என்று தெளிவாய்ச் சொன்னேனே!

பத்திராதியர்:—எங்கள் பத்திரிகைக்கு கோபாலையர் என்ற பெயருடைய ஒருவர்தான் இந்த ஊருக்கு ரிப்போர்ட்டர். கிருஷ்ணமாச்சாரி என்ற பெயருடைய ரிப்போர்ட்டரே யாரும் இல்லையே!

கந்தசாமி பிள்ளை:—(அபாரமான திகைப்பும் கலக்கமும் அடைந்தவராய்) நீங்கள் சொல்வது ஆச்சரியமாயிருக்கிறதே' உங்கள் பத்திரிகைக்கு கிருஷ்ணமாச்சாரி என்ற ரிப்போர்ட்டரே இல்லையா? இது நிச்சயந்தானா?—என்றார்.

அப்போது அவருக்கெதிரில் அவருடைய சொற்களை கவனித்துக்கொண்டிருந்த அம்மாளின் முகம் அபாரமான சந்தோஷத்தினாலும் வெற்றியின் அறிகுறியினாலும் ஜ்வலித்தது.



பத்திராதிபர்:—நீங்கள் பேசுவதைப் பார்த்தால், நீங்கள் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் பிள்ளை அல்லவென்று நினைக்கும்படியாயிருக்கிறதே! உண்மையில் நீங்கள் மிஸ்டர் கந்தசாமிதானா? எங்கிருந்து பேசுகிறீர்கள்?

கந்தசாமி பிள்ளை:—நான் மெய்யாகவே ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை தான்! நான் என்னுடைய பங்களாவிலிருந்தே பேசுகிறேன்! நீங்கள் நேற்று என்னிடம் அனுப்பிய ரிப்போர்ட்டருடைய பெயர் என்ன?

பத்திராதிபர்:—நாங்கள் நேற்று உங்களிடம் எந்த ரிப்போர்ட்டரையும் அனுப்பவில்லையே. அப்படி அனுப்பக்கூடிய அவசியம் ஏற்படவில்லையே!

கந்தசாமி பிள்ளை:—இது பெரிய வேடிக்கையாயிருக்கிறதே! ஒரு வேளை மானேஜர் அனுப்பி இருப்பாரா? அவரிடம் கேட்டுப் பார்க்கிறீர்களா?

பத்திராதிபர்:—மானேஜருக்கும் ரிப்போர்ட்டருக்கும் சம்பந்தமே இல்லை. மானேஜர் யாரையும் அனுப்பி இருக்கமாட்டார். எங்கள் ஆபீஸ் ரிப்போர்ட்டர் நேராக என்னிடம் தான் வேலை செய்யவேண்டும். எங்களுடைய ரிப்போர்ட்டர் என்று சொல்லிக் கொண்டு உங்களிடம் யாராவது வந்தார்களா?

கந்தசாமி பிள்ளை:—ஆம். நேற்று மாலையில் யாரோ ஒருவர் டெலிபோன் மூலம் என்னைக் கூப்பிட்டு, தமது பெயர் கிருஷ்ண மாச்சாரி என்றும், தாம், தினசரி மூட்டையின் ரிப்போர்ட்டர் என்றும் சொன்னார்; விக்டோரியா ஜூபிலி ஹாலில் லேவடீஸ் யூனியன் கிளப்பின் வருஷாந்தக் கொண்டாட்டத்தில் நான் தலைமை வகிக்கப் போகும் சம்பந்தமாய் என்னிடம் நேரில் வந்து சில சந்தேகங்களைத் தெளிவித்துக்கொண்டு போக விரும்புவதாகச் சொன்னார். நான் அதற்கிணங்கினேன்.

பத்திராதிபர்:—இது பெரிய புளுகு மூட்டையாயிருக்கிறதே! நாங்கள் யாரையும் இது சம்பந்தமாய் உங்களிடம் அனுப்பவில்லை. மூட்டைப்பூச்சி ஒளிந்து கடிப்பதுபோல், யாரோ திருடன் மூட்டையின் வேலை செய்திருக்கிறான். கிருஷ்ணமாச்சாரி என்னும் பெயருடைய ரிப்போர்ட்டரே இந்த தினசரி மூட்டை ஆபீஸில் இல்லை. இதை நீங்கள் நிச்சயமாய் நம்பலாம். எவனோ டெலிபோனில் உங்களைக் கூப்பிட்டு தமாஷ் பண்ணியிருக்கிறான்!

கந்தசாமி பிள்ளை :—பிறகு ஓர் ஆசாமியே நேரில் வந்தானே!

பத்திராதிபர் :—சரி; எங்கள் ஆபீஸிற்கும் அந்த மனிதனுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இதை நீங்கள் வேத வாக்கியமாக ஏற்றுக்கொள்ளலாம். இவ்வளவுதானே! வேறு ஏதாவது எங்களிடம் கேட்க வேண்டுமோ?

கந்தசாமி பிள்ளை :—இவ்வளவு தான். உங்களுக்கு நான் நிரம்பவும் கடமைப்பட்டவனானேன். பிரயாசை கொடுத்ததற்கு மன்னிக்கவும்—என்று கூறி ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு, எழுந்து மின்சார விசிறியினடியில் போய் நின்று, தமது தலை முதல் கால் வரையில் பொங்கி வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டபடி நெற்றியை அழுத்திக்கொண்டு முகத்தைக் கீழே கவிழ்த்துக்கொண்டார். தாம் மிக விகாரமாய் ஏமாற்றப்பட்டுப் போனதாக அவர் உணர்ந்தாராதலாலும், ஒரு ஸ்திரீயின் உதவியால் அதைத் தாம் தெரிந்துகொண்டதாலும், அவர் அபாரமான வெட்கத்தினால் குன்றிப்போனவராய் நிரம்பவும் படபடப்போடு நின்றார். ரிபோர்ட்டரைப் பற்றி அந்த அம்மாள் சொன்னது உண்மையாய்ப்போனது அவரை முட்டாள் என்று ஸ்தாபித்ததுபோலிருந்ததாகையால் அவரது அப்போதைய நிலைமை சகிக்கவொண்ணாத பரம சங்கடமானதாயிருந்தது.

அப்போது அந்த அம்மாள் எதையும் தெரிந்துகொள்ளாதவள்போல் மிருதுவாகவும் பணிவாகவும் பேசத்தொடங்கி, "அவர் இப்போது ஆபீஸில் இல்லையா? அல்லது, அவர் டெலிபோனுக்கு வர பயப்படுகிறாரா?" என்றாள்.

அப்போது கந்தசாமி பிள்ளை மிகுந்த கலக்கத்தையும் மன இளக்கத்தையும் தோற்றுவித்த முகத்துடன், "அம்மா இப்போது நீங்கள் இங்கே வந்து எனக்கு பிரமாதமான ஓர் உபகாரத்தைச் செய்தீர்கள். இந்த சமயத்தில் என் மனதில் உண்டாகும் நன்றி விசுவாச உணர்ச்சியை உங்களிடம் எப்படி வெளியிடுவதென்பது தெரியவில்லை. விலைமதிப்பற்ற இந்தப் பேருதவியை என் மனது ஒரு நாளும் மறக்காது" என்று நிரம்பவும் இளக்கமான குரலில் கூறினார்.

அந்த அம்மாள் :— (ஆச்சரியத்தோடு) நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே! உதவியாவது! நன்றி விசுவாசமாவது! நீங்களும் ரிபோர்ட்டரும் டெலிபோனில் பேசிவிட்டு திடீரென்று ஏதோ சொன்னால் அதை நான் எப்படித் தெரிந்துகொள்வேன்! ரிபோர்ட்டர் என்ன சொல்லுகிறார்? நான் அவரிடம் கேள்வி கேட்கலாமா?—என்றாள்.



கந்தசாமி பிள்ளையின் அப்போதைய நிலைமை வர்ணிப்பில் அடங்காததாயிருந்தது. அவர் தமக்குள், "அடாடா! ஐயோ! எவனோ திருடன் ரிபோர்ட்டராக வந்து என்னை இவ்வளவு சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டானே! ஒரு பெண்பிள்ளைக்கு இருந்த யூகம் ஜட்ஜ் பதவி வகிக்கும் எனக்கு இல்லாமல் போய்விட்டதே! நிரபராதியான இன்னொருவரின்மேல் போலீஸார் சம்சயங்கொள்ளும்படியான நிலைமையை உண்டாக்கிவிட்டேனே! இதேபோலத்தான் ஒரு வருஷத்திற்கு முன்னரும் நடந்திருக்குமோ! அப்போது தண்டனை அடைந்தவர் உண்மையில் குற்றமற்றவராயிருப்பாரோ! அதனால்தான் அவர் தமது பெயர் விலாசம் முதலியவற்றைச் சொல்லவில்லையோ! சுத்த நிரபராதியான தமக்கு நேரிட்ட பெரிய மானக்கேட்டை சகிக்கமாட்டாமல் அவர் வீராவேசத்தில் கருவி விட்டுப்போனாரோ! சொற்பத்தில் ஏமாறிப்போனேனே! இதனால் எத்தனை பேர்களுக்கு மானக்கேடு! கண்ணியமான எத்தனை மனிதர்களுடைய வாழ்க்கையும், சந்தோஷமும் நாசமாயிற்றோ!" என்ற எண்ணங்கள் ஒரு விநாடிக்குள் அந்த மேதாவியின் மனதில் எழுந்தெழுந்து மறையவே, அவருடைய மனதும், மெய்யும் கட்டுவிட்டுக் கல்கலத்துப் போக, அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியைத் தாங்கமாட்டாதவராய், "அம்மா, உண்மையில் உங்கள் தம்பியின் விஷயத்தில் பெரிய அநியாயம்தான் நடந்துவிட்டதம்மா! என் அதற்கு நான் என்னவிதமான பரிகாரம் செய்யப்போகிறேன்! என் பாவம் தொலைய நான் எப்படிப்பட்ட பிராயச்சித்தம் செய்துகொள்வேன்! ஐயோ!" என்றார். அவருடைய சொற்கள் அபாரமான வேதனையினால் புண்பட்டுத் தவித்த அவருடைய அந்தராத்மாவிற்குள்ளிருந்து வெளிப்படுவது போல், கேட்போருடைய மனம் பதறும்படி செய்யத் தக்கவையாயிருந்தன. அவ்வாறு பிரலாபித்த உத்தமகுண ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை தமது நெற்றியை அழுத்திக் கொண்டபடி, பக்கத்திலிருந்த சாய்மான நாற்காலியில் அப்படியே சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார். அபாரமான உணர்ச்சியின் பெருக்கினால் அவருடைய அறிவு நிலை தவறிப்போயிருக்கிறதென்

பது கண்கூடாய்த் தெரியவே, அந்த அம்மாள் திடுக்கிட்டுத் தத்தளித்தாள். ஆயினும், தான் அந்த விகார நிலைமையில் திருடிபோல் விழித்துக்கொண்டு நின்றால், அது தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கிவிடுமென்று நினைத்து உடனே வெளியில் ஓடி அங்கிருந்த சேவகனை அழைத்து, "உன் எஜமானருக்கு உடம்பில் ஏதோ அசௌக்கியம் உண்டாயிருக்கிறது; நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கிறார். வந்து, கவனி" என்றாள்.

அதைக் கேட்டவுடன் சேவகன் திடுக்கிட்டு சம்சயப் பார்வையாக அந்த அம்மாளுடைய முகத்தை உற்றுப் பார்த்தபடி, "நீங்கள் வெளியில் போகவேண்டாம். என்னோடு கூடவே வாருங்கள். இல்லாவிட்டால், பின்னால் உங்களுக்கு ஏதாவது தொந்தரவு ஏற்படும்" என்று கூறி, அந்த அம்மாளை வெளியில் விடாமல் தன்னோடு கூடவே அழைத்துக்கொண்டு கந்தசாமி பிள்ளை இருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தான். ஏனென்றால், முதல் நாள் கோஷா ஸ்திரீயினால் ஜட்ஜிக்கு நேரிட்ட அபாயத்தைப்பற்றிய நினைவு அவனுடைய மனதை விட்டு மறையாமல் இருந்ததாகையால், இப்போது வந்திருந்த அம்மாளுக்குள்ளும் எவனேனும் திருடன் ஒளிந்துகொண்டிருப்பானோ என்னும் சம்சயம் அவனுடைய மனதில் ஏற்பட்டிருந்ததாகையால், ஜட்ஜுக்கு ஏதோ துன்பம் நேரிட்டுவிட்டது என்பதைக் கேட்டவுடன் அந்த ஸ்திரீயின் விஷயத்தில் பலவிதமான சம்சயங்கள் உண்டாகிவிட்டனவாதலால், அவள் தப்பித்துப் போக விடக்கூடாது என்னும் தீர்மானத்துடன் அவன் அங்கே வந்து கந்தசாமி பிள்ளையை கவனித்து, "கொஞ்ச நேரத்திற்கு முன்பு, நீங்கள் வந்தது வரையில் சரியான நிலைமையில் இருந்தவர்கள் எதனால் அம்மா இப்படி மயங்கிச் சாய்ந்தார்கள்? நிஜத்தைச் சொல்லிவிடுங்கள். நான் இப்போது போலீஸாரைக் கூப்பிட வேண்டும். இப்படித்தான் நேற்று ஒரு கோஷர் எங்களுக்குத் தெரியாமல் உள்ளே புகுந்து, பிசாசுக் காரியங்களையெல்லாம் செய்துவிட்டு மாயமாய் மறைந்து போய்விட்டாள். இன்றைக்கு நீங்கள் வந்தீர்கள்; இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது" என்று மிகுந்த கவலையோடு கூறினான்.

அதைக் கேட்டவுடன் அந்த அம்மாளுடைய திகிலும், நடுக்கமும், தளர்ச்சியும் பன்மடங்கு அதிகரித்தன. அவன் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோரை வரவழைத்தால், அவர்களால்



தனக்கு எவ்விதமான துன்பமும், இளப்பமும் நேருமோ என்ற நினைவினால் பெரிதும் சஞ்சலமடைந்தவள்போல், "ஐயா இப்போது யாருடனோ டெலிபோன் வழியாகப் பேசினார்கள். ஏதோ கெடுதலான செய்தியைக் கேட்டவுடன், நாற்காலியில் சாய்ந்து ஒரு மாதிரியாயிருக்கிறார்கள். மெதுவாய்க் கூப்பிட்டுப் பார். தாகத்திற்கு ஜலம் கொண்டுவந்து கொடு. ஐயாவுக்கு உடம்பு சரிப்பட்டுப் போகும்" என்றாள்.

அதைக் கேட்கவே, சேவகனுடைய கலவரம் குறையத் தொடங்கியது. ஜட்ஜுக்கு விபரீதமான அபாயம் எதுவும் நேரவில்லை என்ற தைரியம் பிறக்க வாரம்பித்தது. அவன் அடுத்த அறைக்கு ஓடி அங்கு தயாராயிருந்த ஜலத்தை ஒரு பாத்திரத்தில் கொணர்ந்து அவருக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு, "ஐயா, ஐயா," என்று மிருதுவாகவும், நிரம்பவும் பயபக்தியோடும் அழைத்தான். அவர்கள் சம்பாஷித்ததையெல்லாம் கனவுபோல் அவர் உணர்ந்தாராதலால், அவர் உடனே தமது கண்களைத் திறந்துகொண்டு நிமிர்ந்தார். உடனே சேவகன், "தாகத்திற்கு இதோ ஜலம் வைத்திருக்கிறேன். உடம்பு சரியாயில்லாவிட்டால், டாக்டரைக் கூப்பிடட்டுமா?" என்று மிகவும் அடக்கமாக வினவினான்.

அதைக் கேட்ட கந்தசாமி பிள்ளை, தமது நிலைமை விகாரமாகிவிட்டதைக் கண்டு தெளிவடைந்து ஊக்கங்கொண்டு, "ஜலம் இப்படியே இருக்கட்டும். தேவையானால், எடுத்துக்கொள்ளுகிறேன். டாக்டரைக் கூப்பிடவேண்டாம். எனக்கு உடம்பில் அசௌக்கியம் ஒன்றுமில்லை. வெளியில் யாரும் இல்லை. நீ அங்கே போய் ஜாக்கிரதையாயிரு" என்றார்.

உடனே சேவகன் வெளியில் போய்விட்டான். பிறகு கந்தசாமி பிள்ளை, "அம்மா, நீங்கள் வீட்டிற்குப் போங்கள். நான் தினசரி மூட்டை ஆபீஸில் விசாரித்ததில், கிருஷ்ணமாச்சாரி என்ற பெயருடைய ரிப்போர்ட்டர் யாருமில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் எவனோ மோசக்காரன் தன்னை நான் ஒரு கண்ணியமான பிராம்மணர் என்று நினைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கிருஷ்ணமாச்சாரி என்ற பொய்யான பெயரை வைத்துக்கொண்டு, இங்கே வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால், நீங்கள் அனுமானித்தபடி அவனேதான் கோஷாவாக மாறி மற்ற காரியங்களைச் செய்திருக்கலாமென்ற எண்ணம் என் மனதிலும் உதிக்கிறது.

ஆகையால், நான் உடனே போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரை அழைத்து, விஷயங்களைச் சொல்லி, இந்த மோசக்காரனைப் பிடிக்கச் செய்கிறேன். இனி நீங்கள் உங்கள் தம்பியைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம். நான் உடனே தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு சகலமான பரிகாரங்களையும் செய்கிறேன். நீங்கள் போய் வாருங்கள் அம்மா" என்று நிரம்பவும் உருக்கமாகவும், அன்பாகவும் கூறினார்.

அதைக் கேட்டு சந்தோஷ முகமலர்ச்சி யடைந்த அந்த அம்மாள், "நீங்கள் இன்னொரு காரியமும் செய்யவேண்டும். இந்தப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் ஒரு போட்டோப் படம் வைத்துக்கொண்டிருக்கிறார். அது போன வருஷம் தண்டனை அடைந்த ஒருவருடைய படமாம். அதிலிருப்பவர் என் தம்பியின் சாயலாயிருக்கிறார். அந்தப் படத்தை நீங்கள் வாங்கிப் பார்த்தால், கிருஷ்ணமாச்சாரி என்ற பெயருடன் வந்தவர் அவரா இல்லையா என்பது உங்களுக்கு உடனே விளங்கும். அதிலிருந்து என் தம்பி நிரபராதியா இல்லையா என்பதை நீங்கள் சுலபத்தில் நிச்சயிக்கலாம்" என்றாள்.

அதைக் கேட்ட கந்தசாமி பிள்ளை அத்யந்த மகிழ்ச்சி யடைந்தார். உண்மையில் அந்த அம்மாள் சிறந்த புத்திசாலி என்று கருதி, "ஆகட்டும், அம்மா, அந்த மாதிரியே பார்த்து, ஆகவேண்டியதைச் செய்கிறேன்" என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவுற்றது. அந்த அம்மாள் வெளியில் சென்றாள். அதன் பிறகு கந்தசாமி பிள்ளையின் மன வேதனையும் படபடப்பும் அடங்க சுமார் கால் மணி காலம் பிடித்தது. அப்போதே அவருடைய இயற்கை நிலைமை திரும்பியது. அவர் உடனே டெலிபோனண்டை போய் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பையுடன் பேச முயற்சித்தார். லெப்பையார் அப்போது ஸ்டேஷனில் இல்லையென்று ரைட்டர் தகவல் கொடுக்க, அவர் வந்தவுடன் தமது பங்களாவுக்கு அனுப்பும்படி சொல்லி, கந்தசாமி பிள்ளை தமது நாற்காலியில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டார். அப்போது அங்கு அவருடைய நண்பரான ஸப்-கலெக்டர் அநந்தராம சர்மா வந்துசேர்ந்தார். கந்தசாமி பிள்ளை தமது இயற்கையின்படி உவப்போடு அவரை வரவேற்று அமரச்செய்து, கடைசியாக அவர் வந்துவிட்டுச் சென்ற



பிறகு நிகழ்ந்த சம்பவங்களை யெல்லாம் அவரிடம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அப்போது சேவகன் வந்து நின்று, "போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நாகூர் மீரா லெப்பை வந்திருக்கிறார்" என்றான். அவரை அழைத்து வரும்படி ஜட்ஜ் அநுமதி கொடுக்க, உடனே சேவகன் வெளியில் சென்றான். அடுத்த நிமிஷம் நாகூர் மீரா லெப்பை அங்கு பிரஸன்னமாய் முறுக்காக நிமிர்ந்து நின்று இரண்டு அதிகாரிகளுக்கும் போலீஸ் சலாம் வைத்துவிட்டு, ஒரு பக்கத்தில் கருக்காக நின்றார்.

கந்தசாமி பிள்ளை:—அந்த ராமநாதனுடைய படம் கையில் இருக்கிறதா?

நாகூர் மீரா லெப்பை:— இருக்கிறது. (எடுத்துக் கொடுக்கிறார்)

கந்தசாமி பிள்ளை:— (அதை வாங்கிப் பார்த்துவிட்டு) இந்த மனிதரா முன் வழக்கில் தண்டிக்கப் பட்டார்?

நாகூர் மீரா லெப்பை:—ஆம்.

கந்தசாமி பிள்ளை:— அப்படியானால் நேற்று நடந்த திருட்டு சம்பந்தமாய் நீங்கள் இந்த மனிதரைத் தேடவேண்டாம். இவர் அகப்பட்டால்கூட இவரைப் பிடிக்கவேண்டாம்.

நாகூர் மீரா லெப்பை:—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

கந்தசாமி பிள்ளை:—நேற்று இங்கே வந்து திருடியவர் இவர் அல்ல.

நாகூர் மீரா லெப்பை:—வேறு யார் திருடியவர் என்பது தெரிந்ததா?

கந்தசாமி பிள்ளை:—தினசரி மூட்டையின் ரிபோர்ட்டர்தான் திருடியிருக்க வேண்டும்.

நாகூர் மீரா லெப்பை:—(திடுக்கிட்டு வியப்படைந்து) அவர் ஒரு பெரிய பத்திரிகையோடு சம்பந்தப்பட்டிருக்கும் கண்ணியமான ரிபோர்ட்டர் அல்லவா அந்த சமயத்தில் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதிலிருந்தே அவர்தான் திருடர் என்று நாம் சொன்னால், அது எப்படி நிலைக்கும். அதை உறுதிப்படுத்த வேறு ஆதாரங்கள் வேண்டாமா?

கந்தசாமி பிள்ளை :—தினசரி மூட்டை ஆபீஸில் கிருஷ்ணமாச்சாரி என்ற பெயருடைய ரிபோர்ட்டரே இல்லையாம். இப்போது சரிதானா?

நாகூர் மீரா லெப்பை :—(திடுக்கிட்டு வியப்படைந்து) என்ன! என்ன! இது பெரிய ஜெகஜாலப் புரட்டாயிருக்கிறதே! முதலுக்கே மோசமாய்விட்டதே! அப்படியானால் ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரி என்று சொல்லிக்கொண்டு வந்தவன்தான் திருடனாயிருக்கவேண்டும்! அந்த ஆபீஸ் ரிபோர்ட்டருடைய பெயர் என்னவென்பது தெரிந்ததா?

கந்தசாமி பிள்ளை :—கோபாலையராம்.

நாகூர் மீரா லெப்பை :—அடே பாவி, பொய் சொன்னவன் பொருத்தமாகச் சொல்லியிருக்கக்கூடாதா! தன் பெயர் கோபாலையர் என்று சொல்லியிருக்கக் கூடாதா? இவன் புதுத்திருடன் போல் இருக்கிறது. அந்த ஆபீஸில் கோபாலையர் என்ற ஒருவர்தான் ரிபோர்ட்டர் என்னும் விஷயம் உங்களுக்குத் தெரிந்திருந்தால், இவன் கிருஷ்ணமாச்சாரி என்று சொன்னதற்கு, அப்போதே அகப்பட்டுக்கொண்டிருக்க வேண்டுமல்லவா!

கந்தசாமி பிள்ளை :—அந்த யோசனை அவனுக்குப் படவில்லை. ஜில்லா ஜட்ஜ் ஒரு பத்திரிகை ஆபீஸின் ரிபோர்ட்டரின் பெயரைத் தெரிந்துகொண்டிருக்க மாட்டார் என்று நினைத்திருக்கலாம். அல்லது, பெரிய பத்திரிகை ஆபீஸ்களில் கிருஷ்ணமாச்சாரி என்னும் பெயருடையவர் எவரேனும் பிரபலமடைந்திருக்கலாம். அந்தப் பெயரைத் தானும் வைத்துக்கொண்டால், அது நிஜம்போல் தோன்றும் என்று நினைத்திருக்கலாம்.

நாகூர் மீரா லெப்பை:—இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். அவன் உங்களிடம் வந்திருக்கிறானே, கண்ணியமான மனிதனாயிருக்கவேண்டும் என்றல்லவா நான் நினைத்துவிட்டேன். இல்லாவிட்டால் அவனுடைய தோல்பையை சோதனை போட்டு, உடனே திருட்டைக் கண்டுபிடித்திருப்பேனே! அடாடா! முட்டாள்தனமாய்விட்டதே! அவன் இந்தப் படத்தில் இருக்கிறவர் மாதிரி இல்லை. இருவரும் வெவ்வேறு ஆசாமிகள் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இருக்கட்டும். அவன் எங்கே தப்பினான். அவனை நான் நேற்று பார்த்ததும் நல்லதுதான். அந்த அடையாளத்தை



வைத்துக்கொண்டு நான் அவனை சுலபத்தில் பிடித்துக்கொள்ளலாம்—என்றார்.

அதே காலத்தில் சேவகன் அங்கே வந்து, “ வாசலில் யாரோ ஓர் அம்மாள் வந்திருக்கிறார்கள்; எஜமானியம்மாளைப் பார்க்க வேண்டுமாம். அம்மாள் ஊரில் இல்லை என்று சொல்லி அனுப்பிவிட்டுமா?” என்றான்.

கந்தசாமி பிள்ளை :—வந்திருக்கிறவர்கள் இன்னார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா. அதுவல்லவா மரியாதை. போகச் சொல்லுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கப்போகிறது.

சேவகன்:—அதைத்தான் முதலில் விசாரித்தேன். அந்த அம்மாள் வக்கீல் வயத்துநாதையருடைய சம்சாரமாம்.

கந்தசாமி பிள்ளை :—அந்த அம்மாள் இந்நேரம் இங்கே இருந்துவிட்டு இப்போதுதானே போனார்கள். வந்தது தான் வந்தோம், ஜட்ஜியின் சம்சாரத்தையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்தோடு மறுபடி திரும்பி வந்திருக்கிறார்களா!

சேவகன் :—(விகாரமான முகத் தோற்றத்தோடு) கொஞ்ச நேரத்துக்குமுன் போன அம்மாள் மாதிரி இல்லையே; இவர்கள் யாரோ வேறே அம்மாள்போல் இருக்கிறதே!—என்றான்.

கந்தசாமி பிள்ளை :—நீ சொல்வது ஆச்சரியமாயிருக்கிறதே! வந்திருக்கும் அம்மாள் தாம் இன்னாருடைய சம்சாரம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு முன் வந்தவர்களும், அதே வக்கீலின் சம்சாரம் என்று என்னிடம் சொன்னார்கள். இருவரும் வெவ்வேறு மனிதர்களாய் எப்படி இருக்க முடியும். ஒருவேளை ஏதாவது தவறு இருக்கலாம். அந்த அம்மாளை உள்ளே அழைத்துக்கொண்டு வா. நானே நேரில் சங்கதியைச் சொல்லி அனுப்புகிறேன். நீ எதைப் பற்றியும் பேசவேண்டாம்—என்றார்.

உடனே சேவகன் வெளியில் போய்விட்டான். வருகிற அம்மாள் இதர ஆண்பிள்ளைகளுக்கெதிரில் வரமாட்டாளாதலால், தாமே வழியில் நின்று, தமது மனைவி ஊரில் இல்லை என்னும் தகவலைத் தெரிவித்து மரியாதையாக அனுப்ப வேண்டுமென்று நினைத்து ஜட்ஜ் சரேலென்று வழியில் போய் நின்று காத்திருந்தார்.

இரண்டு நிமிஷ காலத்திற்குப் பிறகு, ஒரு ஸ்திரீ அன்ன நடை நடந்து, நாணிக்கோணி உடம்பைத் தாறுமாறாய் நெளித்துக்

கொண்டு அச்சத்தினால் மான்போல் மருண்டு அங்கே வந்து நின்றாள். அவ்வாறு வந்து நின்ற ஸ்திரீயைப் பார்த்தவுடன் கந்தசாமி பிள்ளை தமக்குள் ஆச்சரியமடைந்தார். ஏனென்றால், முன் வந்த ஸ்திரீயும், இப்போது வந்திருந்தவளும் வெவ்வேறு ஸ்திரீகள் என்பது உடனே தெரிந்தது. இரண்டாவது வந்த அம்மாள் தான் வக்கீல் வயத்துநாதையருடைய மனைவி என்று சேவகனிடம் சொன்னதாக அவன் சொன்னது ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஒருகால், வக்கீலின் மனைவி வருவதற்கு முன், வேறொரு ஸ்திரீ எதற்காகவாகிலும் வந்திருப்பாளோ என்று கருதிய கந்தசாமி பிள்ளை, "யாரம்மா நீங்கள்? எதற்காக வந்தீர்கள்?" என்று நிரம்பவும் அடக்கமாகக் கேட்டார்.

அந்த அம்மாள் உடனே மறுமொழி கூறாமல் ஊமைபோலத் தோன்றி, நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தபின் தனது தலையைக் கீழே கவிழ்த்துக்கொண்டாள். அதற்குமேல் தாம் என்ன சொல்வதென்பதை அறியாமல் ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை நின்றதை சற்று தூரத்தில் இருந்து கவனித்த ஸப்-கலெக்டர், "வக்கீலின் சம்சாரம் கொஞ்ச நேரத்திற்கு முன்பு வந்து உங்களிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போனதாகச் சொன்னீர்களே. அந்த வக்கீலின் சம்சாரம் இப்போது வந்திருப்பதாக சேவகன் சொன்னான். நீங்கள் இந்த அம்மாளை, "யார் நீங்கள்?" என்று கேட்கிறீர்களே!" என்றார்.

கந்தசாமி பிள்ளை:—முன்னே வந்தது இந்த அம்மாள் அல்ல.

(அப்போது ஸப்-கலெக்டர் சேவகனைக் கூப்பிட, அவனும் பக்கத்தில் வந்து நின்றான்)

சர்மா:—(சேவகனைப் பார்த்து) இந்த அம்மாள் தாம் யாரென்று உன்னிடம் சொன்னார்கள்?

சேவகன்:—வக்கீல் வயத்துநாதையருடைய சம்சாரம் என்று சொன்னார்கள்.

கந்தசாமி பிள்ளை:—(அந்த அம்மாளைப் பார்த்து) ஏன் அம்மா, நீங்கள் அந்த மாதிரி இவனிடம் சொன்னீர்களா?

அந்த அம்மாள்:—ஆம். சொன்னேன்.

கந்தசாமி பிள்ளை:—ஜட்ஜியின் சம்சாரத்தைப் பார்க்க வந்ததாகவும் நீங்கள் சொன்னீர்களா?

அந்த அம்மாள்:—ஆம். சொன்னேன்.



கந்தசாமி பிள்ளை:—(ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி) மிஸ்டர் லெப்பை, வக்கீல் வயத்துநாதையருடைய சம்சாரம் இங்கே வந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு கொஞ்ச நேரத்திற்கு முன்தான் போனார்கள். நேற்று என்னிடம் வந்த ரிப்போர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியின் கதை இப்போது மறுபடி ஆரம்பமாயிருக்கிறது. இது யாரோ வேஷதாரி என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இதற்குள் இருப்பது பெண்ணா, ஆணா என்பதும் சந்தேகமாயிருக்கிறது! ஆகையால் இந்த ஆசாமியை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய், லேடி டாக்டரை விட்டு சோதித்துப் பார்த்து, இது யாரென்பதைக் கண்டுபிடியுங்கள். ஒரு வேளை அதே கிருஷ்ணமாச்சாரிதான் இப்படி வந்திருக்கிறாரோ என்னவோ! உங்களுக்கு ஜெவான்களின் உதவி வேண்டுமானால் டெலிபோன் வழியாய்க் கூப்பிடுங்கள். அடேய் சேவகா; வாசற் கதவைமூடி வை—என்று பதைபதைப்போடு கூறினார்.

ஜட்ஜ் கந்தசாமி பிள்ளை அவ்விதம் கோபாவேசத்தோடு பேசி உத்தரவுகள் பிறப்பிக்கவே, அந்த ஸ்திரீயின் முகம் பிரேதக்களை அடைந்துவிட்டது. உடம்பும், கைகால்களும் தட தடவென்று ஆடுகின்றன. அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கி வழிகிறது. அவள் வாயைத் திறந்து பேசமாட்டாமல் தேம்பித் தேம்பி அழுது கட்டைவிரலைப் பார்த்தபடி நின்று தத்தளிக்கிறாள்.

அங்கு ஏற்பட்ட தகராறின் காரணத்தை அறியமாட்டாமல் அதுவரையில் பிரமித்துநின்ற நாகூர் மீரா லெப்பை கந்தசாமி பிள்ளையை நோக்கி மிகவும் விநயமாகப் பேசத்தொடங்கி, "எஜமான் இந்த அம்மாளின் விஷயத்தில் ஏதோ தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறமாதிரி இருக்கிறதே! நான் வக்கீலினுடைய வீட்டிற்கு மூன்று தடவைகள் போனேன். இந்த அம்மாள்தான் வக்கீலின் பக்கத்தில் இருந்தார்கள். எனக்கு நன்றாய் அடையாளம் தெரியும். ஆகையால் இந்த அம்மாள் சொன்னதில் தவறு எதுவுமில்லையே! நீங்கள் கோபிப்பதன் காரணம் விளங்கவில்லையே!" என்றார்.

அதைக் கேட்ட கந்தசாமி பிள்ளை அபாரமான வியப்போடு, "ஹா" என்று வீரிட்டலறினார். மற்றவர்கள் இருவரும் திடுக்கிட்டு, "என்ன! என்ன!" வென்று வினவினர். உடனே கந்தசாமி பிள்ளை அமரிக்கையடைந்தார். நிஜ மனைவி உண்மையைச் சொல்

விக் கொண்டு வந்திருக்க, அவள் வேஷக்காரி என்று தாம் நினைத்து அவளை நேருக்குநேர் தூஷித்துவிட்டோமே என்ற எண்ணமும் கழிவிரக்கமும் அவருடைய மனதில் உண்டாகிவிட்டன. அதுவன்றி, முன் வந்த ஸ்திரீக்கும் பின் வந்த ஸ்திரீக்கும் நடையுடை பாவனைகளில் அதிக வேறுபாடிருந்தது. முன் வந்தவள் துணிகரமானவளா யிருந்தாள்; அவள் நேரில் தம்மைப் பார்க்க விரும்பினாள். பின் வந்தவள் அபலையாகவும் நாணம், மடம், அச்சம், மிருதுத்தன்மை முதலியவைகளுடையவளா யிருந்தாள்; இவள் தம் மனைவியைப் பார்க்க விரும்பினாள். முன் வந்தவள் வேஷதாரி; பின் வந்தவள் உண்மையில் வக்கீலின் மனைவி. அதனாலேயே பின்னவள் ஸ்திரீ லக்ஷணங்கள் வாய்ந்தவளா யிருந்தாளென்பது விளங்கியது. எனவே கந்தசாமி பிள்ளை ஒருபுறத்தில் ஆச்சரியமும், இன்னொரு புறத்தில் விசனமும் அடைந்தவராய், மற்ற இருவரையும் பார்த்து, "கொஞ்ச நேரத்திற்கு முன் ஓர் அம்மாள வந்து தாம் இந்த வக்கீலின் மனைவியென்று சொன்னார்கள். அதை உண்மையென்று நான் நம்பி, இந்த அம்மாள் வேஷதாரி என்று நினைத்துக் கோபமாகப் பேசிவிட்டேன். இப்போது ஸப்-இன்ஸ்பெக்டர் சொல்வதைக் கேட்க, முன்னே வந்தது வேஷதாரி என்பது நிச்சயமாகிறது. ஆனால் அந்த வேஷதாரி வந்ததில் ஒரு பெரிய நன்மை உண்டாயிற்று. நேற்று நடந்த திருட்டில் இந்த அம்மாளுடைய தம்பி சம்பந்தப்படவில்லை என்பதை அந்த வேஷதாரி திருப்திகரமாக மெய்ப்பித்துவிட்டுப் போனாள். அந்த அம்மாள் வந்து இவர்கள் விஷயத்தில் அவ்வளவு பெரிய அநுகூலத்தைச் செய்துவிட்டுப் போக வேண்டிய காரணமென்ன வென்பதுதான் விளங்கவில்லை. (அம்மணியம்மாளை நோக்கி) அம்மா, நான் சற்றுமுன் கோபமாய்ப் பேசியதைப் பாராட்டவேண்டாம். சற்றுமுன் இன்னோர் அம்மாள் வந்து, தாம் இந்த வக்கீலின் சம்சாரம் என்று சொன்னதால், உங்கள்மேல் நான் சம்சயம் கொண்டேன். இப்போது உண்மை விளங்கிவிட்டது. என் சம்சாரம் அவளுடைய தகப்பனார் வீட்டிற்குப் போயிருக்கிறாள். நீங்கள் உங்கள் தம்பியின் சம்பந்தமாய் அவளைப் பார்க்க வந்திருக்கும் பட்சத்தில், உங்கள் கோரிக்கை அநுகூலமாய் முடிந்துவிட்டதாக நினைத்துக்கொள்ளலாம். இனி போலீஸார் உங்கள் தம்பியைத் தேடமாட்டார்கள். நீங்கள் சந்தோஷத்தோடு போகலாம்" என்றார்.



அதைக் கேட்ட அம்மணியம்மாள் அபரிமிதமான சந்தோஷமடைந்தவளாய், தனக்கு முன் யார் வந்து தன்னைப்போல் நடித்திருப்பாள் என்பதைப்பற்றி மிகுந்த ஆச்சரியமடைந்தவளாய் கந்தசாமி பிள்ளையிடம் செலவு பெற்றுக்கொண்டு வெளியில் போய்ச் சேர்ந்தாள்.

பிறகு ஸப்-இன்ஸ்பெக்டர், "ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியாக வந்தவன் திருடன் என்பது தெரிகிறது. இன்று உங்களிடம் முதன் முதலில் வந்த அம்மாள் நல்ல எண்ணத்தோடு வந்திருக்கிறார்கள்; அந்த வக்கீலோ, அவருடைய மைத்துனரோ கிருஷ்ணமாச்சாரி என்று யாரும் இல்லையென்று தெரிந்துகொண்டு, அதை உங்களுக்குத் தெரிவிக்கும்படி ஸ்திரீபோல் வந்திருப்பார்களோ என்ற எண்ணம் என் மனதில் உண்டாகிறது" என்றார்.

கந்தசாமி பிள்ளை:—அவர்கள் ஸ்திரீ வேஷம் போடுவதேன். தினசரி மூட்டை ஆபீஸில் கிருஷ்ணமாச்சாரி என்னும் ரிபோர்ட்டரே இல்லை என்று ஒரு கடிதத்தில் எழுதி எனக்கு அனுப்பியிருக்கலாமே; அல்லது டெலிபோன் வழியாகச் சொல்லி இருக்கலாமே. அதற்காக பெண் வேஷம் போடுவதேன்.

ஸப்-கலெக்டர்:—ஒரு ஸ்திரீ கூசாமல் ஒருவரைத் தன் புருஷரென்று குறிக்கவேண்டுமானால், அவள் அவருடைய சொந்த மனைவியா யில்லாவிடில், வைப்பு மனைவியா யிருப்பாள்.

கந்தசாமி பிள்ளை:—அப்படியானால், வயத்துனாதையர் சம்சாரத்தைத் தவிர, இன்னொரு வைப்பு வைத்துக்கொண்டிருக்கிறார் என்கிறீர்களா?

ஸப்-கலெக்டர்:—அப்படியாவது நினைக்கலாம்; இல்லையானால், அவள் அந்த ராமநாதனுக்கு வேண்டியவளா யிருப்பாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(கந்தசாமி பிள்ளையை நோக்கி) நான் செலவு பெற்றுக்கொள்ளுகிறேன். என்னாலான முயற்சிகளைச் செய்து போலி ரிபோர்ட்டர் கிருஷ்ணமாச்சாரியை கூடிய விரைவில் பிடிக்கிறேன்—என்று கூறி செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டார். பிறகு ஸப்-கலெக்டர் அநந்தராமையர் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போய்விட்டார்.

சுமார் அரைமணி காலம் சென்றது. கந்தசாமி பிள்ளைக்கு சமையல்காரர் சிற்றுண்டி கொணர்ந்து வைத்தாராதலால், அவர் அதை

உண்டுகொண்டிருந்த சமயத்தில் சேவகன் மறுபடி பிரஸன்னமாய், "எஜமானைப் பார்க்க யாரோ ஓர் அம்மாள் வந்திருக்கிறார்கள்" என்றான்.

கந்தசாமி பிள்ளை ஆச்சரியமடைந்து, "தாம் யாரென்று சொன்னார்களா?" என்றார்.

சேவகன் :—யாரோ ஒரு வக்கீலின் சம்சாரமாம்.

கந்தசாமி பிள்ளை :—(திடுக்கிட்டுத் தமது போஜன காரியத்தை முடித்துவிட்டெழுந்து) இந்த ஊரில் வக்கீல்களின் சம்சாரங்களுக்கு இன்று வேறு வேலை இல்லைபோலிருக்கிறது; ஸர்க்கியூட்டில் கிளம்பிவிட்டார்களா! முன்னே வந்த இரண்டு பேர்களில் யாராவது ஓர் அம்மாளா?

சேவகன் :—இல்லை. இந்த அம்மாள் புதிய அம்மாள்.

கந்தசாமி பிள்ளை :—சரி; இங்கே வரச்சொல். நீயும் சமயற்காரரும் கவனித்துக்கொண்டு, சுவருக்குப் பக்கத்தில் இருங்கள்.— என்றார்.

உடனே சேவகன் போக, ஓர் அம்மாள் கந்தசாமி பிள்ளைக்கெதிரில் வந்து நின்றாள். அவள் ஸ்மார்த்த ப்ராம்மண ஸ்திரீபோல் இருந்தாள்.

கந்தசாமி பிள்ளை :—யார் அம்மா நீங்கள்?

அம்மாள் :—எங்காத்துக்காரா வைக்கல். அவாளெ ஓங்கிளுக்குத் தெரிஞ்சிருக்குமே!

கந்தசாமி பிள்ளை :—இந்த ஊரிலுள்ள வக்கீல்கள் எல்லாரும் எனக்குத் தெரிந்தவர்களே! உங்கள் புருஷர் இன்னார் என்பது தெரியவில்லையே!

அம்மாள் :—அவாளோடெ பேரை நான் எப்பிடிச் சொல்லட்டும். பொண்ணாப் பொறந்தவா புருஷாளோடெ பேரைச் சொல்லப் போமோ.

கந்தசாமி பிள்ளை :—சரி; நீங்கள் அதைச் சொல்லவேண்டாம். என்ன காரியமாக என்னிடம் வந்தீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

அம்மாள்:—ஆரோ பூலீஸ் ஸப்-இனிஸ்பேட்டராம். அவனுக்கு வேறே ஜோலி இல்லெப்போலிருக்கு! அவன் நேத்திக்கி ராத்திரி எங்காத்துக்கு வந்து, எங்காத்துக்கார் பூஜைபண்ணிண்டிருக்கச்சே, கூப்டு எங்களெ ரொம்ப அவமானப்படுத்திப்புட்டான். எந்தம்பி



ஓங்க பங்களாவுக்குள்ளெ நொழைஞ்சி ரூவாயெத் திருடிண்டு பேட்டாணும்; ஓங்களெத் தலைகீணக் கட்டிப் போட்டாணும். இப்பிடியெல்லாம் சொல்லி அந்த ஸப்பினிஸ்பேட்டர் எங்காத்துக்காராளெ மெரட்டினான். அது நெஜமான்னு ஓங்கக்கிட்டக் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன். ஓங்கிளுக்கும் ஆம்படையா கொழந்தை குட்டியெல்லாம் இருக்கு; அவாள்ளாம் நோவு நொடியில்லாமெ நன்னா இருக்கணும். நீங்களும் வழிதெரிஞ்சு நடக்கணும். அன்னியாயமா ஒத்தன்பேருலே அபாண்டப்பழி போட்டா, அம்பா எல்லாருக்கும் ஒரு கரண்டி எண்ணெ குடுத்துடுவா; நீங்க நெஜமாச் சொல்லுங்கொ. எந்தம்பியெ நீங்க கண்ணாலெ பாத்தெயளா! போனவருஷந்தான் அவனெப் புடிச்சு தண்டிச்சிங்க. அது ஞாயந்தான். நேத்து என்ன நடந்துது?

கந்தசாமி பிள்ளை :— (தமது செவிகளை நம்பாமல் திகைத்து அந்த அம்மாளை வியப்போடு பார்த்து) அப்படியானால் நீங்களும் வக்கீல் வயத்துநாதையருடைய சம்சாரமா?

அம்மாள்:—என்ன ஓங்கிளுக்கு அந்தமாதிரி சந்தேகம் உண்டானது! அவாதான் எங்காத்துக்காரா. நேக்கென்னத்துக்குப் பொய் சொல்லணுங்கறது. ஓங்ககிட்ட நெஜமான சங்கதியெத் தெரிஞ்சண்டு போகணும்னு வந்தேன். நீங்க ஞாயத்துக்குப் பயந்து சொன்னாச் சொல்லுங்கொ. இல்லாட்டா எம்பாட்டுலே போறேன்—என்றாள்.

அதைக் கேட்ட கந்தசாமி பிள்ளை தாம் காண்பது கனவோ, நிஜமான காட்சியோ என்று சம்சயித்தார். அன்றையதினம் வக்கீல் வயத்துநாதையருடைய மனைவிகள் என்று ஏற்கனவே இரண்டு பேர்கள் வந்துவிட்டுப்போயின ராதலால், அதேமாதிரி சொல்லிக்கொண்டு, மூன்றாவது ஸ்திரீ யொருத்தி வந்தது அவரால் நம்பமுடியாத ஆச்சரியமா யிருந்தது. ஆனால், இரண்டாவது தடவை வந்தவள் உண்மையில் அவருடைய மனைவி என்பது நிச்சமாய்விட்டதாகையால், இப்போது வந்திருப்பவள் வேஷதாரி என்பதும் சந்தேகமறத் தெரிந்தது. ஆகையால் போலீஸாரை அழைத்து அவர்களிடம் இவளை ஒப்புவிக்கவேண்டுமென்ற கருத்துடன், அந்த ஸ்திரீயைப் பார்த்து, "சரி; உங்களை மிரட்டிய ஸப்-இன்ஸ்பெக்டரை அழைத்து விசாரிக்கிறேன். கொஞ்சம் இருங்கள்" என்று கூறிய படி டெலிபோனண்டை சென்று, ஸப்-இன்ஸ்பெக்டரிடம் சங்கதியைச் சொல்ல, அவர், "இதோ வந்து விட்டேன்" என்றார்.

அதற்குப் பிறகு ஐந்தே நிமிஷத்தில் நாகூர் மீரா லெப்பையும் இரண்டு ஜெவான்களும் வந்து சேர்ந்தனர். ஸப்-இன்ஸ்பெக்டர் அங்கு நின்ற அம்மாளை உற்று நோக்கியபின் கந்தசாமி பிள்ளையைப் பார்த்து புரளியாகப் புன்னகை செய்து, "வக்கீல் வயத்துநாதையருக்கு இன்று முகூர்த்த தினம்போல் இருக்கிறது. அவருக்கு உண்மையான சம்சாரத்தைத் தவிர வேறு ஒரு ஜதை சம்சாரங்கள் ஏற்பட்டு விட்டார்களே! ஏனம்மா, மெய்யாகவே நீங்கள் வக்கீல் வயத்துநாதையருடைய சம்சாரமா?" என்றார்.

அம்மாள்:—அடே கட்டேலே போறவனே! நேக்கு என்னும் படையான் கூட சொந்தமில்லாமெ அடிக்கப் பாக்கறியடா! நன்னாருக்குடா நீ பூலிஷ் அதிகாரம் பண்றது!—என்றாள்.

அதைக் கேட்கவே, ஸப்-இன்ஸ்பெக்டருக்குக் கடுமையான கோபம் பொங்கிவிட்டது. அவர் அவளைப் பார்த்து, "ஏ பிள்ளை, உனக்கு ஏதாவது பைத்தியம் கிபித்தியம் உண்டா! என்ன மரியாதை இல்லாமல் தக்க பிக்கா என்று உளறுகிறாய்!" என்றார்.

அம்மாள்:—நானு தக்கா பிக்கான்னு உளர்றேன். நீன்னு நேத்திக்கி ராத்திரி வந்து பைத்தியமாட்டமாப் பேத்தினே! என்னைப் பாத்து "பிள்ளேங்கிறியே?' நான் ஒங்க வீட்டு மாட்டுக்காரியாடா! நாக்கை உள்ளே வச்சுப் பேசு—என்றாள்.

அப்போது ஜெவான்களில் ஒருவன் மிக அருகில் நெருங்கிப் பார்த்தானாதலால், அவன் வியப்போடு, "முகமெல்லாம் க்ஷவரம் பண்ணினமாதிரி மயிரின் அடிக்கட்டை தெரிகிறதே!' என்றான்.

அதைக கேட்கவே, ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியவர்களும் உற்றுப் பார்த்துவிட்டு, "ஓகோகோ! அடா டா ஆண்பிள்ளையல்லவா வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறான்!" என்றனர். கந்தசாமி பிள்ளை அபாரமான வியப்பினால் மூக்கின்மேல் விரலை வைத்துக் கொண்டார். உடனே நாகூர் மீரா லெப்பை துள்ளிப் பாய்ந்து, "இப்படி வா ஓய் சதுருக்கு; உன் அழகைப் பார்க்க வேண்டும்" என்று புரளியாகக் கூறியபடி, அந்த அம்மாளுடைய சேலைத் தலைப்பைப் பிடித்து துச்சாதனன் திரௌபதி வஸ்திராபகரணம் செய்ததுபோல் துகிலுரியத் தொடங்கினார்.

199435